பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 11 திங்கட்கிழமை (27.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 243

# தமிழர் தலைமைத்துவத்துக்கு வெற்றிடம் என ஒன்றில்லை

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 27



ஈழத் தமிழர்களின் தலைமைத்துவத்துக்கு வெற்றிடம் என ஒன்றில்லை. விடுதலைப் புலிகளின் மறைவுக்குப் பின்னர் தமிழ் மக்களின் தலைமைத்துவத்துக்கு வெற்றிடத்தைப் போன்று ஒருநிலைமை காணப்படினும் கூட, அப்படி ஒரு வெற்றிடம் இல்லை என்றே கூறுகிறேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன்.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு நேற்று வழங்கிய ஒரு செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் இளைஞர் ஆஸியில் விபத்தில் பலி!

கொழும்பு ஜூலை 27

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற கார் விபத்தில் இலங்கைத் தமிழ் இளைஞர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

அவுஸ்திரேலிய மிடில்பிரோ வீதிக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்துடன் தொடர்புடைய அனைவரும் அவுஸ்திரேலியாவில் கல்வி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் கந்தசுவாமி ஆலயக் கொடியேற்றம் இன்று



யாழ்ப்பாணம், ஜூலை27

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளன. கொடியேற்ற தினமான இன்று முந்திய வருடங்களை விட மிகப் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியூடான பஸ் சேவை இன்று; ஒன்றுவிட்ட ஒருநாள் நடைபெறும்

### அமைச்சர் மகிந்தானந்த அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9 வீதியூடாக கொழும்புக்கான பயணிகள் பஸ் சேவை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும். மின்வலு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். சுதந்திரக்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது அமைச்சர்மேலும் கூறியதாவது:-

பஸ்சேவையை ஒன்றுவிட்ட ஒரு நாள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது தொடர்பில் கொழும்பில் உயர்மட்ட மாநாடு ஒன்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை பிரதேசத்தில் நேற்று முதலாவது தேர்தல் வாகனப் பிரசாரப் பேரணி

### ஈ.பி.டி.பி. கட்சி நடத்தியது

யாழ்ப்பாணம், ஜீலை 27

எதிர்வரும் யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலை ஒட்டி தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்கும் பொருட்டு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி நேற்று யாழ். நகரில் மாபெரும் தேர்தல் பேரணியை நடத்தியது.

இந்தப் பேரணியில் ஏராளமான வாகனங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்குபற்றினர்.

யாழ்.மாநகரசபைத் தேர்தலை முன்னிட்டு நடைபெற்ற முதலாவது வாகனப் பிரசாரப் பேரணி இதுவாகும்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமான பேரணி யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட சகலவீதிகளிலும் ஊர்வலமாகச் சென்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க புலம்பெயர் பணியக அதிகாரி வவுனியா முகாம்களுக்கு நேற்று விஜயம்

### அமைச்சர்கள் இருவர் கூடச் சென்று விளக்கினர்

கொழும்பு, ஜூலை 27

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் வாழும் மக்களின் நிலைமைகளைக் கண்டறிவதற்காக அமெரிக்காவின் அகதிகளுக்கான புலம்பெயர் பணியகத்தின் உதவிச் செயலர் எரிக். பி.ஸ்சுவாட்ஸ் நேற்று அங்கு சென்று பார்வையிட்டார்.

வவுனியா முகாம்களில் வாழும் மக்களுக்கு அரசு வழங்கிவரும் அடிப்படை வசதிகள் குறித்து அமைச்சர் றிசாத் பதியுதீன், அமெரிக்காவின் அகதிகளுக்கான புலம்பெயர் பணியகத்தின் உதவிச் செயலருக்கு விளக்கினார்.

இந்த விஜயத்தின் போது அவர்களுடன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களில் தங்கியுள்ள பல்கலை. மாணவர்களை பதிவு செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 27

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நாளை மறுதினம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொகான் சமரநாயக்க முகாம்களுக்கு விஜயம்

(16ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச நாணய நிதியக்கடன்

## கடும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் இணங்கியதாகத் தகவல்

கொழும்பு, ஜூலை 27

இலங்கைக்கு 260 கோடி டொலர் (சுமார் 26 ஆயிரம் கோடி ரூபா) கடன் தொகையை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் சம்மதித்துள்ள போதும் அதற்காக இலங்கை கடும் பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என நாணயநிதியம் நிபந்தனை விதித்ததாகவும் அதற்கு இலங்கை இணங்கியதன் அடிப்படையிலேயே கடனுதவிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

* பெற்றோலிய வகைகள், மின்சார முகவர் அமைப்புகள் மற்றும் அரச நிறுவனங்களில் துண்டுவிழும் தொகையைக் குறைத்தல்.
* வெளிநாட்டுக்கடன்களைப் பெறுவதைத் தவிர்த்தல்.
* மானியங்களை வெட்டுதல்.
* இராணுவச் செலவீனத்தைக் குறைத்தல்.
* ஏனைய பொருளாதார விடயங்க

(16ஆம் பக்கம் பார்க்க)

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
TCN EXPRESS
வாடிக்கையாளரின் நலன்கருதி
10% - 25 % விசேட கழிவு
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளன.

எதிர் வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத்திரு விழாவும், 4ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி தீர்த் தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (அ-7)


## மனோதத்துவ வைத்தியம்

*(General Psychotheraphy)*

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். சகலவிதமான நோய்களிலிருந் தும் குணமடைய பிரபல வைத்திய நிபுணரைச் சந்தியுங் கள்.

இல. 12. சிவகுருநாதர் லேன்,
Expo முன்ஒழுங்கை, யாழ்ப்பாணம்,
தொ.பே 0719315664, 021 222 2330
(யாழ்.றோட்டறிக் கழக கேட்போர் கூடம்)




## சாவகச்சேரி - நுணாவிற்குளம் அருள்மிகு முருகன் ஆலய
## திவ்விய மஹோற்சவம்-2009

**உற்சவகால விபரங்கள்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 27.07.2009 திங்கட்கிழமை | முற்பகல் 10.15 மணிக்கு |
| வேட்டைத் திருவிழா | 02.08.2009 ஞாயிற்றுக்கிழமை | மாலை 5.00 மணிக்கு |
| சப்பறத் திருவிழா | 03.08.2009 திங்கட்கிழமை | மாலை 5.00 மணிக்கு |
| தேர்த்திருவிழா | 04.08.2009 செவ்வாய்க்கிழமை | முற்பகல் 11.00 மணிக்கு |
| தீர்த்தத் திருவிழா | 05.08.2009 புதன்கிழமை | முற்பகல் 11.00 மணிக்கு |
| சங்காபிஷேகம் | 06.08.2009 வியாழக்கிழமை | காலை 09.00 மணிக்கு |
| திருக்கல்யாணம் | 06.08.2009 வியாழக்கிழமை | பி.ப. 03.00 மணிக்கு |

தினமும் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் பூஜாரம்பமாகும்.

03.08.2009 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு
[illegible] சித்திரத்தேர் வெள்ளோட்டம்

ஸ்தபதி:- விஸ்வ பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி மகேந்திரராஜா (மட்டுவில் மத்தி, சிவன்கோவிலடி)

மஹோற்சவ பிரதம குரு: "சிவாகம கிரியா பூஷணம்"
சிவஸ்ரீ க.சிவதாசக் குருக்கள் (கொக்குவில், யாழ்ப்பாணம்)

ஆலய குரு: பிரம்மஸ்ரீ இ.தேவபாலசர்மா.

கைதடி நுணாவில், சாவகச்சேரி. ஆலய பரிபாலன சபையினர்.

## கலை இலக்கிய சங்கவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

அகில இலங்கை கலை இலக்கிய சங் கம் நடத்தும் மாபெரும் கலை இலக்கிய விழா எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு அல்லையம்பதி வடி வேலர் மணி மண்டபத்தில் அகில இலங்கை கலை இலக்கிய சங்கத் தலைவரான பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடா திபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து கொள் வார். (அ-7)

## ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் தகவல் தொழில் நுட்ப முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித் தியாலயத்தில் சிறுவர்களுக்கான தகவல் தொழில் நுட்ப முகாமும் சான்றி தழ் வழங்கும் நிகழ் வும் நாளை செவ் வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு வித்தியாலய முரு கேசு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய முதல்வர் கே.ரவிச் சந்திரன் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ்.வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்துகொள்வார். (அ-7)

## நெஞ்சை விட்டகலாத எட்டாண்டு நினைவுகள்

அன்னை மடியில்
07 ★ 09 ★ 1940



ஆண்டவன் பாதங்களில்
26 ★ 07 ★ 2001

### அமரர் வயிரமுத்து வரப்பிரசிங்கம்

(ஓய்வு பெற்ற அஞ்சலக ஊழியர்)

திதி: பூர்வபக்க ஷஷ்டி (27.07.2009)

அன்பெனும் பாசப்பிணைப்பில் பிணைந்த அன்புத் தந்தையே!
நீங்கள் எமைவிட்டுப்பிரிந்து சென்று எட்டாண்டுகள் ஓடி
மறைந்ததே அப்பா எத்தனை ஆண்டுகள் வந்தாலும் எங்கள்
உயிர் உள்ளவரை நெஞ்சை விட்டு அகலாது அப்பா
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்போமாக


நி.மு: கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
த.மு: கனையோடை அம்மன் வீதி,
"நவாலி" தெற்கு, மானிப்பாய்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(87362)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
28 ★ 04 ★ 1947



உதிர்வு
27 ★ 07 ★ 2006

### அமரர் கந்தையா சித்திரவடிவேல் (நடனி)

ஈரவிழிகள் காய்ந்துபோக முன்
மூன்றாண்டு ஓடி மறைந்ததையா
விஞ்சும் பெருநிலவாய் வழிகாட்டிய - தந்தையே
அழுகுரல் கேட்க உறவுகள் ஓடிவர
உனைக்காண முடியாமல் தனிமையில் - நான்
அழுத நாளைத்தான் மீட்டுப் பார்ப்போமோ
ஈரவிழிப் பாதையைத் திரும்பித்தான் பார்ப்பேனோ
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

சுப்பர்மடம்,
பருத்தித்துறை. (சி/559908)

மகன் சி.அமிர்தலிங்கம் (செல்வன் - நோர்வே) குடும்பத்தினர்.

## 30ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



### கருணாநிதி கஜன்

தோற்றம்
27 ★ 07 ★ 1979

மறைவு
04 ★ 01 ★ 2005

ஆண்டுகள் பல ஆனாலும்
ஆறாத்துயர் குறையவில்லை
மீளாத் துயிலில் நீ சுவர்க்கத்தில்
விழித்திருக்கிறாய் எம் இதயத்தில்
மீண்டெழுந்து ஓடிவா
முப்பதாவது அகவையைக்
கொண்டாட
காத்திருக்கின்றோம் என்றும் அன்புடன்

212, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## நல்லூர் முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் கோட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர் களுக்கான கலந்துரையாடல் இன்று திங் கட்கிழமை பி.ப ஒரு மணிக்கு யாழ். பரி யாக்கேவா முன்பள்ளியில் நடைபெறவுள் ளது.

இந்தக் கலந்தரையாடலுக்கு நல்லூர் கோட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர் களையும் சமுகந்தரும்படி ஆரம்பப் பிள்ளைப்பருவ பராமரிப்பு மேற்பார்வை யாளர் திருமதி மாலதி விவேகானந்தன் கேட் டுள்ளார். (1-7)


## சாரதி தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு றோலர் (வீதி செப்பனிட, கல் மிதிக்கும் இயந்திரம்) இயக்கக் கூடிய முன் அனுபவம் உள்ள ஆள் தேவை.
தொடர்புகளுக்கு:- 0718414565

## வேலையாள் தேவை

**டிலன் ஹோட்டல்**

யாழ்.நகரில் இயங்கிவரும் பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு, சிற்றுண்டி தயாரிப்பவர், சப்ளையர் உடன் தேவை. மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.
தொடர்பு : 'டிலன் ஹோட்டல்,'
இல.133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## இறைச்சிக்கோழிவிற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 100 ரூபாவால் விலை குறைக்கப்பட்டுள்ளது.

**ராஜீவ்**
கால்நடைத் தீவன விற்பனை நிலையம்
ஆனைக்கோட்டைச் சந்தி,
T.P .NO: 222 2867
(87305)


## கண்டெடுத்துத் தருவோருக்கு தகுந்த சன்மானம்


கிறிஸ்ரியன் லியோ என்ற என்னுடைய கனடா அடையாள அட்டை மற்றும் எனது கனடா ஆவணங்களுடன் எனது பேர்ஸ் யாழ்.நகரப் பகுதியில் நேற்று தொலைந்து விட்டது. அதில் இருந்த என்னுடைய மேற் படி ஆவணங்கள் எனக்கு முக்கியமானவை. அவற்றைக் கண்டெடுத்து ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

0777044253 என்ற தொலைபேசி மூலம் தகவல் தரலாம் அல்லது தபால் மூலம் இல.15, [illegible] ஒழுங்கை மானிப்பாய் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

- கிறிஸ்ரியன் லியோ-

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
13 ★ 12 ★ 1931



விண்ணில்
26 ★ 06 ★ 2009

### சுப்பிரமணியம் சோமநாதன்

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்-மின்சாரசபை)

விண்ணை உறைவிடமாக்கி
கண்ணில் நீர் சொரிய வைத்து
எம்மை விட்டுச் சென்றதேனோ?

இன்று (27.07.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய பொலிஸ்நிலைய வீதி,
சாவகச்சேரி.

(87357)

ஜெ.சுதாகர் (பேரமகன்)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் மாணிக்கவாசகர்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் 29, நல்லூர், செட்டித்தெரு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மாணிக்கவாசகர் (இளைப் பாறிய ஆசிரியர்) 25.07.2009 சனிக்கிழமை லண்ட னில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.07.2009 வியா ழக்கிழமை லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, செட்டித்தெரு லேன், நல்லூர்.
T.P.-00442082007350

தகவல்:
பிள்ளைகள் (லண்டன்).

### திருமதி ஜெகதாம்பிகை பரமேஸ்வரன்



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதாம்பிகை பரமேஸ்வரன் நேற்று (26.07.2009) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் மாணிக்கம் பரமேஸ்வரனின் அன்பு மனைவியும் பவித்திரா, கிதுஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்றவர்களான சி.நாகேசு - கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - கதிராசி தம்பதியினரின் அன்பு மருமகளும், நா.சந்திரசேக ரன், நா.ஞானசேகரன், நா.ஜெகசேகரன், நா.குலசேகரன், செல்வி நா.ஜெகதீஸ்வரி, நா.குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருபா, கனி, வனஜா ஆகியோரின் அன்பு மைத் துனியும், நா.ஞானச்சந்திரனின் மருமகளும், மா.விக்னேஸ்வரன், திருமதி வ.விக்னேஸ்வரி, மா.குக னேஸ்வரன், காலஞ்சென்ற திருமதி மு.பரமேஸ்வரி மற்றும் மா.புவனேஸ்வரன், திருமதி த.குகனேஸ்வரி, மா.ஜெக தீஸ்வரன் (ஆசிரியர்), மா.ஜோதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு இன்று (27.07.2009) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
மா.பரமேஸ்வரன்
(கணவர் - ஈஸ்வரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நாட்டின் பொருளாதாரக் குடுமி இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் கைகளில்!

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்க அங்கீகரித்துள்ள இருநூற்றைம்பது கோடி டொலர் (சுமார் இருபத்தையாயிரம் கோடி ரூபா) கடனின் மூலம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகள் மேம்பாடடையும் என அரசுத்தரப்பு புளுகினாலும் கூட, இந்தக் கடனின் பின்புலத்தில் பெரும் நெருக்கடிகள், சிக்கல்கள் அரசுக்கு இருப்பது வெளிப்படையாகவே புலப்படுகின்றது.

வன்னியில் யுத்தம் தீவிரமடைந்தபோதும் அதன் பின்னருமான நிலைமைகளின் போதும் மனித உரிமைகளை மதிப்பதில் இலங்கைத் தரப்புக் காட்டிய அசிரத்தை காரணமாக, இந்தக் கடன் திட்டத்தை அங்கீகரிக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநர் சபைக் கூட்டத்தில், இது தொடர்பான பிரேரணை மீதான வாக்களிப்பில் பங்குகொள்ளலாமல் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற பிரதான மேற்குலக நாடுகள் ஒதுங்கிக்கொண்டிருக்கின்றன. இப்படித் தம்மை ஒதுக்கிக்கொண்டதன் மூலம் - அல்லது ஒதுங்கிக்கொண்டதன் மூலம் - ஒரு காட்டமான செய்தியை இலங்கைக்குப் புரியவைக்க அவை முயன்றிருக்கின்றன என்பதும் தெளிவு. ஆனால் அதன் அர்த்தத்தை இலங்கையின் அதிகார வர்க்கம் புரிந்துகொண்டதா, புரிந்துகொள்ள முயலுமா என்பவை தெரியவில்லை.

மேலும் கேட்டதை விடக் கூடுதலான தொகை வழங்கப்பட்டிருப்பதால், அது தமது அரசுக்குக் கிடைத்த பெரும் கீர்த்தி என்பது போல அர்த்தப்படுத்தும் நடவடிக்கைகளும் கொழும்பினால் முன்னெடுக்கப்படுகின் றன.

ஆனால் இது ஒன்றும் 'சும்மா' வழங்கப்பட்ட கடன் உதவி அல்ல. பல்வேறு கஷ்டம் தரக்கூடிய - நெருக்கடியை உருவாக்கக்கூடிய - கடும் நிபந்தனைகளுடன் தான் இந்தக் கடன் வழங்கப்பட்டிருக்கின்றது என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விவகாரமாகும்.

* பெற்றோலியம், மின்விநியோகம் மற்றும் அரச நிறுவனங்களால் இனி எதிர்காலத்திலும் பெரும் கடன் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டுவரவேண்டும். அதாவது இச்சேவைகளுக்காகப் பெருமளவு அரச மானியத்தை வாரி இறைக்கக்கூடாது. இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் இத்துறைகளில் நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்காக கட்டணங்களை அதி கரித்து அவற்றுக்கான பொறுப்பை மக்கள் மீதுவிட வேண்டும்.
* அரச மானியங்களைஅடியோடு குறைக்க வேண்டும்.
* இராணுவச் செலவீனங்களைக் குறைக்க வேண்டும்.
* வெளிநாட்டு கடன்களைக் குறைக்க வேண்டும்.
* பின்பற்றிநடைமுறைபடுத்தப்படவிருக்கும் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து முற்கூட்டியே நாணயநிதியத்துடன கலந்தாலோசித்து இணக்கம் காண வேண்டும்.
* வருமானம் வீழ்ச்சி அடைய்புமானால் நடைமுறைச் செலவீனத்தைக் குறைக்க விரைந்து பொருத்தமான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும்.அதாவது பொருள்கள், சேவைகள் போன்றவற்றின் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும்.அல்லது துண்டு விழும் தொகையைச் சமாளிப்பதற்காக வரிகளை உயர்த்த வேண்டும்.

- இவை விதிக்கப்பட்ட நிபந்தனைகளில் சிலவாகும்.

இவற்றை நோக்கும் போது இந்தக் கடனைப் பெறுவதற்காக நாட்டின் பொருளாதார விடயங்களையும் கொள்கைகளையும் தீர்மானிக்கும் முக்கியபொறுப்பை சர்வதேச நாணயநிதியத்திடம் கையளித்து அதனிடம் சரண் அடைந்திருக்கிறதுஅரசு என்பது தெளிவு. நாட்டின் பொருளாதார குடுமி இப்போது நாணயநிதியத்தின் கைகளில் என்ற மாதிரித் தான் நிலைமை உள்ளது.

' அரசு கூறுவதற்கு மாறாக இலங்கையின் பொருளாதாரத்தை தீர்மானிப்பதில் சர்வதேச நாணய நிதியம் அதீத செல்வாக்குச் செலுத்தும் நிலையே இப்போது ஏற்பட்டிருக்கிறது' -என்று பொருளாதார ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

இந்தக் கடனைப்பெறுவதற்கான 'ஒப்புதல் கடிதத்தின்' இலங்கையின் மத்திய வங்கி ஆளுநரும், நிதி அமைச்சரும் ஒப்புதல் கையொப்பம் இடுவதன் மூலம் இந்த நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும் என்றும் நாணய நிதியம் வற்புறுத்தி இருக்கிறது.

நாட்டின் நிதி அமைச்சர் பதவியையும் ஜனாதிபதியே வகிக்கின்றார். ஆனால், இத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கும் கடிதத்தில் ஒப்பம் இடுவது இழுக்கு எனக் கருதப்பட்டதால் அதனைத் தவிர்க்கவும் ஓர் உத்தி பயன்படுத்தப்பட்டிருப்பதாக இப்போது செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இப்பிரச்சினையை சமாளிப்பதற்காக பிரதி நிதி அமைச்சராகப் பணியாற்றும் ரஞ்சித் சியாம்பலபிட்டியவுக்கு தற்காலிகமாக பதில் நிதி அமைச்சர் பதவி நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. பதில் நிதி அமைச்சர் என்ற கோதாவில் அவர் அதில் ஒப்பமிட்டு இருக்கின்றார். அதாவது இந்தக் கடிதத்தில் ஒப்பம் இடுவதற்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எகிப்தில் தங்கியிருந்த காலத்தை அவர் பயன்படுத்தி இருக்கிறார்.

எதுஎப்படியோ பல்வேறு சர்சைகளுக்கு மத்தியில் இந்தக் கடனை ராஜபக்ஷ அரசு ஈட்டிவிட்டது.

இதை வைத்துக்கொண்டு அரசு என்ன செய்யப் போகுகிறது? போரினால் பேரழிவுகளைச் சந்தித்து அவலத்தின் எல்லையில் அல்லலுற்றுக்கொண்டிருக்கும் தமிழர்களுக்கு நீதி செய்ய ஏதேனும் உருப்படியான காரியங்களை ஆற்றுமா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன்; மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையுமா?

**26.07.2009 அன்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை தனது வாராந்த அரசியல் விமர்சனத்தில் எழுதியிருந்த கட்டுரையின் ஒரு பகுதி இது.**

இரண்டு மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த வேளையில் அடைந்த மகிழ்ச்சி உற்சாகத்தைப் போலவே, சர்வதேச நாணய நிதியம் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க சம்மதித்திருப்பது குறித்தும் அரசும் அதன் ஆதரவாளர்களும் மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார்கள். கடந்த வெள்ளிக்கிழமை வாஷிங்டனில் நடைபெற்ற நாணய நிதியத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் மேற்படி கடனை வழங்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வாக்கெடுப்பின்போது உலகின் மிக முக்கிய நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் கலந்து கொள்ளாமல் இருந்துவிட்டன.

### உறவுகளின் மோசமான நிலை

இந்த நடவடிக்கை அந்த நாடுகளின் கொள்கைகளை வெளிப்படுத்துவதாக மட்டுமல்ல, கொழும்புக்கும் அந்த நாடுகளுக்குமிடையில் உறவுகள் எந்த அளவுக்கு மோசமடைந்துள்ளன என்பதையும் எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

மேற்கு நாடுகளின் இந்த நடவடிக்கையுடன் சேர்ந்தாற்போல் சுவீடிஷ் அரசாங்கம் எடுத்துள்ள ஒரு நடவடிக்கையும் ஏக காலத்தில் இடம்பெற்றுள்ளது. சுவீடன் கொழும்பிலுள்ள தனது தூதரகத்தை மூடிவிடுவதாக அறிவித்தது. இதற்கு செலவுகளைக் குறைப்பதுதான் நோக்கம் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் உலகின் மிகப் பெரிய பணக்கார நாடுகளில் ஒன்றான சுவீடனின் நடவடிக்கை எதிர்மறையாகத் தோன்றுகின்றது.

சுவீடிஷ் வெளியுறவு அமைச்சர் கார்ல்பில்ட், புலிகள் தோற்கடிக்கப்பட்டிருந்த வேளையில் இலங்கைக்கு வந்து ஏற்கனவே இங்கு வந்திருந்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் மற்றும் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் நிக்கார்ட் கவுச்னர் ஆகியவர்களுடன் சேர்ந்து கொள்ள விரும்பியமைக்கு உதவாத முறையில், விசா வழங்க இலங்கை அரசு மறுத்துவிட்டதை அந்த நாடு தூதரகத்தை மூடுவதற்கு தீர்மானித்த போது கருத்தில் கொள்ளாமல் இருந்திருக்க முடியாது.

### மத்திய வங்கியின் ஆளுநரின் கருத்துக்கள்

சர்வதேச நாணய நிதியத்தின் முடிவு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் காப்ரால் அடிக்கடி வெளியிட்டு வந்த கருத்துக்களுக்கு ஒத்துப்போகவில்லையென்பது வெளிப்படையாகும். இரண்டு வாரங்களுக்கு முன்புதான் அவர் கூறினார், போர் முடிந்தகையோடு நிலைமைகள் நன்றாக இருப்பதாகத் தெரிகிறது. ஐ. எப். எம் கடனுக்கான அவசரம் இப்போது இல்லை என்று. இது அதற்கு முன்னர் அவர் கூறியிருந்த ஐ.எப்.எம் கடன் வசதி அனேகமாக கையில் கிடைக்கும் நிலையில் இருக்கிறது என்ற கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இது நரியும் திராட்சைப் பழமும் கதையை நினைவூட்டுவதாக இருந்தது. கடன் வழங்க ஐ.எப். எம் இணங்கியிருப்பதானது புளித்த திராட்சைப்பழம் இப்போது இனிக்க ஆரம்பித்திருப்பதாகக் கொள்ளலாம்.

இந்த கடனானது சராசரி இலங்கையருக்கு நேரடியாக பெரிய வரப்பிரசாதமாக இருக்கப்போவதில்லை. அவர்களுக்கு சம்பள உயர்வுகளோ வேறு எந்த நிதி உதவிகளோ கிடைக்கப் பெறமாட்டாது.

அதேசமயம் கடன் வழங்குவதற்கு ஐ.எப்.எம் மறுத்திருக்குமானால் இலங்கை மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நிலை வந்திருக்கும். குறிப்பாக இறக்குமதிப் பொருள்களும் மற்றும் ஏனைய முக்கிய பொருள்களும் இல்லாமலே காலத்தை ஓட்ட வேண்டியிருந்திருக்கும். இந்த நிலைமையில் இலங்கையை பெரும் எடுப்பில் பொருளாதார நெருக்கடி ஒன்று தாக்கியிருக்கும்.

இப்பொழுது கடந்த மார்ச் மாதம் அரசு முன்வைத்த கோரிக்கையை ஐ.எப்.எம் ஏற்றுக்கொண்டுள்ளதானது; நாம் இனியும் முக்கிய பொருள்களுக்கு அதிகவிலை கொடுக்கவேண்

## மத்திய வங்கி ஆளுநர் சொல்வது என்ன?

டியிருக்கும் என்பதுடன் ஏனைய முக்கியமான பொருள்கள் இல்லாமலே சமாளிக்க வேண்டிய நிலை இருக்கவே செய்யும்.

இனி இந்தக் கடன் எப்படி செயல்படப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டும். கடனைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளுக்கு இலங்கை அரசு இணங்கியிருக்கின்றது. ஐ.எப். எம் நிறுவனத்துக்கு அரசு கையளித்துள்ள கடிதத்தில் இந்த நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சம்மதம் தெரிவிக்கும் கடிதத்தில் ஆளுநர் கப்ராலுடன் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கையெழுத்திட்டிருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள எகிப்து சென்றிருந்தபோது அவர் சார்பில் நிதியமைச்சின் பதில் நிதியமைச்சராக அவர் அதில் கையெழுத்திட்டிருந்தாலும், ராஜபக்ஷ நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தத்தில் தாம் கையெழுத்திடப்போவதில்லையென்று பல தடவைகளிலும் சொல்லிவந்திருக்கிறார் என்பது நினைவுகூரத்தக்கது. இந்தக் கீடன் நிபந்தனையில் மத்திய வங்கியின் ஆளுநருடன் நாட்டின் நிதியமைச்சரும் கையெழுத்திட வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நியதியாகும். நிபந்தனை என்றும் சொல்லலாம். சியம்பலாபிட்டிய அதனைக் கௌரவித்திருக்கிறார். கடந்த மாதம் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சந்தை விலைகள் அதிகரித்ததனால் இப்படிச் செய்யப்பட்டதாக அரசதரப்பில் கூறிக் கொள்ளப்பட்டது. ஆனால் சுத்திகரிக்கப்படாத எரிபொருள்களாலும் அதிகரிக்கப்பட்ட விலைகளையும் பார்க்கையில் இந்தக் கருத்து பொருத்தமாகப்படவில்லை. கடந்த வாரம்தான் கோதுமை மாவினால் ஆன பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. பாணின் விலை ஒரு ரூபாவால் உயர்ந்தது. அச்சடித்துப் புழக்கத்துக்கு விடப்பட்டிருந்த பண நோட்டுகள் வாபஸ் பெறப்பட்டன. 250 ஆயிரம் அமெரிக்க டொலர் பொறுமதியான இராணுவ தளபாடக் கோரிக்கைகள் இரத்து செய்யப்பட்டுவிட்டதாக செய்திகள் கூறின. இராணுவச் செலவுகள் வெட்டப்பட்டு விட்டதாக சர்வதேச நாணய நிதியத்துக்கு செய்தி அனுப்புவதற்காக இப் படி செய்யப்பட்டது.

### இணையத்தில் வெளியானது

சர்வதேச நாணய நிதியக் கொள்கையின் படி இலங்கை அரசின் கடன் கோரிக்கையும் சம்மதமும் அந்நிறுவனத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இது வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புக் கூறலையும் காட்டுவதற்கான செயற்பாடாகும். இந்த விடயம் கடந்த சனிக்கிழமை மாலை ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டது. இது நாடாளுமன்றத்திலும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படக் கூடும். அரசு தரப்பில் உத்தியோகபூர்வ அறிக்கையொன்றும் சபையில் வெளியிடப்படும்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் பதிலளித்தபோது பிரதி நிதி அமைச்சர் சரத் அமுனுகம நிபந்தனைகள் எதனையும் வெளியிடாமல் கவனமாகச் செயல்பட்டதுடன் அரசு தனது நலத்திட்டங்களை வெட்டிக் குறைக்கமாட்டாதுஎன்றும்அவர்கூறினார்.

நலத்திட்டங்கள் மட்டும் பிரச்சினைக்குரியவையன்று, கடந்த மற்றும் பல இவ்வாறன நடவடிக்கைகள் வெளியிடப்படாமல் இருக்கின்றன.

### பத்திரிகைச் சபைச் சட்டம்

பத்திரிகைச் சபைச் சட்டம் மீளவும் அமுல்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும் வேளையில்- இந்தச் சட்டத்தில் பத்திரிகையாளர்களை சிறைக்கு அனுப்பும் பிரிவுகளும் உண்டு என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன அர்த்தமற்ற ஒரு வாதத்தை முன்வைத்தார்.

இந்தச் சபையில் 20 நிரந்தர ஊழியர்கள் எதுவித வேலையும் இன்றி சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்று அமைச்சர் கூறினார். ஆனால்இது என்ன பிரச்சினையைக் கிளப்பியதென்றால், பொது நிறுவனங்கள் தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றவே அரசு முனைவதாக அமைச்சர் தெரிவித்தார். பத்திரிகைச் சபையை மீளவும் செயல்படுத்துவதற்கான தீர்மானம் என்று அவர் கூறினார்.

ஐ.தே.க.தலைவர் விக்கிரமசிங்கவும், எம்.பி.தயாசிறி ஜயசேகரவும் அந்தக் குழுவில் இருந்தவர்கள் என்ற முறையில் நாடாளுமன்றத்தில் ஆராயாமல் தீர்மானத்தை செயல்படுத்துவது பொருந்தாது என்று வாதித்தனர். கடந்த டிசெம்பரில் இந்த விடயம் குழுவில் விவாதிக்கப்பட்ட போது ஜயசேகர மாத்திரமே எதிர்க்கட்சிச் சார்பில் இருந்துள்ளார். ஏற்கனவே தன்னிச்சையான ஒழுங்கு முறையொன்று ஊடகங்களால் கடைப்பிடிக்கப்படுவதாகவும் எனவே பத்திரிகைச் சபை எதுவும் நிறுவப்படுவதை பத்திரிகை நிறுவனங்கள் எதிர்க்கின்றனவென்றும் அவர், சுட்டிக் காட்டியுள்ளார்.

எல்லாவற்றையும் பார்க்கையில் வரப்போகின்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னர் எதிர்க்கட்சியிலுள்ள எதிர்குரலெழுப்புபவர்களுக்கும் ஊடகங்களுக்கும் வாய்ப்பூட்டுப் போடும் முயற்சி பொதுவாக முன்நகர்த்தப்படுவதை உணரலாம். (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 12 | 28.07.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | மு.இ. 09.09 வரை |
| நட்சத்திரம்: | சித்திரை |
| | மு.இ. 11.28 வரை |
| சுபநேரம்: | 10.32 - 12.02 |
| ராகுகாலம்: | 03.02 - 04.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயதொழில், தற்செயல் நிவாரண கொடுப்பனவுகளைப் பெறலாம்

சித்தங்கேணி, ஜூலை 27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு சுயதொழில் மற்றும் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காசோலைகள் வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தால் மேற்படி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் வருமாறு:-

சுயதொழில் கொடுப்பனவுக்காக -கு.மகாலிங்கம்(கட்டுடை), பெ.தம்பிராசா(மானிப்பாய்), நா.சறோஜாதேவி(மானிப்பாய்), பி.சர்மிளா(சண்டிலிப்பாய்)

தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுக்காக - ந.சுகந்தினி (நவாலி தெற்கு) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உரியவர்கள் செயலகத்துக்கு வருகை தந்து கையொப்பமிட்டு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.வி.அருந்தவராஜா அறிவித்துள்ளார். (201-112)

## வாக்காளர் இடாப்பு திருத்தவேலைகள் ஆரம்பம்

வலி. மேற்கு பிரதேச செயலகத்திற்குட் பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் 2009 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கான படிவங்களை அந்தந்த கிராம உத்தியோகத்தர்கள் வீடுகளுக்குச் சென்று வழங்கி வருகின்றனர். எனவே இச்சேவை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செய்யப்படுவதால் இதுவரை பதிவு செய்யாதவர்களும் அல்லது மாற்றங்கள் செய்ய வேண்டின் படிவத்தைப் பெற்று தமது பெயர்களை உடனடியாக வாக்காளர் இடாப்பில் இணைத்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (201-119)


### புதுக்கடை திறப்பு விழா

நிகழும் ஆண்டு ஆடித்திங்கள் 11 ம் நாள் (27.07.2009) திங்கட்கிழமை பூர்வ பட்ஷ ஷஷ்டி திதியும் சிவம் யோகமும் கவுலவம் கரணமும் சித்தாமிர்த சுபயோகமும் அத்த நட்சத்திரமும் கூடிய சுபவேளையுமான பகல் 9 மணி 40 நிமிடம் தொடக்கம் 10 மணி 50 நிமிடம் வரையில் வரும் கன்னி லக்கின சுபமூகூர்த்த வேளையில் இல- 497, ஸ்ரேசன் றோட் ,சுன்னாகம் என்னும் முகவரியில் எம்மால்புதிதாக அமைக்கப் பெற்றுள்ள "நெற்சிற்றி" எனும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்படுகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
இ.மயில்வாகனம்


### கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை

மானிப்பாய் ஸ்தாபிதம் - 1848

அர்ப்பண வைபவம் - கண் சிகிச்சை நிலையம்

தென்னிந்திய திருச்சபையின் பேராயரும், அமெரிக்க, இலங்கை மிஷன் தலைவருமாகிய அதி வணக் கத்திற்குரிய Dr.டானியேல் S. தியாகராஜா, Ph.D அவர்களால் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கண் சிகிச்சை நிலையம் 28.07.2009 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அர்ப்பணம் செய்து வைக் கப்படும்.

மானிப்பாய் வர்த்தக சங்கத்தினரால் கண் சிகிச்சை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து கண்சிகிச்சை நிபுணர்Dr.V.சிவந்தா, M.B.B.S,D.O அவர்கள் கண் நோயாளர்களைப் பார்வையிட்டு, சிகிச்சை அளிப்பார்.

பிரதிசெவ்வாய்க்கிழமையில் கண் சிகிச்சை நடைபெறும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

மருத்துவ மேலதிகாரி,
*Medical Superintendent.*

தொலைபேசி:-
021 222 2747
060 221 6376


MATHURAA BEAUTY CULTURE
TRAINING CENTER
மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்


மணப்பெண் அலங்காரம்
பேசியல்
கெயா ஸ்ரைலிங்
பெமிங் & ஸ்ரெற்னிங்
கேக் ஐசிங்
சாறி வேக்ஸ்
பப்றிக் பெயின்ரிங்
ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
பயிற்சிகளில் இணைய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

T.P:0602214013
0779362642

பழைய வீதி,
நாச்சிமார் கோயிலடி,
கோப்பாய்.


### 95ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 25 * 04 * 1958



மறைவு 24 * 04 * 2009

அல்வாய் வீதி, பலாலியைப் பிறப்பிடமாகவும் இல.76, ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட

### அமரர் சின்னக்கிளி தியாகராசா

தியாகத்தின் தெய்வமே
குடும்பத்தின் குலவிளக்கே
நந்தா விளக்கனைய நாயகனே!
பார் போற்ற எமையுயர்த்தி
படைத்தளித்து விட்டு
எங்கே சென்று விட்டீர்?

கடந்த 24.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (27.07.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (87358)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.


IDM
Nation's ICT Academy
Affiliated University College

## IDM COMPUTER STUDIES (PVT)LTD AFFILIATED UNIVERSITY COLLEGE JAFFNA BRANCH

REGISTERED COMPANY ISO 9001: 2008

*Only* **Accredited & Registered** *Course Provider in Sri Lanka*

BCS

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 01-08-2009 , 03-08-2009

BCS கற்கை நெறியை இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்திய நிறுவனம், யாழ் மண்ணிலும் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றது.

ISO 9001:2008 தரச் சான்றிதழ் பெற்ற இலங்கையின் முன்னணிக் கணனிக் கல்லூரி.

**SUBJECTS WE OFFER :**

**Certificate Level**

1. Information System
2. Software Development
3. Technology

BCS PROFESSIONAL EXAMINATION RECOGNISED COURSE PROVIDER

**Diploma Level** (Core Paper + Three Optional Papers)

1. Computer Networks
2. Database Systems
3. Internet Technologies
4. Object Oriented Programming
5. The Internet and World Wide Web
6. IT Service Management
7. Software Engineering
8. Systems Analysis
9. Systems Design
10. IT Project Management



**PGD Level**


1. Advanced Database Management Systems
2. Computer Services Management
3. Management Information Systems
4. Network Information Systems
5. Programming Paradigms
6. Software Engineering
7. System Design Methods
8. World Wide Web - Beyond the Basics
9. Software Engineering II
10. Web Engineering

All Inquiries & Registration:

**BCS & BIT Education Centre**
IDM Affiliated University College
*Head Office:* 25, Visaka Road, Colombo 4.
*Jaffna Branch:* 216,Navalar Road, Ja...

**DISCOUNTS**
20% For IDM Dip in ICT Students,
25% For University Students &
10% For Other Students


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வண்ணை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலய தேவி மஹோற்சவ தேர்த்திருவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள். அம்பிகை தேரில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்பாலிப்பதை படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)

## கல்வி அமைச்சர் 3ஆம் திகதி வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த எதிர்வரும் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்.செயலகத்தில் இத் தகவலை மின்வலு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

எதிர்வரும் 3ஆம் திகதி வருகை தரவுள்ள அமைச்சர் சுசில்பிரேமஜயந்த குடாநாட்டில் உள்ள கல்வி அபிவிருத்தி தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(9)

## சி. டபிள்யூ.ஈ. கிளை செவ்வாய் திறக்கப்படும்

நல்லூர் ஜூலை 27

யாழ். நகரில் சி.டபிள்யூ.ஈ. கிளை நாளை செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்படும் என மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்தா அளுத்தகமகே கூறினார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பொது சன ஐ.மு காரியாலயத்தில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே செய்தியாளர்களைச் சந்தித்தார்.

சி.டபிள்யூ. ஈ கிளை திறக்கப்பட்டதும் அனைத்துப் பொருள்களும் கொழும்பு விலைக்கே விற்கப்படும் என்றும் அதிகரித்த விலையில் பொருள்களை விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க விலைக்கட்டுப் பாட்டதிகாரி உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

'பென்ரோச்' பற்றறிகள் எடுத்து வரப்படும் என தகவல்கள் வெளியான போதும் இதுவரை யாழ்ப்பாணத்திற்கு 'பென்ரோச்' பற்றறிகள் எடுத்து வரப்படவில்லை எனவும் இதனால் அனேக மின்பாவனைப் பொருள்களை பாவிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இது தொடர்பாக சி.டபிள்யூ. ஈயுடன் கொழும்புக்குத் தொடர்பு கொண்ட அமைச்சர் சி.டபிள்யூ.ஈ. ஊடாக பென்ரோச் பற்றறிகளை எடுத்துவர ஏற்பாடுகள் செய்வதாகத் தெரிவித்தார். (111)

## ஓய்வூதியத் திட்டத்தில் அதிகரிப்புச் செய்ய போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை

### கமநல காப்புறுதிச்சபைப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

நாடளாவிய ரீதியில் எழுபதினாயிரம் பேருக்கு மேல் விவசாய ஓய்வூதியம் பெறுகின்றனர். இக்கொடுப்பனவுக்காக அரசு 900 மில்லியன் ரூபா மட்டுமே தந்துள்ளது.

இதனால் அடிப்படை ஓய்வூதியத் திட்டத்தில் அதிகரிப்பு செய்ய இடமில்லை.

இவ்வாறு கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை பணிப்பாளர் (ஓய்வூதியம்) யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சமாச தலைவர் க.முதலியாருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் பிரேரணை என்ற தலைப்பில் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்;

கமக்காரர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரி திட்டத்தில் 60 வயதை பூர்த்தி அடையும் ஒருவருக்கு ஓய்வூதியம் வழங்க 1987 ஆண்டு 452/12 இலக்க திருத்தச் சட்டத்தின்படி இத்திட்டத்தில் உறுப்பினராகும் ஒருவருக்கு குறைந்த பட்சம் மாதாந்தம் 200 ரூபா வழங்க தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இத்தொகையை அதிகரிக்க எண்ணி முதலாவது ஓய்வூதியமாக 500 ரூபா வழங்கப்பட்டது.

பின்னர் 1995ஆம் ஆண்டு தவணைப் பணம் எவ்வித அதிகரிப்புமின்றி மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் ஓய்வூதியம் அதிகரிக்கப்பட்டது. இதன்போது சபைக்கு ஓய்வூதிய கொடுப்பனவுத் தொகையானது பெரும் தொகையாக அதிகரிக்கப்பட்டது. ஆனால் இன்று ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 70ஆயிரத்தையும் தாண்டிவிட்டது. அரசு 900 மில்லியன் மட்டுமே ஒதுக்கியுள்ளது.

இத்தொகை அதிகரித்து வழங்கப்பட்டால் அது குறித்து சமாசத் தலைவர் சி.பொ. வ.மா.க முதலியாருக்கு அறிவிக்கப்படும் என்று கமநலக் காப்புறுதிச்சபை (ஓய்வூதியம்) பணிப்பாளர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (203-302)

## வலுவிழந்தோருக்கு அ.அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சமூக சேவைகள் திணைக்களத்தினால் செவிப்புலன் இழந்தவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த இருவருக்கு விசேட அடையாள அட்டைகள் வந்துள்ளன.

மிருசுவில், விடத்தற்பளையைச் சேர்ந்த ரி.பிரவீனன், வரணி, குடமியனைச் சேர்ந்த குமாரசாமி சச்சிதானந்தம் ஆகியோருக்கான விசேட அடையாள அட்டைகள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)




## சட்டவிரோதமாக மணல் ஏற்றியோருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 24ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சாரதியொருவருக்கு 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு அதைச் செலுத்தத் தவறின் 18 மாத சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றமை, சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமை ஆகியன தொடர்பாக மணல் ஏற்றிச் சென்றமைக்கு 13 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒன்பது மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும், சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமைக்காக 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 5 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டு வாகனங்களில் கொண்டு வரப்பட்ட மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (203-207)

## சமுர்த்தி அலுவலர்களுக்கு இடமாற்ற விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 27

சமுர்த்தி அலுவர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஒரே இடத்தில் மூன்று வருட காலங்கள் கடமையாற்றியவர்களை இந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இடமாற்றம் சம்பந்தமான சுற்று நிருபங்கள் அனைத்து பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றிய சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் பிரதேச மாவட்ட, மாகாண, தேசிய மட்ட இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அலுவலர்கள் தொடர்ந்து ஒரே இடத்திலேயே கடமையாற்றி வருகின்றமையும் இதன் காரணமாக பொதுமக்கள் பல்வேறு சிக்கல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (203-68)

## தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வலுவிழந்தோருக்குப் புனர்வாழ்வுத்திட்டம்

யாழ்ப்பாணம் ஜூலை 27

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வலுவிழந்த பிள்ளைகளின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு அறவழிப் போராட்டக் குழுவால் புனர் வாழ்வுத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

அறவழி செயலகத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை அமரர் ஜெயக்குமார் சுப்பிரமணியம் நினைவாக இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

நாவற்குழி தொடக்கம் மிருசுவில் வரையுள்ள 18 கிராமங்களைச் சேர்ந்த 64 பிள்ளைகள் இத்திட்டத்தில் இணைக்கப்படவுள்ளனர்.

இதற்கான நிதியுதவியைப் புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் வி.எஸ். துரைராஜா, ஜேர்மனியில் வாழும் திருமதி தர்மினி கமலேஸ்வரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

அறவழி தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப வைபவத்தில் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் க.இராஜாராம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் இனம்காணப்பட்ட வலுவிழந்த பிள்ளைகளின் பெயரில் சாவகச்சேரி மக்கள் வங்கியில் சேமிப்புக்கணக்கும் திருமதி தர்மினி கமலேஸ்வரனால் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கான வங்கிப்புத்தகம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்திட்டத்தின் கீழ் பிள்ளைகளுக்கான உடு புடைவைகள் மற்றும் போசாக்கு உணவு போன்றவற்றையும் குழுவினர் வழங்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (203-224)

## நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு குறிப்பிட்ட வீதிகள் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு ஆலய சூழலில் உள்ள சில வீதிகள் இன்று தொடக்கம் அடுத்த மாதம் 21ஆம் திகதி வரைவாகனப் போக்குவரத்திற்காக மூடப்பட்டிருக்கும் என்று யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அரசடிச் சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் பகுதி, பிரமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச்சந்திக்கு இடைப்படும் கோயில் வீதியின் பகுதி அடுத்து செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெரு பகுதி ஆகியன மூடப்பட்டிருக்கும்.

பேரூந்துகள், சிற்றூர்திகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்லும் பொருட்டு பாதைகளும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஏற்ற வகையில் வாகனத் தரிப்பிடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (203-224)



யாழ்.மாநகரசபைத் தேர்தலையொட்டி வேட்பாளர்களுக்கு தேர்தல் ச[illegible] விதிகள் குறித்து விளக்கும் அறிவுறுத்தும் கூட்டம் நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரண்டன் றொஹான்பெர்னான்டோ, பிரதிப்பொலிஸ்மா அதிபர் தயானந்த பண்டார, உதவிப் பொலிஸ்அத்தியட்சகர் மாரப்பன ஆகியோர் உரையாற்றுவதையும் வேட்பாளர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
தேவசகாயம்
மாக்கிறேற்றம்மா

மலர்வு
01 ✱ 11 ✱ 1940

உதிர்வு
27 ✱ 06 ✱ 2009

**துக்கம் கலையும் போதெல்லாம்**
**ஓடிவந்து எமைப் பார்ப்பாய்**
**கலையாத் துக்கம் கொள்ள**
**நீ சென்றது நீ ஏனம்மா!**
**வாடி நிற்கிறோம் நாமிங்கு**
**வசந்தமாய் நீ வருவாய் அம்மா!**

நாம் ஆழ்ந்த துயரத்தில் இருந்தபோது எமக்கு அனுதாபச் செய்தி தெரிவித்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு எமது அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (27.07.2009) திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப் பலியிலும் பின்னர் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*உன் பிரிவால் துயருறும்:*
அன்ரனிராசா, கிபூபேட்ராசா(டென்மார்க்),
றோபேட்ராசா, மேரி யூலிற் கொன்சீலியா,
மேரி விறிசிற்றா, எட்வேட்ராசா,
மேரி ஜெனிற்றா, கிறிஸ்ரின்ராசா(லண்டன்).

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(87340)

# 34 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**Dr. ALFERED THANGARAJAH DURAIAPPA J.P.,U.M.**
Mayor of Jaffna, Uncrowned King of Jaffna,
College: London Oxford-Lawyer, Late Member of Parliament Jaffna, Sri lanka Freedom Party Organiser-Jaffna District,
D.P.: Ponnalai Krishnan Kovil
D.No.: 27,July 1975, Sunday 12.45 p.m.

முன்னாள் யாழ்ப்பாண மாநகர மக்கள் மேயர், மாண்புமிகு

## அமரர் அல்பிறட் துரையப்பா

இன மத பேதமின்றி மக்களுக்குச் சேவையாற்றிய செயல்வீரரும் பிரபல்யம் பெற்ற இலங்கை சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைப்பாளரும் யாழ் நகரமக்களால் பணமாலை சூட்டி வரவேற்கப்பட்ட முதல் நகர பிதாவுமாகிய அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: அ. வைகுந்தநாதன்
(முன்னாள் மாநகராட்சி மன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்).

வடமராட்சி.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தெய்வேந்திரன்
சதீஸ்
(யாழ்.பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)
திதி:சஷ்டி

தாயின் மடியில்
17.06.1976

இறைவன் மடியில்
03.08.2003

**ஆண்டுகள் ஆறு சென்றாலும்**
**ஆறவில்லை உன் பிரிவின் துயரம்**
**ஆயிரம் உறவுகள் இருந்தாலும்**
**அவை அனைத்தும் ஈடாகுமா உன் அன்புக்கு**

*என்றும் நினைவுடன்:*
தாய்-தந்தை
ஜெயா வைண்டிங் வேக்ஸ், யாழ்ப்பாணம்.

லண்டன்.

# வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம்-கச்சேரி பிரதான வீதி பற்றிக்ஸ் வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் மாடி வீடு 6 அறைகள், 2 குசினி, வாகனத்தரிப்பிட வசதியுடன் விற்பனைக்கு/ வாடகைக்கு உண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு பொருத்தமானது.
தொடர்புகளுக்கு: 021 222 9425, 0779496985


# விற்பனைக்கு

தரமான 4'' (இஞ்சி) கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் தூண்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 4163146

(87330)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு
31 ★ 05 ★ 1941



உதிர்வு
25 ★ 06 ★ 2009

## அமரர் தம்பையா சிவநேசன்

கடந்த 25.06.2009 அன்று சிவப்பேறெய்திய எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.07.2009) திங்கட்கிழமை எமது இல்லத் தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு, நீர்வேலி.
குடும்பத்தினர்.

(87347)

# யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைகளுக்கான தேர்தல் 2009.08.08.

## தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது வாக்கையளிப்ப தற்காக விடுமுறை வழங்குவது தொடர்பான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 84அ ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தொழி லாளர்களினதும் தொழில்தருநர்களினதும் தகவலுக்காக இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

''84அ(1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரித்துடைய ஆளொருவரை வேலைக்கமர்த்தியவராகவிருக்கின்ற எவ் ஆளும், அத் தகைய ஆளினால் அதற்காக எழுத்துமூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய ஆள் அத்தேர்தலில் வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக வேலைக்கமர்த்திய அவ் ஆள் போதியதெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலத்திற்கு (அக்காலம் இரண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்). சம்பள இழப்பை ஏற்படுத்தாத லீவை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்''.

''(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறு கின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினாற் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படு மிடத்து, ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாதகாலத்திற்கு மேற்படாத காலத்திற்கான இருவகையில் ஒருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்''.

02. மேற்கூறப்பட்ட பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தனது வாக்கையளிப்பதற்காக விடுமுறை கோரி எழுத்துமூலம் விண்ணப்பம் செய்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் விடு முறை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் விடுமுறை காலம், அமய ஊழியர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக் கும் சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையொன்றாக கருதப்பட வேண்டியதுடன், அது ஊழியர்களின் சாதாரண லீவுகளி லிருந்து புறம்பானதாகவிருக்க வேண்டும்.

03) இவ்விடயம் தொடர்பாக ஊழியர்களுக்கு வழங் கப்படும் விடுமுறை காலத்தை, அந்த ஊழியர் தொழில் புரி யும் இடத்திலிருந்து அவரது வாக்கெடுப்பு நிலையத் திற்கு போகவும் அங்கிருந்து திரும்பிவரவும் உள்ள தூரத்தை கருத்திற்கொண்டு, தொழில்தருநரால் தீர்மானம் செய்ய வேண்டும். சட்டத்தின்படி லீவு பெற்றுக்கொள்வது தொடர் பாக இதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களின்போதும் ஊழியர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற் றுள்ளதனால், இவ்வாக்கெடுப்பின்போது வாக்களிக்க உரித்துள்ள தனது ஊழியர்களுக்கு, சட்டத்தின்கீழ் உரிமை யுள்ள இவ்விடு முறையை தனியார், அரசாங்க துறைகளி லுள்ள தொழில் தருநர்கள் தமது தாபனத்தில் தொழில்புரியும் ஊழியர்களுக்கு வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

04. மேற்கூறப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கள் 2009.08.08 ஆம் திகதி மு.ப. 7.00 மணி முதல் பி.ப. 4.00 மணிவரை நடாத்தப்படும்.

05. இது தொடர்பாக சகல தொழில் தருநர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பை மிகவும் மெச்சுகின்றேன்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,
2009.07.27

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

# வலிகாமம் வலய பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு ஜூலை 27

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை களுக்கு இடையே நடைபெற்ற தமிழ் மொழித் தினப்போட்டி முடிவுகள் வருமாறு:

கவிதை ஆக்கம் பிரிவு-4

க.கிருஜிகா (மானிப்பாய் மகளிர் கல் லூரி), தெ.தாட்சாயினி (சுழிபுரம் விக் ரோறியாக் கல்லூரி), அ.சர்மிலன் (சுன் னாகம் மயிலணி சைவ ம.வி).

*பிரிவு-5*

த.ஹம்சிலியா (மாதகல் சென்.யோசேப் வித்தி), ம.யுகேந்திரா (வசாவிளான் மத்திய மகா வித்தி.), நா.தனுஷா (வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரி), வி.வானதி (இணுவில் மத்திய கல்லூரி).

சிறுகதை ஆக்கம் பிரிவு-4

இ.றெஜினாளினி (மானிப்பாய் சென். ஜோன்ஸ் றோ.க.த.க.), கா.சுபாசினி (மூளாய் சைவப் பிரகாச வித்தி.), சீ.ஸ்ரீகௌதமி (அள வெட்டி அருணாசலம் வித்தியாலயம்).

*பிரிவு-5*

லோ.அர்சிகா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), மா.ராகினி (பண்ணாகம் மெய்கண் டான் வித்தி.), பா.ஜீவா (மருதனார்மடம் இரா மநாதன் கல்லூரி).

வாசிப்பு பிரிவு ஒன்று

பி.கஜீபா (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி யாலயம்), ப.லக்சாயினி (வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), உ.கவியங்கா (அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை).

*பிரிவு - 2*

சி.நிரோஜினி (அளவெட்டி அருணோ தயாக் கல்லூரி), வா.சுபா (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), பா.கீர்த்தனா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

ஆக்கத்திறன் வெளிப்பாடு:

கு.ஜனுசியா (அளவெட்டி அருணோத யாக் கல்லூரி), ஆ.சேயோன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), அ.மதுசன் (மானிப் பாய் விவேகானந்தா வித்தி).

பேச்சு பிரிவு ஒன்று:

மோ.அம்ஸ்டா நிஸ்தீன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), ம.துசாரா (தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி), ச.பவித்திரா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.).

*பிரிவு -2*

ர.மோகனதாரணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), தி.கீர்த்தனா (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), சு.அனுசாந் (தெல்லிப் பளை யூனியன் கல்லூரி).

*பிரிவு-3*

சி.நவநீதா (மானிப்பாய் மகளிர் கல் லூரி), சு.விஜிதா (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி), த.நிதுஷா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

*பிரிவு-4*

சி.சாம்பவி (உடுவில் மகளிர் கல் லூரி), யோ. கமில்டன் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), இ.கஜீபன் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி).

*பிரிவு-5*

பு.திருமாறன் (தெல்லிப்பழை மகாஜ னாக் கல்லூரி), த.யேனுகா (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), த.கல்யாணி (இணுவில் மத்திய கல்லூரி). *(தொடரும்)*


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1107 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 30 34 38 54

24-07-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 8,335,150/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 210,980 | 20/- | 4,219,600/- |
| 2 இலக்கங்கள் | 19,422 | 40/- | 776,880/- |
| 1 இல. + லக்கினம் | 19,412 | 60/- | 1,164,720/- |
| 2 இல. + லக்கினம் | 1,794 | 200/- | 358,800/- |
| 3 இலக்கங்கள் | 514 | 1000/- | 514,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,335,150/- | - |
| மொத்தம் | | | 8,104,000/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 252,177 | | 8,604,000/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத தொகை ரூபா 8,806,825/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : ஜெஸீமா ஜயவிக்ரம சீதுவை

கைத்தொலைபேசி வெற்றியாளர்: எம்.ஏ.மொஹமட் ஜதீர் நிந்தவூர் 14

2009 ஜூலை 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 500361115-6-31 |
| கொழும்பு | 500366698-1-17 |
| கம்பஹா | 500360708-8-45 |
| கொழும்பு | 500362761-8-44 |
| களுத்துறை | 500362298-5-00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே"

ஆலயங்கள் சமுதாய விழிப்புணர்வுக்கும் ஆன்மீக எழுச்சிக்கும் வழிசெய்வன, ஆலயங்களிலே நடைபெறுகின்ற நித்திய நைமித்தியங்களால் கருவறையிலே இருக்கும் இறைவனுக்கு சான்னித்தியம் அதிகரிக்கின்றது.

ஆலயங்களிலே நித்தியோற்சவம், வார உற்சவம், மாத உற்சவம் மஹோற்சவம் என்பன சிறப்பாக நடைபெறவேண்டும்.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்கு மேல் வானோர்க்கு மீண்டு"

என்பது வள்ளுவர் வாய் மொழி. சிறப்பொடு பூசனை என இங்கு குறிப்பிடுவது பெருந்திருவிழாவேயாகும்.



அத்தகைய பெருந்திருவிழா சிறப்புற நடைபெறும் ஆலயங்களில் நல்லைக்கந்தன் ஆலயம் பிரசித்தி வாய்ந்தது. புனித தத்துவம் மட்டுமன்றி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த நிர்வாகத்தாலும் இவ் ஆலயம் சிறந்து விளங்குகின்றது.

முருகவழிபாடு காலத்தால் முந்தையது. பழந்தமிழ் நூலாகிய குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலில்,

*"தாமரை புரையும் காமர் சேவடிப்*
*பவழத்தன்ன மேனித் திகழொளிக்*
*குன்றியேய்க்கு முடுக்கைக் குன்றின்*
*நெஞ்சு பகவெறிந்த அஞ்சுடர் நெடுவேல்*
*சேவலங் கொடியோன் காப்ப*
*ஏம வைக லெய்தின்றாலுலகே"*

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்லைக் கந்தன் ஆலயத்திலே மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராக - அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவான வேற்பெருமான் வள்ளிதெய்வயானை அம்பாள் சமேதராக வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். வேலின் பெருமை குறித்து வீரவாகுத் தேவர் கந்தபுராணத்திலே,

அந்தமிலொளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால்
எந்தைகணின்றும் வந்த இயல்பினால் சக்தியாம் பேர்
தந்திடும் பனுவல் பேற்ற தன்மையால் தனிவேற்பெம்மான்
கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தோம்'

என கூறுகின்றமையைக் காணலாம்.

குமரகோட்டமாக விளங்கும் நல்லைப்பதி செல்லப்பா சுவாமிகள், சிவயோகசுவாமிகள் ஆகியோரின் திருவடிபட்ட புனிதம் வாய்ந்தது. நாவலர்பெருமான் கந்புராண கலாசாரத்துக்கென சேவையாற்றிய ஞானபூமி அது. குகஸ்ரீ குமாரதாசமாப்பாணர் வம்சத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வரும் இவ்வாலயத்தில் நடைபெறும் நித்திய, நைமித்தியங்கள் யாவும் குமார தந்திர ஆகம வழி நடைபெறுகின்றன.

மஹோற்சவத்தில் தஞ்சத்தருள் முருகன் மஞ்சப்பவனி, ஆர்த்திகள் நீக்கும் கார்த்திகை உற்சவம், கைலயங்கிரிக் காட்சி, உலகிலுள்ள ஜீவான்மாக்களிலெல்லாம் பரமான்மாவாகிய இறைவன் கலந்துள்ளானென்பதை உணர்த்தும் பழனியங்கிரி உற்சவம், தங்கரதபவனி, பக்தர்க்கருளும் தீர்த்தவாரிதி, ஐம்புலனாகிய வேடரிடைவளர்ந்தஜீவான்மாகிய வள்ளியை குருவடிவாக வந்து அருள் செய் திருமணக் காட்சி அனைத்தும் சமய தத்துவங்களை உணர்த்துபவையாக விளங்கு கின்றன.

கந்தபுராண கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் தன்மையாக கந்தபுராண படன வாசிப்பு ஆலயத்தில் நடைபெறுவதைக் காணலாம் நல்லூர்க் கந்தன் ஆலயம் சமய விழுமியங்களைப் பாதுகாக்கும் மையமாக விளங்குவதும் பெருமைக்குரியது. நல்லைத் தரிசனத்துக்கு நாலாயிரம் கண் வேண்டுமென முருகனைச் சிந்தித்து வந்திப்போமாக.

**சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்**
**கோப்பாய்.**

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக மேலதிக அரசாங்க அதிபர் தருமதி ரூபினி வரதலிங்கமும் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிர தேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து கொள்வர்.

முதல்நாள் நிகழ்வாக இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவப்புலவர் நித்தியதசிதரனின் 'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். விநாயகர் அறநெறிப் பாடசாலை, மாதகல் வெல்வின் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''சுந்தரரும் தோழமை நெறியும்'' என்னும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கம் சொற்பொழிவாற்றுவார். துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை, களபாவோடை நாகபூசணி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை, விக்னேஸ்வரா அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம் பெறும்.

* * *

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக் கம் 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கை நடத்தவுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறவுள்ளது. கச்சேரியில் கே.ஆர்.சுந்தரமூர்த்தி, எஸ்.தேவதாஸ் ஆகியோர் நாதஸ்வரம் எஸ்.ராமதாஸ், ஆர்.பாஸ்கரன் ஆகியோர் தவில் வாசிக்கும் நிகழ்வு இடம்பெறும். (201)

# சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வுகள்

சுழிபுரம், ஜூலை 27

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை மறுதினம் புதன்கிழமை சிதம்பரம் அம்பலவாணசுவாமி மானா முதலியார் மட தருமம் தருமகர்த்தா சபையினரால் அராலிகிளை மடாலயத்தில் நடத்தப்படவுள்ளது. அன்று புராண படலம் நடத்தப்பெற்று சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் இடம் பெறும். அன்னதானமும் நடைபெறவுள்ளது.

(203-28)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்.சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(203)






# நல்லூர் பெருந்திருவிழா பக்திப் பாக்கள்

### *கொடியேறும் நாளிலே குடியேற அருளுவாய்*

முடிவேது மின்றியும் முறையேது மின்றியும்
முழுப் போதும் நீளும் என்ற
அடிபாடு முடிந்ததாம் ஆனந்தம் அடைகிறார்
அப்ப! நீ அறிவா யையா
விடியாது போகுமோ வினையின்னும் கூடுமோ
வெளிக்கம்பி வேலி விடுமோ?
கொடியேறும் நாளிலே குடியேற அருளுவாய்
குமரனே! நல்லை அமுதே!

சிற்பி.

### நற்கொடி ஏறக் கண்டார்

கந்தவேள் கயிலை விட்டு
கனக மா மயில் மீதேற
அந்தமில் அழகன் தன்னை
அண்ணலும் அணைத்துக் கொள்ள
இந்திரன் பிரமா விஷ்ணு
இணைந்தொன்றாய் வாழ்த்தொலிக்க
செந்தழல் மேனி ஆறும்
செங்கதிர்க் குடை பிடிக்க
வந்த பேர் அடியார் தங்கள்
வாழ்த்தொலி விண்ணை எட்ட
மந்திரம் முழங்கும் அந்த
மாமணிக் கோயில் புக்கான்
நம் தமிழ் இனம் தளைக்க
நற்கொடி ஏறக் கண்டார்

விகடகவி.

### கருணை வேண்டித் துதிப்போம்

கண்டிடுவோம் கந்தனது பெருவிழாவின் கொடியேற்றம்
கண்குளிர! அகங்குளிர! காசினியில் மக்களெலாம்
எண்ணுகின்ற வாழ்வுநலம் சீருறவே பெற்றிடவே
சண்முகனின் கருணையினை வேண்டிநாம் -
வணங்கிடுவோம்!

ப.மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு.

### எம் சோர்வுளத்தைத் தேற்றியருள்வாய்

மனக்கவலை மாற்றியருள் மால்மருகா கந்தா
உனக்குநிகர் நீயேதான் அய்யா - மனக்கவலை
யார்போக் குவாரெனவே யேங்கித் தவித்திடுமெம்
சோர்வுளத்தை நீயிரங்கித் தேற்று

தேற்றாயேல் யாரெம்மைத் தேற்றுவார் முருகய்யா
கூற்றானோர் கொள்கைகளை நீயறிந்தும் - பாற்கடலில்
பள்ளிகொண்டான் கன்னியரைப் பாகமாய்க் கொண்டவனே
கள்ளமில்லா உன்னன்பைக் காட்டு

சி.வெற்றிவேலு
வட்டுக்கோட்டை.

### கொடியேறும் அழகும் பேரழகே!

கோலக் கோபுரம் அழகு கோகரணம் சூழ்ந்திலங்கு
திருக்கோயிலும் அழகு
சீலம் பொலி வதனமாறும் அழகு சிந்தை யள்ளும்
திருமேனியும் அழகு
வலத்துறை வல்வேல் அழகு வைதார்க்கும் அருளும்
திரு விழியும் அழகு
குலவு குஞ்சரி வள்ளி அழகு குன்று தோறாடுவான்
திருக்கழலும் அழகு
நீல மயில் அழகு நீக்கமற நிறைந் தொலிக்கும்
திருநாமமும் அழகு
ஞாலம் போற்றும் ஞானக்குரு நல்லூரான் கொடியேறும்
அழகும் பேரழகே!

கந்த தியாகராசா
கோண்டாவில்.

### கொடியேற்றம் கண்டின்புறுவோம்

ஆடியடங்கி ஓய்ந்த அழிவுப்போர்
அகதிகளை ஆக்கியதை அறிவோம்
வாடியிங்கு வாழ்வோர் வளம்பெற
வடிவேலனிடம் வழிகாட்டக் கேட்போம்
ஆடிமாதத் திரண்டாம் திங்களின்று
ஆறுமுகாவுன் கொடியேற்றம் கண்டின்புற்று
நாட்டிலும் வீட்டிலும் நல்லமைதி
நிலைக்க நினதருளை வேண்டுகின்றோம்.

க.அருமைநாயகம்
குளப்பிட்டி.

### பொற்பதம் பணிகின்றோம்

உன் பொற்பதம் பணிந்து
உள்ளம் உருகி நின்று
இருகை கூப்பி வணங்கி
உன் அருளைப் பாடும்
கொடியேற்ற தினத்திலே
பக்தர்களின் வேண்டுதலை
தீர்த்திடுவாய் சீக்கிரமே...!

மகேந்திரலிங்கம் நிரோஷனா
கோப்பாய் தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஒகஸ்ட்
**General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August**
மேல்மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரிப்பரீட்சைத் தொடர் 02

# உயிரியல் - 01

## பகுதி - 1

* எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

01. அங்கிகளின் கட்டமைப்பினதும் தொழிற்பாட்டினதும் அடிப்படை அலகாக உள்ளது?
1) கரு. 2) முதலுரு. 3) கலம்.
4) பரம்பரை அலகு. 5) நிறமூர்த்தம்.

02. இழையுருப்பிரிவின் முன்வைத்தையின்போது எது நிகழ்வது சாத்தியம் அற்றது?
1) நிறமூர்த்தங்கள் குறுகிதடித்தல். 2) புன்கருமறைதல்.
3) கருமென்சவ்வு மறைதல்.
4) நிறமூர்த்தங்கள் ஒன்றியெடுத்தல். 5) கதிர்நார்கள் தோன்றுதல்.

03. நன்கு விருத்தியடைந்த கொல்கி சிக்கல் எதில் காணப்படுகின்றது?
1) செங்குருதிக்கலம். 2) சதைய குலைக்கலம். 3) தோலின் மேலணிக்கலம்.
4) இதயத் தசைக்கலம். 5) போமனின் உறை மேலணிக்கலம்.

04. ஒரு மூலக்கூறு குளுக்கோஸில் காணப்படும் சக்தி பின்வரும் எந்தப்படி நிலையின்போது ஆகக்கூடுதலான அளவில் $NADH_2$இற்கு மாற்றீடு செய்யப்படுகின்றது?
1) கிளைக்கோப்பகுப்பு. 2) அற்ககோல் நொதித்தல். 3) இலத்திரன் காவும் தாக்கங்கள்.
4) கிரப்பின் வட்டம். 5) இலத்திரிக்கமில நொதித்தல்.

05. நொதியங்கள் தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
1) நொதிய மூலக்கூறின் மிகச்சிறிய மேற்பரப்புகளே உயிர்ப்பு மையங்களாக உள்ளன.
2) முழு நொதியங்கள் நொதிய துணைக்காரணிச் சிக்கல்களாக உள்ளது.
3) FAD என்பது e- வாங்கியாக தொழிற்படும் சங்கலிதக்கூட்டம் ஆகும்.
4) நொதியங்கள் தனித்துவமான முப்பரிமாண மூலக்கூற்று வடிவம் உடையவை.
5) உயிர்ப்பு மையங்கள் உறுதிப்பாடான பௌதிக தன்மை உடையவை.

06. $RuBp + O_2 \rightarrow PGA + \boxed{x}$ இத்தளத்தில் x இல் இடப்பட வேண்டிய விளைபொருள் எது?
1) பொசுபோகிளிசரலிடிசைட். 2) $NAFPH_2$
3) பொசுபோகிளைக் கோலிக்கமிலம். 4) மலேற். 5) ஒட்சலேற்று.

07. வேர் உச்சிகளில் உருவாக்கப்பட்டு காழின் ஊடாக மட்டும் மேல்நோக்கி கொண்டு செல்லப் படும் வளர்ச்சி பதார்த்தம்?
1) எதிலீன். 2) ஒட்சின்கள். 3) கிபறின்கள்,
4) சைற்றோகைனின்கள். 5) அப்சிசிக்கமிலம்.

08. Cycas, Anthophyta ஆகியவற்றில் சூல்வித்துக்களில் காணக்கூடிய கட்டமைப்பு,
1) இரு கவசங்கள். 2) பெண்கலச்சனனிகள். 3) சூல்வித்திழை.
4) மகரந்த அறை. 5) மூலவுருப்பையகம்.

09. ஒட்சியேற்ற பொசுபோரிலேற்றம் தொடர்பான கூற்றுகளில் தவறானது எது?
1) காற்றுச்சுவாசத்தின்போது மட்டும் இடம்பெறும்.
2) இதில் தாழ்த்தப்பட்ட துணை நொதியங்களில் வைக்கப்பட்டிருந்த சக்தி ATP தொகுப்பில் பயன்படுத்தப்படும்.
3) இழைமணிகளில் மட்டும் இடம்பெறும்.
4) சுவாச சங்கிலித்தாக்கங்களின்போது இடம்பெறும்.
5) NAD, FAD, $H_2O$ என்பன விளைபொருட்களாகக் கிடைக்கும்.

10. இருவித்திலை வேர்களில் தக்கையாக்கியை பிறப்பிப்பது?
1) பரிவட்டவுறை. 2) அகத்தோல். 3) மேற்பட்டை.
4) கீழ்தோல். 5) உரியம்.

11. வேர்களின் அடிப்பிரியிழையத்தில் இருந்து உருவாக்கப்படுவது?
1) மேற்றோல். 2) மேற்பட்டை. 3) மையவிழையம்.
4) முதல் காழ். 5) சிறுகட்டு மாறிழையம்.

12. பின்வருவனவற்றுள் எது $C_4$ தாவரங்களின் நடுவிழைய கலங்களில் இடம்பெறுவதில்லை?
1) பைறுவேற் பொசுபோ ஈனொல் பெறுவேற்றாக மாறதல்.
2) பொசுபோ ஈனோல்பைறுலேற் $CO_2$ வாங்கியாக செயற்படுதல்.
3) நீரின் ஒளிப்பகுப்பு.
4) பொசுபோகிளிசரேற் உருவாதல்.
5) மலேற்றின் தொகுப்பு இடம்பெறுதல்.


13. மனிதனின் மண்டையோட்டின் தலையோடு தொடர்பான கூற்றுகளில் தவறானது எது?
1) இது தட்டையான 8 என்புகளால் ஆக்கப்பட்டது.
2) இதன் என்புகள் அசையா மூட்டுகளை உடையவை.
3) இதன் கீழ்ப்பகுதி பெருகிக் குடையத்தைக் கொண்டிருக்கும்.
4) சிபுக என்பு இதனுடன் மூடப்பட்டிருக்கும்.
5) பிடர் என்புக்குமிழ்களால் அத்திலசுடன் மூட்டப்பட்டிருக்கும்.

14. என்புகளின் சீரான விருத்தியுடன் தொடர்புடைய ஓமோன் எனக்கருதக்கூடியது எது?
1) தையிரொட்சின். 2) பரத்தோ மோன். 3) அதிரினலீன்.
4) ஈஸ்ரோஜென். 5) அல்டோஸ்ரெரோன்.

15. மனிதக்கண் தொடர்பான கூற்றுகளில் தவறானது?
1) நீர் மயவுடனீர் பிசிருடல் மேலணியால் சுரக்கப்படுகின்றது.
2) மையச் சிற்றிறக்கம் கூம்புக்கலங்களை மட்டும் கொண்ட விழித்திரையின் பகுதியாகும்.
3) Rhodopsin குறைபாடு இருட்கால பார்வை குறைவை ஏற்படுத்தும்.
4) ஒளிச்செறிவு மாற்றங்களிற்கு ஏற்ப தன்னமைவைக் காட்டுவதில் பிசிர் உடல் ஈடுபடுகின்றது.
5) விழிவெண்படலம் குருதிக்கலன்கள் அற்றது.

16. பரிவு, பரபரிவு நரம்புகளின் தொடர்பை பெற்றிருக்கும் மனித இதயத்தின் பகுதி?
1) SA கணு. 2) AV கணு. 3) HIS இன் கட்டுகள்.
4) வலது சோனை அறையின் சுவர். 5) Purkinje நார்கள்.

17. உடற்பாய் பொருட்களில் காணப்படும் கரையங்களின் செறிவிற்கும் குருதி முதலுருவில் உள்ள ADHஇன் செறிவிற்கு இடையிலான தொடர்பை காட்டும் வரைபு எது?
கரையங்களின் செறிவு x அச்சில் ADHஇன் செறிவு Y அச்சில்,




18. மனிதனின் உணவுக்கால்வாயின் சுற்றச்சுருங்கல் அசைவை சீர்படுத்தும் மூளையின் பகுதி?
1) நீள் வளையமைய விழையம். 2) மூளி.
3) பரிவகம். 4) மூளையம். 5) வரோலியின் பாலம்.

19. Serotonin இனை வெளிவிடுவதுடன் தொடர்புடைய கலம்?
1) இயோசின் நாடிகள். 2) மூல நாடிகள் 3) குருதிச்சிறுதட்டுக்கள்.
4) ஒற்றைக்குழியம். 5) நிணநீர்குழியம்.

20. தனியன் மட்டத்திலும் கூடியதும் ஒழுங்கமைப்பு மட்டத்தில் மிக அடிப்படையான மட்டமாக கருதப்படக்கூடியது,
1) இனம். 2) குடித்தொகை. 3) சாகியம்.
4) சூழல் தொகுதி. 5) உயிரினமண்டலம்.

21. பின்வருவனவற்றில் தவறானது எது?
1) உரியச் சுமையேற்றம் இடம்மாற்றும் கலங்களினால் நிகழ்த்தப்படுகின்றது.
2) உரியச் சுமையிறக்கம் தாழிகளில் இடம்பெறும்.
3) சுக்குரோஸ் நெய்யரிக்குழாய் வழியே கொண்டு செல்லப்படுதல் மந்தமான செயற்பாடு.
4) தளிர் இலைகளும் விருத்தியடையும் வித்துகளும் கொண்டு செய்யலில் மூலங்களாகலாம்.
5) நெய்யரிக்குழாய் ஊடாக நீரின் அசைவு நீர்நிலை அழுத்தப்படித்திறன் வழி நிகழ்கின்றது.

22. இலங்கையின் ஊவா வடிநிலப்பகுதியில் காணப்படும் சூழல் தொகுதி?
1) மலைக்காடுகள். 2) உலர்பத்தனை. 3) [illegible]
4) சவன்னாக்கள். 5) பன்னத்தரைகள்.

23. rrTt என்னும் பிறப்புரிமை அமைப்பும் Rrtt என்னும் பிறப்புரிமை அமைப்பும் உடைய இரு பெற்றோர்களின் கலப்பினால் உருவாக்கக்கூடிய தோற்ற அமைப்பு விகிதம்?
1) 3 : 1 2) 1 : 1 : 1 : 1 3) 1 : 1
4) 9 : 3 : 3 : 1 5) 3 : 2 : 2 : 1

24. சாதாரண பார்வை உடைய தாய், தந்தை இருவரினதும் தந்தையர் நிறக்குருடு உடையவர்கள் மேற்குறிப்பிட்ட தாய் - தந்தைக்கு கிடைக்கும் பெண் குழந்தை நிறக்குருடு ஆக இருக்கக்கூடிய நிகழ்தகவு?
1) 25% 2) 50% 3) 0%
4) 75% 5) 100%

25. பின்வருவனவற்றுள் எது பிறப்புரிமை மாறல்களிற்கு பிரதான காரணமாக உள்ளது?
1) பன்மடியங்கள். 2) விகாரங்கள். 3) இணைப்பு.
4) நிறமூர்த்த இரட்டிப்புகள். 5) சுயாதீனத் தனிப்படுத்துகை.

26. ஆமணக்கு தாவரங்களில் தூய வழியான கருமை நிற அழுத்தமான வித்துகளை தரும் தாவரத்துடன் பிறப்புரிமை அமைப்பு அறியப்படாத ஆமணக்கு தாவரத்துடன் கலப்பு செய்யப்பட்டபோது கிடைத்த தோன்றல்கள்?
1) கருமை அழுத்தம் - 1315 2) சிவப்பு திரங்கியவித்து - 1370
3) சிவப்பு அழுத்தமான வித்து - 21 4) கருமை திரங்கியவித்து - 19
இதில் இருந்து பெறக்கூடிய முடிவுகளில் தவறானது எது?
1) பிறப்புரிமை அமைப்பு அறியப்படாத பெற்றோர் தாவரம் இரு இயல்புகளிற்கும் பல்லின நுகம்.
2) இது ஒரு சோதனைக்கலப்பு.
3) கருதப்பட்ட பரம்பரை அலகுகள் தன்வயித்த தொகுப்படைகின்றன.
4) சிவப்பு, திரங்கிய இயல்புகள் ஆட்சியானவை.
5) தோன்றல்களில் கருமையான அழுத்தமான வித்துகளை தரும் தாவரங்கள் மட்டுமே சம நுகத்திற்கு உரியவை.

27. தாய் B வகை குருதியும் தந்தை A வகை குருதியும் உடையவர்கள் இருவரும் இவ்வியல்பிற்கு பல்லின நுகம் உடையவர்கள். இவர்களிற்கு கிடைக்கும் ஒத்த இரட்டையர்கள் அல்லாத இரு குழந்தைகள் AB குருதிக்கூட்டத்தைக் கொண்டிருக்கக்கூடிய நிகழ்தகவு யாது?
1) 3/4 2) 1/4 3) 1/8
4) 1/16 5) 1/2

28. பரம்பரை அலகுமுளை வகை பெருக்கத்தில் Plasmid பயன் உடையதாக அமைவதன் காரணம்?
1) Plasmid நுண்ணுயிர் கொல்லிகளிற்கு எதிர்ப்பு இயல்பின் பரம்பரை அலகை கொண்டிருத்தல்.
2) Plasmid சுயமாக இரட்டிப்படையும் தன்மையைக் கொண்டிருத்தல்.
3) Endonucleases இனால் Plasmid களை திறக்க முடிதல்.
4) Plasmid கள் பற்றீரியாக்களில் மட்டும் காணப்படுதல்.
5) Plasmid களுடன் அந்நிய பரம்பரை அலகுகளை இணைக்க முடிதல்.

29. Minamata பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நீர் மாசு?
1) Hg 2) Cr 3) Cd
4) Sn 5) Pb

30. பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
1) உயிர் எரிபொருட்கள் (bio fuels) புதுப்பிக்கக்கூடிய சக்தி வளம் ஆகும்.
2) வளிமண்டலத்தின் படை மண்டபத்தில் உயரம் அதிகரிக்கும்போது வெப்பநிலை அதிகரித்து செல்லும்.
3) மாறன் மண்டல ஓசோன் ஒளியிரசாயனப் புகையின் ஒரு விளைவு ஆகும்.
4) புதுப்பிக்க முடியாத வளங்களின் முகாமைத்துவத்தில் மீள் சுழற்சி நடவடிக்கைகள் எப்போது பயன் உடையவை.
5) நீர் நிலைகளில் உயிர் இரசாயன ஒட்சிசன் தேவையின் அதிகரிப்பு சேதன மாசாக்கத்தின் போது ஏற்படும்.

31. உயிரியல் உருப்பெருக்கம் (Biological magnification) தரை சார்ந்த உணவுச்சங்கிலிகளிலும் பார்க்க நீர் சூழலின் உணவுச்சங்கிலிகளில் அதிகம் ஏற்படும்.
1) நீரில் மாசுகளின் உயிரியல் படியிறக்கம் தரையைவிட குறைவாக இடம்பெறுதல்.
2) தரையைவிட நீர் நிலைகளில் மாசுகள் அதிகம் இருத்தல்.
3) தரையைவிட நீரில் உற்பத்தியாளரின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல்.
4) தரையைவிட நீரில் உயர்மட்ட ஊகை உண்ணிகள் அதிகம் இருத்தல்.
5) தரையைவிட நீரில் உணர்ச்சங்கிலிகளிற் இணைப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல்.

32. ஓர் இயற்கை சூழலின் உணவுவலை,
1) அனேக போசணை மட்டங்களை உடையதாக இருக்கும்.
2) மேச்சல் உணவுச்சங்கிலிகளால் மட்டும் ஆக்கப்பட்டிருக்கும்.
3) பொதுவாக உறுதிப்பாடு உடையதாக இருக்கும்.
4) நேர் கோட்டிற்குரிய சக்திப்பாச்சலைக் காட்டும்.
5) போசணை மட்டங்கள் ஒவ்வொன்றிலும் சக்தி இழப்பு காட்டப்படும்.

33. பின்வரும் நுண் அங்கிகளில் எது குழிய நச்சுகளை (cyto toxins) உற்பத்தி செய்கின்றது?
1) Clostridium tetani 2) Vibrio cholera 3) Corynebacterium diptheriae
4) Salmonell typhi 5) Shigella

34. கழிவுநீர் பரிகரிப்பில் சிறுதாரை வடிமுறை தொடர்பான தவறான கூற்று?
1) சேதனக் கழிவுகள் நுண் அங்கிகளால் ஒட்சியேற்றப்படுகின்றன.
2) நீரில் காணப்படும் சேதனப்பதார்த்தங்களின் 95% வரை அகற்றப்படுகின்றது.
3) காற்றுவாழ் நுண் அங்கிகளின் செயற்பாடு ஊக்குவிக்கப்படுகின்றது.
4) உயிர்வாயு விளைவுகள் உருவாக்கப்படுகின்றன.
5) நீரின் உயிர் இரசாயன ஒட்சிசன் தேவை குறைக்கப்படுகின்றது.

35. பின்வருவனவற்றுள் எது ஒரு பெற்ற நிர்பீடனமாகக் கருதப்படும்?
1) குருதியில் Interferon கள் விடுவிக்கப்படுதல்.
2) உமிழ்நீரில் Lyzozyme காணப்படுதல்.
3) பித்த சுரப்பில் Lacto ferrin இருத்தல்.
4) குருதியில் பிறபொருள் எதிரிகள் விடப்படுத்தல்.
5) நிணநீர் முடிச்சுகள் வீங்குதல்.

36. Cyanobacteriaகள் தொடர்பான கூற்றுகளில் தவறானது,
1) இவற்றுள் சில பல்கலத்தாலானவை.
2) இவற்றுள் சில நீர் மாசாக்கலின் சில நிலைகளை எடுத்துக்காட்டும் காட்டிகள்.
3) சிலவகைகள் அசைவிலிகள் என்னும் ஓய்வு வித்திகளை உருவாக்குகின்றன.
4) இவற்றின் பல்லினச் சிறைப்பைகள் தகாதகாலத்தை கழிப்பதில் ஈடுபடுகின்றன.
5) இழையுருவான வகைகள் துண்டுபடுதல் மூலம் பெருக்கம் அடைகின்றன.

37. பின்வருவனவற்றில் எது பற்றீரியாக்களின் ஓர் இலிங்கமில் இனப்பெருக்கமாகக் கருதப்படுவதில்லை?
1) அரும்புதல். 2) அகவித்திகள். 3) தானியங்களை உருவாக்குதல்.
4) துண்டுபடுதல். 5) இரு கூற்றுப்பிரிவு.

38. நுண் அங்கிகளின் அகறச்சுகள் தொடர்பான கூற்றுகளில் தவறானது எது?
1) பாதிப்பை ஏற்படுத்துவதில் இழையத்தனித்துவம் அற்றவை.
2) வெப்ப உறுதி உடையவை.
3) பற்றீரியாக்களின் தற்பகர்ப்பின் பின்பு வெளியிடப்படுபவை.
4) Toxoids ஆக மாற்றக்கூடியவை.
5) நச்சுத்தன்மை குறைந்தவை.

39. கோலியுருச் சோதனை தொடர்பான கூற்றுகளில் தவறானது?
1) கோலியுருக்களால் மட்டுமே திரவ இலக்ரோஸ் ஊடகத்தை நொதிப்படையச்செய்து வாயு விளைவுகளைத் தரமுடியும்.
2) BGLB ஒரு தேர்வு ஊடகமாக செயற்பட்டு கோலியுருக்களை அடையாளப்படுத்துகின்றது.
3) குடிநீரின் தரக்கட்டுப்பாட்டில் பயன்படுகின்றது.
4) நீரில் நுண் அங்கி மாசாக்கம் இருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.
5) Eosin மெதிலீன் ஒசோர் ஊடகத்தைப் பயன்படுத்தி கோலியுருக்களை வேறுபிரித்துப் பார்க்க முடியும்.

40. உயிரியல் பீடைக்கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் நுண் அங்கி எது?
1) Penicillum notatum 2) Bacillus thuringiensin 3) Streptomyces griseus
4) Aspergillus oryzae 5) Bacillus Subtilis

41. சர்வதேச சமவாயம், வரைவேடுகள் சில அட்டவணை 1இலும், சூழல் பிரச்சினைகள் சில அட்டவணை 11இலும் தரப்பட்டுள்ளன சமவாயம்/ வரைவேடுகள் ABCD தொடர்பான சூழல் பிரச்சினைகளை சரியான ஒழுங்கில் எடுத்துக்காட்டுவது?

| சமவாயம்/ வரைவேடு | சூழல் பிரச்சினை |
|---|---|
| A - சுயஅளயச சமயவாயம் | P - ஓசோன்படலம் |
| B - முலழவழ வரைவேடு | Q - பச்சை வீட்டு வளிமாசு |
| C - வியன்னா சமவாயம் | R - ஈரநிலம் அழிவடைதல் |
| D - Bonn சமவாயம் | S - குடிபெயரும் விலங்குகள் |

1) QRPS 2) RQPS 3) SRPQ
4) SRQP 5) RPQS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நன்நீர் மீன்வளர்ப்பில் பயன்படுத்தப்படும் காப்மீன்கள் தொடர்பான கூற்றுகளில் தவறானது?
1) Rohu மீன்கள் - இவை நீரில் உண்ணிகள் ஆகும்.
2) Mirigal மீன்கள் - வாய் பகுதியில் ஒரு சோடி தொடுமுனைகள் இருத்தல்.
3) Catla மீன்கள் - இவை அடித்தள உண்ணிகள்.
4) Catle மீன்கள் - தொடுமுளைகள் அற்றவை.
5) இலங்கையின் நீர் நிலைகளில் இவை இயல்பான இனவிருத்தியடைவதில்லை.

43. நீர் வளர்ப்பு தொடர்பான திருத்தமான கூற்றை தெரிவுசெய்க.
1) விரிவான வளர்ப்பில் குறைநிரப்பி உணவுகள் பயன்படுத்தப்படுகின்றன.
2) பகுதிச்செறிவான வளர்ப்பில் நீர் முகாமைத்துவம் தேவைப்படும்.
3) விரிவான வளர்ப்பில் நீர் நிலையின் இயற்கை உணவு வளம் முழு அளவில் பயன்படுத்தப்படும்.
4) செறிவான வளர்ப்பில் நீர் நிலையின் இயற்கை உணவு வளம் முழு அளவில் பயன் படுத்தப்படும்.
5) இலங்கையில் உள்ள இறால் வளர்ப்பு பண்ணி முறை விரிவான வளர்ப்பு முறையில் அமைந்துள்ளது.

44. தென்னை இலைச்சுரங்கம் தோண்டி தொடர்பான கூற்றுகளில் தவறானது எது?
1) இவை Coleoptera வருணத்திற்கு உரியவை.
2) பாதிக்கப்பட்ட இலைகளில் கபில நிறத்து மும்புகள் காணப்படும்.
3) குடம்பி பருவநிலையால் மட்டுமே பயிரிற்கு சேதம் ஏற்படுகின்றது.
4) இதனைக்கட்டுப்படுத்த உயிரியல் கட்டுப்பாடு வெற்றியளிக்கக்கூடியது.
5) இலைச்சுரங்கத்தினுள் கூட்டுப்புருப்புழுப் பருவம் காணப்படும்.

45. பின்வருவனவற்றுள் தவறானது எது?
1) தொகுதி பூச்சி நாசினிகள் சாறு உறிஞ்சும் பூச்சிப் பீடைகளை கட்டுப்படுத்துவதில் பயன் உடையவை.
2) பைரித்தி ரொயிட்டுகள் நிலைத்து நிற்கும் மிகுதிகளை சூழலில் விடுவதில்லை.
3) காபமேற்றுகள் தொடுகை நச்சுகள் ஆகும்.
4) ஒகனோ பொசுபேற்றுகள் உயர் விலங்குகளிற்கு நச்சுத்தன்மை அற்றவை.
5) ஒகனோ குளோரின்கள் உணவுச்சங்கிலி வழியாக செறிவாக்கம் அடையக்கூடிவை.

46. Wuchereia bancrofti தொடர்பான கூற்றுகளில் எது தவறானது?
1) நிறைவுடலில் பெண்புழுகள் முட்டைகளை இடுவதில்லை.
2) மைக்குரோபிளேரியாக்கள் முட்டை மென்சவ்வினால் மூடப்பட்டவை.
3) $L_3$ குடம்பி நிலை தொற்றும் பருவம் ஆகும்.
4) இதன் இலிங்கமுறை இனப்பெருக்கம் பெண் Culex நுளம்பில் காட்டப்படும்.
5) இரவுநேரக் குருதி மாதிரிகளை சோதிப்பதன் மூலம் தொற்றுகையை அறியமுடிய்யும்.

47. பின்வரும் நெல் நோய்களில் எது ஒரு பங்கசினால் ஏற்படுகின்றது?
1) வேர் முடிச்சு. 2) புறகுறள். 3) .மடல்வெளிறல்.
4) வெண்பச்சை. 5) வெண்குஞ்சம்.

48. பின்வரும் பீடைகளின் எதன் பிரதான கட்டுப்பாட்டில் ஒட்டுண்ணிப்பூச்சிகள் பயன்படுத்தப் படுகின்றன?
1) நெற்தண்டு கோதி. 2) தென்னம் கருவண்டு.
3) தென்னை இலைச்சுரங்கம் தோண்டி. 4) தெங்கு மயிர்கொட்டி.
5) நெல் மூட்டுப்பூச்சி.

49. Ascaris தொடர்பான கூற்றுகளில் தவறானவை?
1) $L_3$ குடம்பிநிலை தொற்றும் பருவமாகும்.
2) மனிதனின் நுரையீரல்களில் இவற்றின் விருத்தி நிலைகள் இடம்பெறும்.
3) ஈரலிப்பான மண்ணின் முட்டையினுள் முளையத்தின் விருத்தி தொடரும்.
4) சிறு குடலின் உள்ளிடத்தில் அடைப்புகளை ஏற்படுத்தக்கூடியது.
5) நீர் வழியாக பரவல் அடையக்கூடியது.

50. என்பு மீன்களிலும் கசிஇழைய மீன்களிலும் காணக்கூடிய கட்டமைப்பு,
1) தட்டச்செதில்கள். 2) நீந்துதோற்பை. 3) பக்கக்கோட்டுப் புலனங்கம்.
4) பூ மூடிகள். 5) இதரவால்.

* 51 முதல் 60 வரையிலான வினாக்கள் பின்வரும் பொழிப்பாக்கப்பட்ட பணிப்புரைகளை அடிப்படையாக உடையவை.

பொழிப்பாக்கப்பட்ட பணிப்புரைகள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ABD சரியானவை | ACD சரியானவை | AB சரியானவை | CD சரியானவை | வேறுவிடை அல்லது விடைகளின் சேர்க்கை சரி |

51. செய்திகாவிப் பதார்த்தங்களாக செயற்படும் சேர்வைகள்?
A - பல்சக்கரைட் B - பொசுபோலிப்பிட் C - புரதம்
D - ஸ்ரெரெயிட்டுகள் E - நியூக்களிக்கமிலங்கள்.

52. DNA ஒரு பாரம்பரியப் பதார்ந்தமாக இருப்பதற்கு ஏற்ற இயல்புகள்?
A - நியூக்கிளியோ தயிட்டுகளின் தொடர் ஒழுங்கில் பாரம்பரிய தகவல் செமிக்கப்படுதல்.
B - நிறமூர்த்தங்களில் இருத்தல்.
C - சுயமாக இரட்டிப்பு அடைதல்.
D - குறை நிரப்பும் தன்மையுள்ள இரு பட்டிகைகளைக் கொண்டிருத்தல்.
E - பல்பகுதியச் சேர்வையாக இருத்தல்.

53. Entamoeba histolytica தொடர்பான கூற்றுகளில் சரியானது எது/ எவை?
A - முன்சிறைப்பை தனிக்கரு உடையது.
B - அனுச்சிறைப்பை பருவம் புன்னமீபாக்களை உள்ளடக்கியது.
C - அனுச்சிறைப்பை தொற்றும் பருவம் ஆகும்.
D - அது மனிதனின் பெருங்குடலில் ஒரட்டில் உண்ணியாக வாழக்கூடியது.
E - பெருங்குடலில் இருந்து முன்சிறைப்பை நிலையில் வெளியேறுகின்றன.

54. மனித உடலின் வெப்பநிலை சீராக்கலுடன் தொடர்புடைய ஓமோன்கள் எது/ எவை?
A - அதிரினலீன் B - தைரொட்சின் C - கோட்டிசோல்
D - இன்சுலின் E - அல்டோஸ்ரெறோன்

55. முன்னிலை அசைவுகள் தொடர்பான கூற்றுகளில் சரியானவை எது/ எவை?
A - தூண்டலின் திசையில் தங்கியிருக்காதவை.
B - இவை வீக்கமாற்றங்களால் மட்டும் ஏற்படுகின்றன.
C - துலங்கலின் தன்மை துலங்கல் அடையும் அங்கத்தின் கட்டமைப்பில் தங்கியது.
D - தூண்டல் காரணமாக ஓமோன்கள் சில இதன்போது காழின் ஊடாகச் செல்கின்றன.
E - மீளக்கூடிய அசைவுகள்.

56. Plasmodiumஇன் வாழ்க்கை வட்டத்தில் நுளம்பினுள் மட்டும் காணக்கூடிய விருத்திப்பருவங்கள் எது/ எவை?
A - பிளவுப் பிறப்புயிர் B - புணயிக்குழியம் C - இயங்கமுட்டை.
D - புணரிக்கலச்சிறைப்பை E - வித்துச்சிற்றுயிர்.

57. எது அல்லது எவை Reptiliaகளில் காணப்படும் இயல்புகள் ஆகும்,
A - மாக்கருவூன் உடைய முட்டைகள். B - முளைய மென்சவ்வுகள்.
C - பூரண இரண்டை சுற்றோட்டம். D - நெஞ்சறை சுவாச அசைவுகள்
E - உருமாற்றம் காணப்படுதல்.

58. Rhizobacteria கள் தொடர்பான கூற்றுகளில் எது/ எவை சரியானவை?
A - வேர்களின் சுரப்புகளில் பெரிதும் தங்கி வாழ்பவை.
B - தாவரங்களுடன் ஒன்றிய வாழ்வு காட்டுபவை
C - தாவர வளர்ச்சியைத் தூண்டும் பதார்த்தத்தை சுரப்பவை.
D - தாவர நோயாக்கிகளின் வளர்ச்சியை நிரோதிக்கும் பதார்த்தங்களை சுரக்கின்றன.
E - மண்ணின் மேற்பரப்பில் பரவல் அடைந்து காணப்படுபவை.

59. பின்வருவனவற்றுள் முற்றிலும் கடல் வாழ்க்கை கொண்ட அங்கிக்கூட்டங்கள் எது/ எவை?
A - Anthozoa B - Cephappoda C - Hydrozoa
D - Crustaceu E - Bivalvia

60. பல்லினமீன் வளர்ப்பு செய்முறை தொடர்பான கூற்றுகளில் சரியானவை எவை?
A - நீர் வளர்ப்பு தடாகத்தின் உணவு வளங்களின் உச்சப் பயன்பாட்டினை பெறமுடிதல் (Trophiclevel)
B - உயர் போசணை மட்ட உணவுத்தேவையுள்ள மீன் இனங்களை வளர்ப்பு செய்யமுடியும்.
C - இந்திய காப் இனங்களின் சேர்மானங்களை பல்லின வளர்ப்பு செய்யமுடியும்.
D - அக்கப்பற்றபிற்கு உச்ச உற்பத்தியைப் பெறமுடியும்.
E - நோயாக்கங்களின் தாக்கம் மிகப்பொதுவானதாகக் காணப்படும்.

தொடர்ச்சி அடுத்தவார இணைப்பிதழில்...

இவ் வெளியீடு தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக் களுக்கும் 071-4273035, 0716850005 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் காலை 9.30 தொடக்கம் மாலை 4.30 வரை தொடர்புகொள்ளலாம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August
மேல்மாகாணக் கல்வித்திணைக்களமும் கோழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரிப்பரீட்சைத் தொடர் 02

## தமிழ்

கடந்தவாரத் தொடர்ச்சி (21.07.09).

### பகுதி - 11

03. திருவள்ளுவர் "மானம்" என்ற அதிகாரத்தில் கூறுவனவற்றை அடிப்படையாகக்கொண்டு பின்வரு வனவற்றை விளக்குக.
1) நாம் தாழ்வதற்கு எதுவானவற்றைச் செய்யாமையினால் வருஞ் சிறப்பு.
2) அவ்வாறு செய்வதால் வரும் குற்றம். 3) மானம் பொருட்டாய சிறப்பு.

04. இராஜநாயகத்தில்,
1) முகம்மது நபி (ஸல்) அவர்களின் புகழ், 2) சுலைமான் நபி (ஸல்) அவர்களின் புகழ்,
3) மனித உடலிலுள்ள உறுப்புக்கள் முகம்மது நபியைத் தொழுவதாலேயே சிறப்புப் பெற்றன என்பவற்றை விளக்குக.

05. பரதனது சேனையைக்கண்டு இலக்குவன் இராமனிடம் கூறியனவற்றையும் அவற்றை மறுத்து இராமன் கூறியனவற்றையும் நிரைப்படுத்தி, அவ்வுரையாடலூடாக வெளிப்படும் அவ்விருவரதும் குணவி யல்புகளை மதிப்பிடுக.

06. "தமிழும் பிறமொழியும்" என்ற கட்டுரையில்,
1) தமிழுக்கும் மலையாள, கன்னட, தெலுங்கு மொழிகளுக்கும் இடையிலான தொடர்பு குறித்தும்,
2) தமிழிலிருந்து பிறநாட்டு மொழிகளுக்குப் போய் வழங்கும் சொற்களைப் பற்றியும்,
3) ஐரோப்பியத் தொடர்பு தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது என்பது பற்றியும் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை கூறியவற்றை எடுத்துக்காட்டுக.

07. அ. "தொழில்" என்னும் பாடலில் பாரதி காட்டும் தொழில்கள் எவையெனக் காட்டுக.
ஆ. தொழில் செய்பவர்களது சிறப்பினை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

08. "தவப்பயன்" சிறுகதைக்கூடாக,
1) நிர்மலானந்தரின் தவ வாழ்வு. 2) அணில் குஞ்சு வகிக்கும் பங்கு.
3) சுவர்க்கத்தில் இறைவன் சுவாமி நிர்மலானந்தருடன் உரையாடுதல்.
4) ஆசிரியரின் உரைநடைச்சிறப்பு போன்றவற்றைப் பரிசீலிக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.
1) கண்ணகிக்கும் கோப்பெருந் தேவிக்குமிடையிலான வேறுபாடுகள்.
2) இராமநாடக கீர்த்தனையில் கொலுவீற்றிருக்கும் இராவணன் முன்றலில் நடைபெறும் காட்சிகள்.
3) பாரதிதாசன் காட்டும் கடலின் அழகு.
4) நாகம்மாள் நாவலில் சித்திரிக்கப்படும் நாகம்மாள் என்ற கதாபாத்திரத்தின் குணவியல்புகள்.
5) "அக்கினிக்குஞ்சு" கவிதையில் காட்டப்படும் குறியீட்டுத்தன்மை.

## தமிழ் - II

நேரம்- 3 மணித்தியாலம்

* முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம், மூன்றாம் பகுதிகளில் ஒவ் வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிவுசெய்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி - 1

01. பின்வருவனவற்றை யாதாயினும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350 - 400 சொற்கள் கொண்ட ஒரு கட்டுரை எழுதுக.
1) பேராசிரியர் க. கைலாசபதியின் தமிழ்ப்பணிகள்.
2) திரையிசைப் பாடல்களில் பழந்தமிழிலக்கியங்கள்.
3) தமிழிற் குழந்தை இலக்கியம்.
4) காடழிப்பும் இயற்கைச் சமநிலையும்.
5) தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தொடர்பு சாதனங்களின் தாக்கம்.
6) "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

02. பின்வரும் 'அ' உரைப்பகுதியையும், 'ஆ' செய்யுட் பகுதியையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. அனல் சொரிந்து மனிதர்களை வறுத்தெடுக்கும் கடுங்கோடையில் வானம் மப்பும் மந்தார முமாய் இருந்தது. பொழுது தேயத்தேய வானம் கருமையுறத் தொடங்கிற்று.... குதிரை மீது பின்னி விழும் சாட்டை போல் விண்ணில் மின்னொளி காட்டிற்று ஒரு சமயம். மறு சமயம் மின்னலின் சுடர் வெள்ளம் அருவி போல ஆகாயத்தில் பாய்ந்தது. இடியோ வலையில் சிக்கிய விலங்கு போலக் குமுறிற்று. பிடிவாதம் பிடித்து அழும் குழந்தை போலக்காற்று ஓலமிடத் தொடங்கிற்று. அவந்தியூருக்குப் பக்கத்திலுள்ள அஞ்சனகிரி மீது சூல்கொண்ட மேகங்கள் சூழ்ந்து பைய ஊர்ந்தன. இரவும் வந்தது. மிகுந்த இருள் தன் நீண்ட சிறகை உலகத்தின் மீது பரப்பிவிட்டது. இடி, மின்னல், காற்று, இருள். இவைகளுக்கிடையே ஓயாது பெய்யும் மழையின் ஒலியும் எழுந்தது.
1) இப்பகுதியில் ஆசிரியர் எதனை வருணிக்கிறார்?
2) அவ்வருணனையில் ஆசிரியர் கையாண்ட உவமைகளுள் மூன்றினை விளக்குக.
3) இப்பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை இருபது சொற்களுக்கு மேற்படாமல் சுருக்கி எழுதுக.

ஆ. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க - கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு
1) இச்செய்யுளின் பொருளை முப்பது சொற்களுக்குக் குறையாது விரித்தெழுதுக.
2) பாடலின் மையப்பொருளை விளக்கப் புலவர் கையாண்ட உத்தி யாது? விளக்குக.
3) "கரும்பூர்ந்த சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன் கோதுபோற் போகுமுடம்பு" என்னும் சொற்றொடர் உணர்த்தும் கருத்தை விளக்குக.

03. பின்வரும் பதினைந்து வினாக்களும் அ, ஆ, இ என மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் எவையேனும் இரண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

அ) 01. " பச்சைக்கிளி சுதந்திரமாகப் பறந்து திரிந்தது; பாடி மகிழ்ந்தது. இது எவ்வகை வாக்கியம்? (தனிவாக்கியம்,தொடர்வாக்கியம்,கலப்புவாக்கியம், கூட்டுவாக்கியம்)
02. நிலங்கடந்தான், சுடுசோறு, வட்டக்கல், பால்நிலவு - இத்தொகைகளை இனங்கண்டு கூறுக.
03. "அவர்களுள் இவனே இளையவன்" இதில் ஏகாரம் என்ன பொருளில் வந்துள்ளது?
04. உரல், நாக்கு, உயிர், பெய்து - இவற்றுள் முற்றியலுகரச் சொல் எது?
05. எவன்? யார்? இவன் உன் தம்பியே? - இவற்றை அகவினா, புறவினா என வகைப்படுத்துக.

ஆ) 06. ஓடுதல், பாடுதல், ஆடுதல் ஆகிய சொற்களைப்பிரித்தால் கிடைக்கக்கூடிய வினைச் சொற்களையும் தொழிற்பெயர் விகுதிகளையும் காட்டுக.
07. சொத்தான், நடந்தனன், வந்தனன் ஆகிய சொற்களைப் பிரித்துக்காட்டுக.
08. பின்வரும் வாக்கியத்தில் காணப்படும் பேச்சு வழக்குச் சொற்களைச் செவ்விய வழக்குச் சொற்களாக்குக.
* புட்டு வித்த பணத்துக்கு வெத்திலையும் பொயிலையும் வேண்டினான்.
09. பின்வரும் சொற்களை இரு பொருள்பட விளக்குக.
1. வாருமிரும்படி 2. காசாலேசா
10. இது நம்முடைய பாடசாலை
இது எங்களுடைய பாடசாலை இவ்விரு வாக்கியங்களுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைக்காட்டுக.

இ) 11. பின்வரும் உடன்பாட்டு வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றிக்காட்டுங்கள்
1) நீங்கள் நாளைக்கு வாருங்கள். 2) நான் நாளைக்கு வருவேன்.
12. பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக்காட்டுவதுடன் அவ்வாக்கியத்தைத் திருத்தியும் எழுதுக.
மன்னார் மாவட்டத்தில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.
13. பின்வருவனவற்றுள் துணைவினைகள் எவை?
1) நீ நாளைக்கு வீட்டுக்கு வா. 2) நான் வந்து ஒரு மாதம் முடிந்தது.
3) இந்த மரம் விழப்போகிறது. 4) ஆசிரியர் செய்யுளைப்பாடினார்.
14. "இராமனோடு தம்பி சென்றான்" என்னும் வாக்கியத்திலுள்ள உருபும் பொருளும் யாது?
15. "வீடு எரிந்தது."
"பசு புல் மேய்ந்தது" இவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை எது?

### பகுதி - 11

04. அ. அகத்திணைப்பாடல்களின் தனிப்பண்புகள் எனக்கூறக்கூடியவை யாவை?
ஆ. அகத்திணைப்பொருள் மரபு பல்லவர் காலத்தில் எவ்வாறு கையாளப்பட்டது?
05. அ. தமிழ்ச்செய்யுள் மரபிலும் பொருள் மரபிலும் திருத்தக்கதேவர் தோற்றுவித்த மாற்றங்களைத் தெளிவுறுத்துக.
ஆ. அம்மாற்றங்கள் சோழப்பெருமன்னர் கால இலக்கிய வளர்ச்சிக்கு எவ்வாறு ஆதாரமாக அமைந்தன என்பதைப் பரிசீலிக்குக.
06. அ. விஜயநகர - நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ. இக்காலப் பொதுமக்கட் சார்பான இலக்கியங்களின் பண்புகளை விளக்குக.


### பகுதி - 111

07. அ. போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்து இலங்கைப்புலவர்களை வரிசைப்படுத்துக.
ஆ. அப்புலவர்களின் படைப்புக்கள் யாவை?
இ. சந்தியோகுமையர் அம்மானை அல்லது பறாளை விநாயகர் பள்ளு பற்றிக்குறிப்புரை தருக.
08. புராணம் என்றால் என்னவென்பதனை விளக்கி இலங்கைப் புலவர்களால் இயற்றப்பட்ட புராணங்கள் பற்றிக்கருத்துரை வழங்குக.
09. பின்வருவோருள் யாதேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
அ. [illegible] தாமோதரம்பிள்ளை. ஆ. நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.
இ. இலங்கையர்கோன். ஈ. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.
உ. [illegible] இராசரத்தினம்

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



# இராமலிங்கம் குமாரசாமி (பெரியாம்பி)

## (இ.போ.ச. முன்னாள் ஊழியர், வல்வெட்டி)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியாம்பி என அழைக்கப்படும் இராமலிங்கம் குமாரசாமி 22.07.2009 அன்று ரொரன்ரோ, கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா- செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் கிளி என அழைக்கப்படும் நல்லமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசா சின்னத்துரை, சாமிநாதன், தங்கம்மா மற்றும் சின்னக்கிளி (வல்வெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சறோஜினிதேவி (தவம்- வல்வெட்டி), ரஞ்சினிதேவி (சுதா- கனடா), பத்மலோஜினிதேவி (பத்மா- கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சதாசிவம் (துரை- வல்வெட்டி), உலகநாதன் (உலகன்), குமரகுரு (அழகன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் சர்மிளன், ஜீவராஜ், தர்மராசன், சந்திரன், பிரபாகரன், தயாபரன், மயூரன், அகிலன், கஜந்தன், கார்த்திகா, தபிசன், சாழினி, ரோசான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜெனிசயனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (26.07.2009) ஞாயிற்றுக்கிழமை கனடா நேரப்படி பிற்பகல் 5 மணி முதல் 9 மணிவரை இலக்கம் 4164, **SHEPPARD AV EAST** இல் அமைந்துள்ள **OGDEN FUNERAL HOME** இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை அதே மண்டபத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் 10.30 மணிக்கு 256, **KINGTON ROAD** இல் அமைந்துள்ள **ST.JONS NORWAY CEMETERY** இற்கு எடுத்துச் செல்லப்பட்டு, 11 மணிக்குத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கிளி (மனைவி)- 416-551 5898,
அழகன் (மருமகன்)- 647-869 3509, 416-265 5879,
உலகநாதன் (மருமகன்)- 416- 417 9027,
ஜீவராஜ்- 416 822 8427.

தகவல்: நா.சதாசிவம் (துரை),
வேவில் பிள்ளையார் கோயிலடி, வல்வெட்டி.
T.P.:0771894162.

(87339)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றி தென்மராட்சி வலய மட்டத்தில் முதலிடம் பெற்ற நவிலட் பாடசாலை செவிப்புலனிழந்த மாணவர்களும், பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றி தென்மராட்சி வலய மட்டத்தில் 3ஆம் இடம் பெற்ற நவில்ட் பாடசாலை செவிப்புலனிழந்த மாணவிகளும், அதிபர், சிரேஷ்ட ஆசிரியர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுடன் நிற்பதைப் படங்களில் காணலாம்.

## மாகாணமட்ட ஆண்களுக்கான எல்லே போட்டி சம்பியனானது யாழ்.மாவட்ட அணி

வலி.வடக்கு, ஜூலை 27

வட மாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் மாகாண மட்டதத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியில் யாழ்.மாவட்ட அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

முதலில் விளையாடிய யாழ்.மாவட்ட அணி 8ப் பெற்றுக்கொண்ட போதிலும் மன்னார் மாவட்ட அணி 6ஐ மட்டுமே பெற்றுக்கொண்டது.

இரண்டாம் இனிங்சில் விளையாடிய யாழ்.மாவட்ட அணி 13 களைப் பெற்றுக் கொண்டது.

இந்நிலையில் மன்னார் மாவட்ட அணியினர் 12 பெற்று அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

ஆட்ட நிறைவில் யாழ்.மாவட்ட அணி 21:18 என்ற நிலையில் மன்னார் மாவட்ட அணியை வீழ்த்தி வடமாகாண எல்லே சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(04-86)

## பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி வடமாகாணச் சம்பியன்!

வலி.வடக்கு, ஜூலை27

வட மாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் வடமாகாண மாவட்ட தெரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் மன்னார் மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணியகளும் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பந்தை எதிரணியினரின் கோல்கம்பத்திற்கு மாறி மாறிக் கொண்டு சென்ற போதிலும் பின்னணி வீராங்கனைகள் சிறப்பாகத் தடுத்துநிறுத்தி விளையாடியதால் கோல்கள் பெறும் முயற்சிகள் இரு அணிகளுக்கும் கைகூடவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே கோல்கள் பெற்றே ஆக வேண்டும் என்ற துடிப்புடன் புத்துணர்ச்சி பெற்று மோதிக்கொண்டன.

யாழ்.மாவட்ட முன்னணி வீராங்கனை தனக்குக் கிடைத்த பந்தொன்றை இறுதி நிமிடத்தில் கோல்கம்பத்தில் அற்புதமாக செலுத்தி ஒரு கோலைப் பெற்றுக் கொண்டார்.

இதனால் யாழ்.மாவட்ட அணி 1:0 என்ற கோல்கணக்கில் மன்னார் மாவட்ட அணியைத் தோற்கடித்து, மாகாணச் சம்பியனாகி தேசிய மட்டத்தில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது.

(04-86)

## இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட தடகளப் போட்டிகளின் முடிவுகளில் சில

வலி.வடக்கு, ஜூலை 27

யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்திய தடகள விளையாட்டுப் போட்டிகளில் 13க்கும் 20 வயதுக்கும் இடையிலான ஆண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விவரம் வருமாறு:

**100 மீற்றர் ஓட்டம்:**

எஸ்.அனிஸ்ரன் (தெல்லிப்பழை), எஸ்.குமணன் (கரவெட்டி), எஸ்.பகீரதன் (யாழ்ப்பாணம்).

**200 மீற்றர் ஓட்டம்:**

எஸ்.அனிஸ்ரன் (தெல்லிப்பழை), எஸ்.றூபிநாத் (உடுவில்), பி.ஓஸ்மன்டி ஜெரி (கரவெட்டி).

**400 மீற்றர் ஓட்டம்:**

எஸ்.அனிஸ்ரன் (தெல்லிப்பழை), எஸ்.றூபிநாத் (உடுவில்), எஸ்.சுசிதன் (கரவெட்டி).

**800 மீற்றர் ஓட்டம்:**

எஸ்.றூபிநாத் (உடுவில்), எஸ்.சுசிதன் (கரவெட்டி), எஸ்.அகில்ராஜ் (தெல்லிப்பழை),

**1500 மீற்றர் ஓட்டம்:**

எஸ்.ரஜீவ்குமார் (கரவெட்டி), எஸ்.பகீரதன் (யாழ்ப்பாணம்), எஸ்.அகில்ராஜ் (தெல்லிப்பழை).

**10000 மீற்றர் ஓட்டம்:**

எஸ்.தனஞ்செயன் (பருத்தித்துறை).

**வேகநடை:**

எஸ்.சத்தியராஜ் (யாழ்ப்பாணம்).

**உயரம் பாய்தல்:**

ஆர்.நிரூஜன் (தெல்லிப்பழை), ஏ.பிரசாந் (யாழ்ப்பாணம்), கே.தினேஸ்காந் (யாழ்ப்பாணம்).

**தட்டெறிதல்:**

வி.ஹரிகரன் (பருத்தித்துறை), எஸ்.அரவிந்தன் (தெல்லிப்பழை).

**குண்டெறிதல்:**

எஸ்.அரவிந்தன் (தெல்லிப்பழை).

**ஈட்டி எறிதல்:**

ஆர்.பார்த்தீபன் (உடுவில்), எஸ்.அரவிந்தன் (தெல்லிப்பழை), எம்.சுதன் (தெல்லிப்பளை).

**4 X 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்:**

கரவெட்டி பிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

**4 X 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்:**

கோப்பாய் பிரதேச செயலகம், உடுவில் பிரதேச செயலகம்.

(04-86)

### 15 வயதுப் பிரிவு கிரிக்கெட்

## பரபரப்பான போட்டி ஆட்டத்தில் சென். ஜோன்ஸை வீழ்த்தியது கொக்குவில் இந்து!

வலி.வடக்கு, ஜூலை 27

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 15 வயதுப்பிரிவுக்கான போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக்கல்லூரி 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 42.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.சிவலக்சன் 30 ஓட்டங்களையும் எட்வின் ஜோய் 12 ஓட்டங்களையும் கவாஸ்கர் 11ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். 43 ஓட்டங்கள் உதிரிகளாகப் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செந்தூரன் 7.2 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 11 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், சிலோஜன் 07 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஆதித்தியன், நிரோஜன், பார்த்தீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார் கள்.

140 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 33.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

சிலோஜன் 46 ஓட்டங்களையும், சத்யன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 46 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எட்வின் ஜோய் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கவாஸ்கர் 8.4 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் சிவலக்சன் 08 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், துஸ்யந்தன் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(04-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### 17 வயதுப் பிரிவு கிரிக்கெட்

## துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் ஹரிவதனன் அபாரம்; கொக்குவில் இந்துவை இலகுவில் வென்றது சென்.ஜோன்ஸ்

வலி.வடக்கு, ஜூலை27

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாண பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 'சுப்பர்சிக்ஸ்' போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக்கல்லூரியும் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஹரிவதனன் 89 ஓட்டங்களையும், டக்சன் 30 ஓட்டங்களையும், எடிரின் 25 ஓட்டங்களையும், ரஜிந்தன் 19 ஓட்டங்களையும், ஆனந் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 32 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சாம்பவன் 10 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும், ஜனுதாஸ் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் திவாகர் 5 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

223 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 26.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

பங்கஜன் 23 ஓட்டங்களையும், உத்தமன் 18 ஓட்டங்களையும், ஞானாநந்த சர்மா 1[illegible] ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 13 ஓட்டங்களும் பெற்றப்பட்டன.

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஹரிவதனன் 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 32 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் சஞ்சீவன் 1.5 ஓவர்கள் பந்துவீசி 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மதுசன், ஆனந் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

(04-86)

## திணைக்களங்களுக்கிடையேயான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மாநகர சபை அணியை வென்றது கூட்டுறவுச்சங்க அணி

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் பிரதம தபாலக விளையாட்டுக்கழகம் திணைக்களங்களுக்கிடையே கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற சுற்றுப்போட்டி ஆட்டமொன்றில் யாழ்.மாநகரசபை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விளையாட்டு கழக அணி களமிறங்கியது.

இதில் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க அணி இரண்டு நேர் சுற்றுக்களிலும் யாழ்.மாநகரசபை அணியை வெகு எளிதாகத் தோற்கடித்து வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

(04-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் நவீன நாடகத்தின் தந்தை கலையரசு சொர்ணலிங்கம்

## இன்று அவரது நினைவு தினம்

கலையரசு க.சொர்ணலிங்கம் 30.03.1889 அன்று பிறந்தார். இவருடைய சொந்த இடம் மானிப்பாய். திருவாளர் சு.கனகரத்தினத்தினை [லோற்றன்] தந்தையாகவும் செல்லம்மாவை தாயாகவும் பெறபேறு பெற்றவர் கலையரசு. ஏனெனில் இவருடைய நாடக வளர்ச்சிக்கு தந்தையாரின் உந்து சக்தியே காரணமாக இருந்தது. தந்தையாருடன் சென்று நாடகம் பார்ப்பதும், மூதாதையர் கலைகள் மீது மிகுந்த ஆர்வங்கொண்டு இருந்தமையும், அக்காலத்தில் வீட்டில் பலவிதமான வாத்தியக் கருவிகள் இருந்தமையும் நாடகம் மீதான இவருடைய ஈடுபாட்டுக்கு மேலும் வலுவூட்டின. இதை கலையரசுவின் நாடகமும் நானும் என்ற நூலில் இருந்து தெளிவாக அறியமுடிகிறது.



ஊரில் நடக்கும் நாடகம் பார்த்துவிட்டு வந்ததும் தானே நடித்து வசனங்களைப் பேசிப் பார்த்திருக்கின்றார். இவைதான் நாளடைவில் அவருக்குள்ள நாடக ஆர்வத்தைத் தூண்டியுள்ளது. இந்தியாவில் இருந்து வருடா வருடம் தஞ்சாவூர்ப் பக்கத்து நாடகக் கோஷ்டிகள் யாழ்ப்பாணம் வந்து கிராமங்களில் நாடகங்களை நடத்தி வந்தன. இவர்கள் கலையரசு க. சொர்ணலிங்கத்தின் குடும்பத்திற்கு சொந்தமான காணியிலிருந்த ஒரு வீட்டில் தான் தங்கியிருப்பர். இந்த வாய்ப்பின் ஊடாக தனது நாடக அனுபவங்களை சொர்ணர் வளர்த்துக் கொள்பவர் ஆனார். நாடகம் இல்லாத வேளைகளில் நாடகக் கலைஞர்கள் தந்தை யாரைச் சந்திக்க வரும்போது இவரு டைய அண்ணன்மாரும் தந்தையின் கீழ் வேலை செய்பவர்களும் பாடவைத்துக் கேட்டுக் கொண்டு இருக்கும் வேளையில் சிறுவனாகிய கலையரசர் இப்பாடல்களில் அங்கும் இங்கும் சிலவற்றைப் பொறுக்கிக்கொண்டு தன்பாட்டிலே பாடித்திரியும் திறன் கொண்டவராக காணப்பட்டார்.



இவருடைய தந்தையாரும், சிறிய தந்தையாரும் முறைப்படி சங்கீதம் கற்றவர்கள். வயலின், மிருதங்கம் வாசிக்கக்கூடிய வர்கள். சிறிய தந்தையார் மாலை ஏழு மணிக்குப் பின்பு வழக்காளிகளைப் பார்க்கமாட்டார். இராப்போசனத்தை முடித்துக்கொண்டு மிருதங்கம் வாசிப்பதிலும், பாடுவதிலும் தனது பணியாளர்களுக்கும், குதிரைக்காரப் பையனுக்கும் இவற்றைக் கற்பிப்பதை வழக்கமாக்கிக் கொண்டவர். இது சொர்ணலிங்கத்தின் நாடக வளர்ச்சியை மேலும் தூண்டியது. 31.12.1901ஆம் ஆண்டு மானை இந்து விநோத சபாவில் தேவதாசனாக பாத்திரம் ஏந்தி நடித்தது கலையரசு சொர்ணலிங்கத்தின் முதல் நாடகம் ஆகும்.

தமிழ் நாடக உலகின் பிரபல கலைஞரான சென்னை மேற்சபை அங்கத்தவராகவும் விளங்கிய அவ்வை ரி.கே.ஷண்முகம் அவர்கள் கலையரசுவை வியந்து கூறியதை இங்கு ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. தவத்திரு சங்கரதாச சுவாமிகளின் நல்வாழ்த்தினையும் பெற்றவர் கலையரசர். நாடகப் பேராசிரியர் பத்மபூஷணம் பம்பல் சம்பந்த முதலியாரை நாடகப் பேராசானாகக் கொண்டவர். மனோகரா, வேதாள உலகம், வாணிபுரவணிகன், பாதுகா பட்டாபிஷேகம், பக்தமீரா, தேரோட்டி மகன் முதலிய நாடகங்களில் மனோகரன், தத்தன், ஷைலக், கூனி, சகுனி, விஸ்வாமித்திரர், பரதன் ஆகிய பல்வேறு குணப்பண்புகளைக் கொண்ட பாத்திரங்களை நடித்துள்ளார். ஆண், பெண் வேடம் தாங்கும் தன்மை கலையரசின் நடிப்பாற்றலைப் புலப்படுத்தி நிற்கின்றது. கலை உலகிற்கே உரித்தான தென்று பலர் கருதிவரும் தீய பழக்கங்கள் எதுவும் இவரைத் தீண்டவில்லை. இது கலைஞனின் ஆரோக்கியமான வாழ்வையும், பண்பையும் இன்றைய சமூகத்திற்கு எடுத்துக்காட்டுகிறது. சொர்ணருடைய வாழ்க்கை வரலாறு இலங்கையின் நாடக வளர்ச்சியோடு பின்னிப்பிணைந்த தொன்றென்று கூறினால் மிகையாகாது.

ஒரு நடிகன் தனக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்தைத் துல்லியமாக வெளிப்படுத்த வேண்டும் என்பதைத்தான் நடித்த கூனிப்பாத்திரம் மூலம் இவர் வெளிப்படுத்தியுள்ளார். இதற்காக கூனியின் வாய்ச்சப்பல், சிரிப், பேச்சு அத்தனையும் பல கிழவிகளிடமிருந்துதான் கற்றதாக சொர்ணலிங்கம் கூறியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது.

இவர் சிறந்த நாடகங்களை நெறிப்படுத்திப் பல நடிகர், நடிகைகளையும் உருவாக்கியுள்ளார். இவரது மாணவர்கள் பலர் இன்று கலையுலகில் பிரகாசிப்பதை நாம் காண்கிறோம். எவரிடம் கலைத்திறமை இருக்கின்றதோ அவரைப் பாராட்ட இவர்தயங்குவதில்லை. எதுவித பேதங்களையும் பாராதவர். கலை நிகழ்வுகளுக்கு மத்தியஸ்தராகப் பணியாற்றும் போது கலைக்கே மதிப்புக்கொடுத்து தீர்ப்பு வழங்குவார். பாரபட்சம் காட்டாத இத் தன்மை வரவேற்புக்குரியது. சரியான தீர்ப்பை நியாயபூர்வமாக உறுதி செய்து கொள்வார். இதனால் கலையரசு மீது கலைஞர்கள் அபரீதமான நம்பிக்கையும், மதிப்பும் கொண்டிருந்தனர். இன்றைய கலைப்போட்டிகளுக்கு தீர்ப்பு வழங்கச் செல்பவர்கள் சொர்ணலிங்கம் அவர்களின் செயற்பாட்டை தமக்குள் போட்டுப் பார்ப்பது தேவையாக உள்ளதுடன் தமக்குத்தாமே மதிப்பீடு செய்வதாகவும் அமையும்.

07.07.1913 அன்று இலங்காசுபோதவிலாச சபா என்ற நாடகமன்றத்தினை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நிறுவி, அக்கால சமூக அமைப்பிலே முக்கிய அந்தஸ்துப் பெற்றிருந்த ஆங்கில வைத்தியர்களையும், வழக்கறிஞர்களையும், ஆசிரியர்களையும், உயர் அரசாங்க உத்தியோகத்தர்களையும் அம்மன்ற உறுப்பினராகக் கொண்டு நாடக உலகில் ஒரு விழிப்பையும், எழுச்சியையும் உண்டாக்கியவர் கலையரசு சொர்ணலிங்கம் இவருடைய தந்தை யார் நடிப்பதற்கு அனுமதி வழங்கியபோது "நீ ஒரு நடிகனாகப் பங்கு பற்றியோ அல்லது வேறு யாரையும் கொண்டு நாடகம் நடத்தியோ அல்லது எந்த விதத்திலோ இந்தக் கலையைக் கொண்டு ஒரு சதமாவது சம்பாதிக்கக் கூடாது" எனத் தனக்கு வாக்குறுதி தரும்படி கூறியதை ஏற்றுச் செயற்பட்டவர். இப்பண்பு ஓர் உண்மையைத் தெளிவாக விளக்குகின்றது. 'கலைஞன் கலைவணிகனாக' இயங்கினால் அவன் வளர்க்கும் கலை தூய்மையையும், மதிப்பையும் இழக்கின்றது என்பதாகும். இலங்கா சுபோத விலாச சபா மூலம் இவர் பல நாடகங்களை மேடையேற்றினார்.

சிறந்த நடிகராக வர விரும்புபவர்கள் தன்னை மறக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். அதாவது மேடையில் தோன்றி நடிக்கும்போதுதான் நடிப்பதாக எண்ணக்கூடாது. என்ன பாத்திரமாக நடிக்கின்றானோ அப்பாத்திரமே தான் என்ற உணர்ச்சியைப் பெறவேண்டும். பாத்திரத்தைச் சரியாக உணர்ந்து அதற்கு ஏற்றவாறு பேசி முகபாவத்தினையும், அங்க அசைவுகளையும் அமைத்துக்கொள்ள வேண்டும். இதுவே நடிப்பின் இரகசியம் ஆகும். சிறிய பாத்திரங்களை நெறியாளர் வழங்கும்போது கூட அதனை ஏற்கும் மனபலத்தை நடிகர் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு நடிகனின் உடல், குரல் வளத்தைக் கொண்டே நெறியாளர் பாத்திரங்களை வழங்குவார். இதனை சொர்ணர் செயற்பாட்டின் மூலம் காட்டியுள்ளார். 1922 ஆம் ஆண்டு 'லீலாவதி சுலோசனா' என்னும் நாடகத்தில் கொலையை நிறைவேற்றுவோன் பாத்திரத்தை உவகையோடு ஏற்று நடித்தார். நடிகருக்கு அடக்கமும், கட்டுப்பாடும், பணிவும் இன்றியமையாதன என்பதை இன்றைய சமூகத்திற்கு அன்றே எடுத்துக் காட்டியுள்ளார் அவர். கலையரசு அவர்கள் நாடகங்களை விமர்சனம் செய்யும்போது உளவியலாளர்களின் கருத்துக்கு ஏற்பவும், சிறந்த விமர்சகர்களுக்குரிய பாங்கிலும் தனது பணிகளை ஆற்றியுள்ள சிறந்த பண்புகளைச் சுட்டிக்காட்டுவார்; பாராட்டுவார். அத்தோடு நின்றுவிடாமல் திருத்துவதற்குரிய விடயங்களையும் எடுத்துக்கூறுவார். குறைகளைக் கூறவும் பின்வாங்கமாட்டார். எனினும் அவற்றினை பொருத்தமான முறையில் கூறும் பண்புடையவர். திறம்பட யாராவது நடித்தால் நாடகம் முடிந்ததும் மேடைக்குச் சென்று தனிப்பட்ட முறையில் அவர்களை வாழ்த்தி ஊக்கமளிப்பார் கலையரசு சொர்ணலிங்கம்.

ஒரு பாத்திரத்தினை குணசித்திரப்படி நடிப்பதற்கு ஒப்பனை ஏற்றபடி செய்யவேண்டும். இதை சொர்ணர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார். ஒப்பனை சீராகச்செய்து பாத்திரமாக மாறும்போது அரங்கில் நடிக்க இலகுவாக இருக்கும். இதில் உண்மையும் உண்டு. அதுவும் தானாகவே தனது ஒப்பனைகளைச் செய்து கொள்ளப் பழகிக் கொண்டால் மிகவும் நல்லது. ஏனெனில் ஒப்பனை செய்யும்போதே ஒரு நடிகன் தனது பாத்திரத்தின் குணங்களை உணர்ந்து அதற்கேற்ப ஒப்பனை செய்துகொள்வான். அதனால் அந்தப் பாத்திரமாகவே மாறிவிடுவான். ஒப்பனை விடயத்தில் கலையரசு அவர்கள் தனக்குத் தானே செய்வது வழக்கம். பாத்திரத்தை ஏற்றுத் திட்டமிட்டு அதற்கேற்றவாறு வேடமிட வேண்டும். சிலவேளைகளில் ஒப்பனைக்காரர்கள் பாத்திரத்தின் தன்மை விளங்காது அவர் இஷ்டப்படி செய்துவிடுவதுமுண்டு.

கலையரசு அவர்களின் ஐம்பது வருட கலைச் சேவையைப் பாராட்டி 07.03.1953அன்று கொழும்பு சைவமங்கையர் கழக மண்டபத்தில் இடம்பெற்ற பாராட்டு வைபவத்தில் சபையோர் மத்தியில் அதிகார் ஏ.செல்லமுத்து அவர்களினால் "கலையரசு" என்ற பட்டம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 25.04.1953அன்று நகரசபை மண்டபத்தில் மந்திரி அ.நடேசன் அவர்களினால் நாடக கலாமணி என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1960ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகைக்காரர் நடத்திய கலைவிழாவின்போது நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை அழைத்து "கலைக்குரிசில்" என்ற பட்டத்தையும் கலையரசு மூலம் வழங்கிக் கௌரவித்தமை ஞாப கத்துக்குரியது ஆகும்.

1963ஆம் ஆண்டு ஒறியன்ற் மன்றத்தார் நல்லூர் கைலாயபிள்ளையார் தேர்த்திருப்பணி நிதிக்காக 'தேரோட்டி மகன்' நாடகத்தை நடத்த வேண்டிய



வேளை முழுமையாகப் பணியாற்றினார் சொர்ணர். அப்போது அவருக்கு எழுபத்தைந்து வயதாகிவிட்டது. எனினும் கலையரசர் முதுமையிலும் நடிப்பைக் கைவிடவில்லை. தொடர்ந்தும் கலை உலகிற்கு தன்னை அர்ப்பணித்தவர். எண்பதாவது வயதில் கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலைச் சமூகம் இவரைக் கௌரவித்தமை பாராட்டுக்குரியது. கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் 26.07.1982அன்று இயற்கை எய்தினர்.

"கலையின்பமே நிலையான இன்பம்" ★

நாடக கலாவித்தகர் சி.சிவராஜன்,
அதிபர்,
யா/பன்னாலை சேர் கனகசபை
வித்தியாலயம், தெல்லிப்பழை.

ஸ்ரீமத் முத்துகுமாரு மயில்வாகனம் சுவாமிகளின்
24ஆவது குருபூசை தினம்



காலம் : நாளை (28.07.2009) செவ்வாய்க்கிழமை
இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
விசேட நிகழ்வு: 'இசைச்சொற்பொழிவு"
வழங்குபவர்: திரு.க.ஆனந்தராசா
(அன்னைதாஸன்) அவர்கள்

வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை, அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. சந்நிதியான் ஆச்சிரமம்.

(சி/559907)

## குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு கற்றல், விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை27

குடாநாட்டு பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஒரு தொகுதி விளையாட்டு பொருள்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன எடுத்துவரப்பட்டுள்ளன.

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட இந்த விளையாட்டுப் பொருள்கள் உடனடியாக இறக்கப்பட்டு யாழ்.மேலதிக மாகாண கல்வி அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இவற்றுள் விளையாட்டு உகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன அடங்கும் எனவும் விரைவில் அவை பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (203-224)

## முன்பள்ளி விளையாட்டு நிகழ்வு

நீர்வேலி- அச்செழு குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை பி.ப 2மணிக்கு நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் பா.சசிக்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் க.நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (04-72)

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 19 ✱ 05 ✱ 1917



இறைவன் அடியில் 18 ✱ 07 ✱ 1999

சின்னத்தம்பி சின்னையா
(திதி:ஷஷ்டி 27.07.2009)

தந்தையுமாகினாய், தாயுமாகினாய்
ஈரைந்து ஆண்டுகள் சென்றாலும்
ஈரவிழிகளில் உங்கள் நினைவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

212, சென்.பெனடிக்ற் றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(87353)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் உளவுப் படையே தீவிரவாதிகளை முடுக்கி விடுகிறது

வாஷிங்டன், ஜூலை 27

இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில், பாகிஸ்தான் உளவுப்படை தான் தீவிரவாதிகளைத் தூண்டி விடுகிறது என அமெரிக்க இராணுவ உயர் அதிகாரி குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானை மையமாக கொண்டு செயற்படும் தீவிரவாதிகள், இந்தியாவில் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். அது போல ஆப்கானிஸ்தானிலும் தலிபான், அல்-குவைதா தீவிரவாதிகள் வன்முறை செயல்களில் ஈடுபடுகின்றனர். இந்த தீவிரவாத செயல்களின் பின்னணியில் பாகிஸ்தான் உளவுப்படை செயற்படுகிறது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இராணுவ அதிகாரிகளின் தலைவர் அட்மிரல் மைக் முல்லன் 'அல்-ஜசீரா', தொலைக்காட்சிக்கு இது குறித்து பேட்டி அளித்துள்ளார். கடந்த ஓராண்டில் மட்டும் அவர் 12 தடவைகளுக்கு மேலாக பாகிஸ்தானுக்கு சென்று வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழ்நிலையில், முல்லன் தாம் அளித்துள்ள பேட்டியில் பின்வருமாறு கூறியுள்ளார்:-

''பாகிஸ்தான் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. அமைப்பே, இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானிலும் தீவிரவாதத்தை வளர்த்து வருகிறது. அதற்கு ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. அதன் மூலமாக அண்டை நாடுகளில் தேவையற்ற வீண் குழப்பங்களை அந்த அமைப்பு ஏற்படுத்தி வருகிறது.

''காஷ்மீரில் பல்வேறு தீவிரவாத அமைப்புகள் உள்ளன. அவை அனைத்துக்கும் தேவையான எல்லா உதவிகளையும் ஐ.எஸ்.ஐ. செய்து கொடுக்கிறது. அதன் மூலமாக இந்தியாவில் நாச வேலைகளை ஐ.எஸ்.ஐ. பரப்புகிறது.

''ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள பழங்குடி இன மக்களின் உதவியோடு அங்கு தீவிரவாதத்தை பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. தூண்டி வருகிறது. தலிபான் தீவிரவாதிகளுடன் ஐ.எஸ்.ஐ. அமைப்புக்கு இரகசிய தொடர்பு உண்டு. இதை என்னால் வெளிப்படையாக, விரிவாக கூற முடியாது.

''அதேநேரத்தில், தங்கள் நாட்டின் பாதுகாப்புக்காகவே இத்தகைய செயல்களில் தாங்கள் ஈடுபடுகின்றனர் என ஐ.எஸ்.ஐ. அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆப்கானிஸ்தானில் நடைபெறும் தீவிரவாத வன்முறை செயல்கள் அனைத்துக்கும் ஐ.எஸ்.ஐ. அமைப்பே காரணமாகும்.

''எதிர்காலத்தில் தன்னுடைய வியூகத்தை ஐ.எஸ்.ஐ. மாற்றிக்கொள்ளும் என நம்புகிறேன். கிழக்கிலும், மேற்கிலும் தீவிரவாதத்தை தூண்டி விடுவதை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும். இந்தியாவிலும் ஆப்கானிஸ்தானிலும் தீவிரவாதிகளை ஊக்குவிப்பதை அது கைவிட வேண்டும்.

''இது தொடர்பாக பாகிஸ்தான் தலைவர்களுடன் அமெரிக்கா பேச்சு நடத்தி வருகிறது. இது சவாலான பணியாகும். எனினும், இரண்டு நாடுகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு ஒரு நல்ல தீர்வு காணப்படும். அதேநேரத்தில், பல சாதகமான உளவுத்துறை தகவல்களை அமெரிக்காவுக்கு ஐ.எஸ்.ஐ. அமைப்பு வழங்கி வருகிறது.'' -இவ்வாறு முல்லன் தெரிவித்துள்ளார்.

## முதலாவது உலகமகா யுத்த வீரர் பேச் 111 ஆவது வயதில் மரணம்



லண்டன், ஜூலை 27

முதலாவது உலக மகா யுத்தத்தில் பங்கு பற்றிய பிரிட்டிஷ் இராணுவ வீரர் ஹரிபெச் தமது 111 ஆவது வயதில் காலமானார். பெச் தனது 18 ஆவது வயதில் இராணுவத்தில் சேர்ந்தார். பின்னர் படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெற்றார்.

இவரது மறைவுக்கு பிரிட்டிஷ் மகாராணியார், பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுண் ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். பிறவுண் தமது இரங்கற் செய்தியில், ஹெரிபெச்சின் மறைவையொட்டி தேசிய ஞாபகார்த்த நிகழ்ச்சியொன்றும் இடம்பெறும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

1917 ஆம் ஆண்டு, சைப்ரஸிலுள்ள பச்சன்டாயிசி என்னுமிடத்தில் ஜேர்மன் படையோடு மூண்ட உக்கிர சண்டையில் ஹரி பெச் பங்குபற்றியிருந்தார். இச்சண்டையில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் சிப்பாய்கள் மடிந்துள்ளனர்.

உலக மகா யுத்தத்தில் பங்குபற்றிய மற்றுமொரு வயது முதிர்ந்த இராணுவ வீரரான ஹென்றி எலிங்ஹாம், தமது 113 ஆவது வயதில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் காலமாகிவிட்டார். இவர் பிரிட்டிஷ் கடற்படையிலும் விமானப்படையிலும் சேவையாற்றியவராவார்.

உலக மகா யுத்தத்தில் பங்குபற்றிய மற்றுமொரு வீரரான கிளூ சோலஸ் தற்போது ஆஸ்திரேலியாவிலுள்ள பேத்தில் வசித்து வருகிறார். இவருக்கு வயது 108. இவர் கடற்படையில் சேவையாற்றி வந்தவர்.

## ஓசாமாவின் புதல்வர் உயிருடன் இருப்பதாக தலிபான் தளபதிகள் கூறுகின்றனர்



இஸ்லாமாபாத், ஜூலை 27

அல் - குவைதா தீவிரவாத இயக்கத்தின் தலைவரான ஓசாமா பின்லேடனின் புதல்வர் சாத் பின்லேடன் உயிருடன் இருக்கிறார் என தலிபான்கள் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளனர்.

இந்த வருடத்தில் பாகிஸ்தானில் நடத்தப்பட்ட வான்வெளித் தாக்குதலில் ஓசாமாவின் புதல்வர்களில் ஒருவரான சாத் பின்லேடன் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்க செய்திநிறுவனங்கள் தெரிவித்து வந்தன.

இதற்குப் பதில் அளிக்கும் வகையில் பாகிஸ்தான் தலிபான் இயக்க மூத்த தளபதிகள் இச்செய்தியை மறுத்துள்ளனர். அவர்கள் உள்ளூர் செய்திநிறுவனத்திடம் கூறியவை வருமாறு:-

''கடந்த மூன்று ஆண்டுகளில் பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகள் நடத்தும் தாக்குதல்களில் இதுவரை எங்கள் இயக்கத்தின் உறுப்பினர்கள் பலர் இறந்துள்ளனர். ஆனால், இதுவரை அல்-குவைதா இயக்கத்தின் தலைவரான ஓசாமாவோ அவரது குடும்ப உறுப்பினர்களில் எவருமோ இறக்கவில்லை.

''சாத் பின்லேடன் அல்-குவைதாவின் உறுப்பினர் அல்லர். அவர் எவ்வித தாக்குதலையும் நடத்தியதில்லை. அவர் ஓசாமாவின் புதல்வர் என்கின்ற முறையில் முக்கியத்துவம் பெறுகிறார்.

''அல்-குவைதா உறுப்பினர்கள் ஒரே இடத்தில் சேர்ந்து இருப்பதில்லை. அவர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களில் பதுங்கு குழிகளிலும், குகைகளிலும்தான் தங்குகிறார்கள்.

''இதனால் ஓசாமாவின் குடும்ப உறுப்பினர்கள் அமெரிக்கப் படைகளின் தாக்குதலுக்குப் பலியாக வாய்ப்பில்லை. சாத் பின்லேடன் உயிருடன்தான் இருக்கிறார். அவர் கொல்லப்பட்டார் என்ற செய்தியும் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்ற ஊகமும் நிராகரிக்கப்படவேண்டியவை'' என்று கூறியுள்ளனர்.

## ஈரானில் விமான விபத்து; 17 பேர் பலி; 19 பேர் காயம்



தெஹ்ரான், ஜூலை 27

ஈரானில் பயணிகள் விமானமொன்று ஓடு பாதையின் சுவரில் மோதி தீப்பிடித்து விபத்துக்குள்ளானது. இதில் 17 பேர் பலியாகினர்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானிலிருந்து 153 பயணிகளுடன் மாஷாத் வந்த இந்த விமானம் மாஷாத் சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்கியது. எனினும், எதிர்பாராதவிதமாக ஓடு பாதையின் நடுப்பகுதியில் விமானத்தை விமானி தரை இறக்கியதால், குறைந்த தூரமே உள்ள ஓடுபாதையில் வேகமாகச் சென்ற இந்த விமானம் சுற்றுச்சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் விமானத்தின் முன்பகுதி சேதம் அடைந்து தீப்பிடித்தது. முன்பகுதியில் அமர்ந்திருந்த 17 பேர் விபத்தில் சிக்கிப் பலியாகினர். 19 பேர் படுகாயமடைந்தனர். விமானத்தில் இருந்த மற்ற பயணிகள் மீட்கப்பட்டு பாதுகாப்புடன் வெளியே அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடந்த 15 ஆம் திகதி ஈரான் விமானம் நொறுங்கி விழுந்ததில் 168 பயணிகள் பலியானார்கள். அடுத்த 10 நாட்களுக்குள் நிகழ்ந்த இரண்டாவது விமான விபத்து இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியின் அறிவுறுத்தலை ஏற்று ஈரானிய துணை ஜனாதிபதி பதவி துறப்பு

தெஹ்ரான், ஜூலை 27

ஈரானிய ஜனாதிபதி அஹ்மதிநிஜாத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க, எஸ்பாண்டியர் ரஹீம் மஷாய் தாம் வகித்த துணைஜனாதிபதி பதவியை துறந்து விட்டார். இவர் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமைக்கு, பழைமைவாதிகள் கடும் ஆட்சேபனை தெரிவித்து வந்தார்கள். இந்நியமனத்தால் ஜனாதிபதி அஹ்மதிநிஜாத்தும் மேலும் சர்ச்சைக்குள்ளாகி வந்தார்.

ஈரானில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் அஹமதிநிஜாத் மீண்டும் வெற்றிபெற்றார் என அறிவிக்கப்பட்டது. இந்த தேர்தல் முடிவுகளை, இவரை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளர்கள் ஏற்க மறுத்து விட்டனர். தேர்தலில் மோசடி நடந்துள்ளது என அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். இதற்காகப் போராட்டம் நடத்தினார்கள். இந்த போராட்டம் இப்போது தான் ஓய்ந்துள்ளது.

இந்நிலையில் அஹமதிநிஜாத் அடுத்த சர்ச்சைக்குள்ளும் சிக்கிவிட்டார். அவர் துணை ஜனாதிபதியாக எஸ்பாண்டியர் ரஹீம் மஷாய் என்பவரை நியமித்தார். இவர் கடந்த ஆண்டு இஸ்ரேலுக்கு ஆதரவாகப் பேசியவர் எனக் கூறி பழைமைவாதிகள் மஷாய்க்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து இவரை பதவி நீக்கம் செய்யவேண்டும் என ஈரானின் உச்சமட்டத் தலைவர் கமெய்னி அறிவித்தார். இந்த உத்தரவை ஜனாதிபதி ஏற்க மறுத்து முரண்டு பிடித்தார். இதனால் இப்பிரச்சினை அரசியலில் பூதாகரமாக உருவெடுத்து சூடு பிடித்தது.

கடைசியாக ரஹீம் மஷாயை பதவியிலிருந்து நீக்க அகமதிநிஜாத் தீர்மானித்தார். இவர் தாமாகவே பதவியிலிருந்து விலகிக்கொள்ள அகமதிநிஜாத் அறிவுறுத்தினார். இதை ஏற்று இந்த பதவியிலிருந்து தாம் விலகுகிறார் என மஷாய் அறிவித்தார். ''உச்சமட்ட தலைவர் உத்தரவை ஏற்று நான் பதவி விலகுகிறேன். மக்களுக்கு சேவை செய்ய எந்த பொறுப்பிலிருந்தால் என்ன?'' என தற்போது தாம் விடுத்துள்ள அறிக்கையில் எஸ்பாண்டி ரஹீம் மஷாய் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்காவுடன் பேச்சு நடத்த வடகொரியா விருப்பம் தெரிவிப்பு

டோக்கியோ, ஜூலை 27

அமெரிக்காவுடன் நேரடிப்-பேச்சு நடத்த வடகொரியா விருப்பம் தெரிவித்துள்ளது. வடகொரியா அண்மையில் நடத்திய பல்வேறு அணு ஆயுத ஏவுகணை சோதனைகளுக்கு அமெரிக்கா, தென் கொரியா ஆகியவை உட்பட பல நாடுகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

வடகொரியாவின் இந்த அணு ஆயுத ஏவுகணை சோதனைகளால் தங்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என கூறி அமெரிக்காவும், தென்கொரியாவும் கூட்டாகக் கண்டனம்- தெரிவித்தன. அத்துடன் இணைந்து வட கொரியாவின் கடற்படை கப்பல்களின் நடமாட்டத்தை கண்காணிக்கத் தொடங்கின.

சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் ஆயுதங்கள் ஏற்றப்பட்ட வடகொரிய கப்பல்கள் வருமாயின், அத்தகைய கப்பல்கள் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்படும் என்றும் அந்த நாடுகள் எச்சரித்திருந்தன.

இதனால் வடகொரியாவுக்கும், அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளுக்குமிடையே மோதல் அதிகரித்து போர் பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவுடன் நேரடிப் பேச்சு நடத்த தான் தயாராக உள்ளது என வடகொரியா தெரிவித்துள்ளது. அத்துடன் ''பேச்சுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். பொது மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க பேச்சு நடத்தப்படுவதை நாங்கள் எதிர்க்கவில்லை'' என ஐ.நாவுக்கான வடகொரிய தூதரக அதிகாரி சின் சன் கூறியுள்ளார் என ஜப்பானைச் சேர்ந்த கொயாடோ என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஜமாத்-உத்தவாவுடன் ஹசாப்பை தொடர்புபடுத்துவது ஒரு சதி

### தலைவர் ஹசீப் முகம்மது சயீத் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத், ஜூலை 27

மும்பை தாக்குதல் தொடர்பாக இந்தியா கைது செய்துள்ள ஹசாப்பை, ஜமாத்- உத்தவா அமைப்புடன் தொடர்புபடுத்துவது சதிச் செயல் என அந்த அமைப்பின் தலைவர் ஹசீப் முகம்மது சயீத் தெரிவித்துள்ளார்.

இவர் மும்பை தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் என்ற குற்றச்சாட்டும் உண்டு. இவரது ஜமாத் - உத்தவா அமைப்பும் தடை செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் குஜ்ரன் வாலாவிலுள்ள மசூதியில் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற தொழுகைக்குப் பின்னர் இவர் தாம் நிகழ்த்திய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

''மும்பை தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா கேட்டுக்கொண்டமையால் ஐ.நா.அமைப்பு ஜமாத்- உத்தவாவை பயங்கரவாத இயக்கப் பட்டியலில் சேர்த்துள்ளது. ஜமாத் - உத் தவா ஒரு சேவை அமைப்பு. இது ஒரு தீவிரவாத அமைப்போ, பயங்கரவாத அமைப்போ அல்ல,

''இந்தியா தனது வரவு - செலவுத் திட்டத்தில் இராணுவத்துக்கு ஒதுக்கீடு செய்யும் செலவுதான், பாகிஸ்தானின் ஓராண்டிற்கான மொத்த வரவு-செலவுத்திட்டம். பாகிஸ்தானுக்கு அண்டை நாட்டில் இருந்தும், மேற்கத்தேய நாடுகளிலிருந்தும் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது.

''பாகிஸ்தானைத் துண்டாட வேண்டும் என்பதே அமெரிக்காவின் எண்ணம். இதற்காக அமெரிக்கா இரகசியத் திட்டம் தீட்டியுள்ளது. பாகிஸ்தானின் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு நாட்டைக் காப்பாற்றும் திறமை இல்லை. முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பின் கொள்கைகளை பின்பற்றுவதை பாகிஸ்தான் அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும்'' இவ்வாறு சயீத் பேசியுள்ளார்.

## 6 தலிபான் தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

காபூல், ஜூலை 27

கிழக்கு ஆப்கான் நகரான கோஷ்டில், அரசாங்கக் கட்டடங்களை இலக்குவைத்து, தாக்குதல் நடத்திய ஆறு தலிபான் தீவிரவாதிகள் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என அதிகாரிகள் பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்கள்.

''கோஷ்ட் பொலிஸ் நிலையத்தையும் அருகிலுள்ள கட்டடங்களையும் சனிக்கிழமை இயந்திரத் துப்பாக்கிகள், எறிகுண்டுகள் ஆகியவை சகிதம் ஆறு தற்கொலைக் குண்டுதாரிகள் மும்முரமாகத் தாக்கினார்கள். எனினும் இத்தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டு விட்டன'' என உள்துறை அமைச்சு தெரிவித்தது.

''இந்த ஆறு தலிபான் தீவிரவாதிகளும் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கான உடையணிந்து வந்துள்ளார்கள். எனினும் குண்டுகளை வெடிக்க வைப்பதற்கு முன்னர், பொலிஸார் அனைவரையும் தக்க சமயத்தில் தீர்த்துக்கட்டியுள்ளனர்'' என்றும் அது குறிப்பிட்டது.

''கோஷ்ட் நகரிலுள்ள பழைய இராணுவ வைத்தியசாலைக் கட்டடத்துக்கருகில், சனிக்கிழமை கார்க் குண்டுத் தாக்குதலொன்றும் நடத்தப்பட்டுள்ளது. இதில் பல பொலிஸார் காயமடைந்துள்ளனர்'' என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கே.பிக்கு எதிராக நெடியவன் குழு!


டி.பி.எஸ்.ஜெயராஜ்

• 'மீளக் கட்டமைக்கப்பட்ட புலிகள் அமைப்பின் தலைவராக கே.பி. வருவதை எதிர்க்கும் புலிகளின் சதிக் கூட்டம்' என்ற தலைப்பில் கடந்த சனியன்று 'டெய்லி மிரர்' பத்திரிகையில் டி.பி.எஸ்.ஜெயராஜ், தமது பத்தியில் வரைந்த கட்டுரையின் முதல் அங்கம் இன்று இங்கு பிரசுரமாகின்றது. இலங்கைத் தமிழர்களின் போராட்ட நிலைமையை ஒட்டி பல்வேறு கட்டுரைகளை எழுதி சர்ச்சையை ஏற்படுத்தி வருபவர் அவர். கொழும்பில் தமிழ், ஆங்கில ஊடகங்களில் நீண்டகாலம் பணி புரிந்த டி.பி.எஸ்.ஜெயராஜ் தற்போது கனடாவில் வாழ்ந்த படி ஊடகப்பணி ஆற்றி வருகின்றார். djeyaraj2005 @yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அவருடன் தொடர்புகொள்ளலாம் என 'டெய்லி மிரர்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று அறியப்பட்டு வந்த அரசியல் - இராணுவக் கட்டமைப்பின் இயக்கம் இலங்கையின் எல்லைக்குள் பெரும்பாலும் செயலிழந்துவிட்டது.

புலிகளின் உயர் தலைவர் பிரபாகரனும் சிரேஷ்ட இராணுவத் தளபதிகள் உள்ளிட்ட அவர்களின் இராணுவத் துருப்பினரும் இப்போது உயிர் வாழ்வோர் மத்தியில் இல்லை. அந்த அமைப்பின் அரசியல் மற்றும் நிர்வாகப் பிரிவுகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட ஆயிரக்கணக்கான ஏனைய உறுப்பினர்கள் இலங்கை அதிகாரிகளால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் காடுகளில் சிறு குழுக்களாகச் சிக்குண்டுள்ள புலிகள் மட்டும் வாய்ப்பும், இடமும் கிடைக்கையில் சிறிய அளவிலான கெரில்லா யுத்தத் தாக்குதல்களை நடத்த முயன்று வருகின்றனர். அவர்களின் தாக்கம் புறக்கணிக்கத்தக்கது.

இதேசமயம், மறைந்திருந்து செயல் நடவடிக்கைகளில் ஈடுபடும் புலிகளின் செயற்பாட்டாளர்களை நாட்டின் பல பகுதிகளிலும் திட்டமிட்ட வகையில் தேடி வேட்டையாடும் விவகாரத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் ஒழுங்காக ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் அவர்கள் இந்த விவகாரங்கள் ஊடகங்களுக்கு எட்டாமல் பார்த்துக்கொள்வதிலும் சிரத்தையாக உள்ளனர். இதேபோன்று, இடம்பெயர்ந்த அகதிகளுக்கு மத்தியில் அவர்களின் முகாம்களில் ஒளிந்திருக்கும் புலிகளைக் களைந்தெடுக்கும் நடவடிக்கையும் ஒழுங்காக முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் நடைமுறையில் அழித்தொழிக்கப்பட்டாலும் அதன் வெளிநாட்டுக் கட்டமைப்பு தொடர்ந்தும் ஆபத்தானதாகவே விளங்குகின்றது.

வெளிநாடுகளில் உள்ள புலிகளின் மூலங்களை புலிகளின் 'எச்சங்கள்' அல்லது 'மிச்சங்கள்' என்று வர்ணிக்கும் போக்கு ஊடகங்களின் ஒரு பகுதியிடையே காணப்படுகின்றது. இந்த விவரிப்பு சரியானதல்ல. புலிகளின் வெளிநாட்டுக் கட்டமைப்புகள் உறுதியானவையாகவும் எப்போதும் போல திடமானவையாகவுமே உள்ளன. புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் கணிசமான பகுதியினர் மத்தியில் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் ஆதரவையும் செல்வாக்கையும் பெற்று அனுபவித்து வருகின்றது.

இத்தகைய பருத்த மூலாதாரம் தம் வசம் இருந்தும் கூட, அத்தகைய வளத்தை யதார்த்த பூர்வமான வகையில் - பயன் தரக்கூடிய முறையில் - பிரயோகிக்கவோ, களத்துக்குக் கொண்டு வரவோ புலிகள் அல்லது புலிகள் ஆதரவு மூலங்களால் முடியவில்லை. அதற்குப் பிரதான காரணம், பிரபாகரனின் மறைவை அடுத்து வெளிநாட்டில் உள்ள புலிகளின் தரப்பில் ஏற்பட்ட ஐக்கியமின்மையே. சுருக்கமாகக் கூறுவதானால் பிரபாகரனின் பின்னராக விரியும் களத்தில் தலைமை பற்றிய இழுபறியே பிரச்சினையாகும்.

இராணுவப் பின்னடைவுகளின் பின்னர் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுகளே தப்பிப் பிழைத்து எஞ்சியவை என்ற காரணத்தினால், இலட்சியத்தை நோக்கி முன்நகர்வதில் இந்தப் பிரிவுகளின் பொறுப்பு - கடப்பாடு - மிகவும் அதிகரித்துள்ளது.

## பிரிவுகள் - பிளவுகள்

அந்தப் பொறுப்பை நிறைவு செய்வதற்கு -

முதலாவதாக - விடுதலைப் புலிகள் அமைப்பின் தற்போதைய - சரியான - இக்கட்டான நிலைமை குறித்து நனவு பூர்வமான திறனாய்வும், விழிப்புணர்வும் அவசியம்.

இரண்டாவதாக - யதார்த்தபூர்வமான, சாத்தியப்பாடான அணுகுமுறை தெரிவுசெய்யப்பட்டு பின்பற்றப்படவேண்டும்.

மூன்றாவதாக - ஏற்றுக்கொள்ளத்தக்க, திறமைமிக்க ஒரு தலைமைத்துவம் உருவாக வேண்டும்.

இந்த விடயங்களில், இதுவரை எந்த இணக்கமுமே ஏற்படவில்லை.

ஆனால் முரண்பாடுகள்தாம் அநாகரிகமான முறையில், தனிப்பட்ட மட்டத்தில் மோசமாக வெடித்துள்ளன. விடுதலைப் புலிகள் அமைப்புக்கு யார் தலைமை வகிக்கின்றார்கள் என்பதே இப்போது அடிப்படைப் பிரச்சினையாகும். குழுப் பிளவுகள் மூர்க்கமடைந்திருக்கின்றன.

வெளிநாட்டில் பெருமளவில் ஈட்டப்படும் வருமான விவகாரமே நெருக்கடியை மேலும் தீவிரமாக்கியிருக்கின்றது. இப்போது அவற்றைக் கட்டுப்படுத்திக் கண்காணிப்பது யார்? அத்தகைய கட்டுப்பாடுகளைப் பயன்தரும் முறையில் தொடர்ந்து பேணமுடியுமா? வழமைபோல நிதி சேகரிப்பைத் தொடர இயலுமா? அல்லது அது வறண்டு போய்விடுமா? எப்படி நிதி சேகரிப்பு விடயத்தைத் தொடர்ந்தும் முன்னெடுக்கலாம்?

விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்குள் இன்று வாழும் - சுதந்திரமாக உள்ள - ஒருவர் என அறியப்படுபவர் 'கே.பி.' என்று அழைக்கப்படும் செல்வராசா பத்மநாதன். இவரே எஞ்சியுள்ள புலிகளின் தலைவர்களுள் மிக சிரேஷ்ட தரத்தில் உள்ளவர்.

கே.பியே ஒரு காலத்தில் புலிகளின் பிரதான ஆயுத சுவீகரிப்பாளராக விளங்கியவர். புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுகளையும் நிதி சேகரிப்பு பரப்புரையையும் கண்காணித்து வழிநடத்தியவர்.

## கே.பியின் பங்கு

2002 யுத்த நிறுத்தத்தின் பின்னர் கே.பியின் பங்களிப்பு புலிகள் இயக்கத்தில் குறைத்து மதிப்பிடப்பட்டது. அவர் தரம் தாழ்த்தப்பட்டு, பின் தள்ளப்பட, அவருக்குப் பதிலாக புதியவர்கள் வளர்த்தெடுக்கப்பட்டனர். கே.பிக்கு எதிரான விஷமப் பிரசாரத்தை புலிகளின் முன்னைய அரசியல் பொறுப்பாளர் சுப்பையா பரமு தமிழ்ச் செல்வனும், முன்னாள் வெளிநாட்டு நிர்வாகப் பொறுப்பாளரான காஸ்ட்ரோ என்று அழைக்கப்படும் வீரகுட்டி மணிவண்ணனும் தலைமை தாங்கி முன்னெடுத்தனர்.

கே.பிக்கு எதிராக ஊழல், திறமையின்மை, பாலியல் முறைகேடு போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்டன. ஆயினும், பிரபாகரனினால் 'கழுதை' என அன்புடன் விளிக்கப்பட்ட இந்த மூத்த புலி உறுப்பினர், தாம் நிரபராதி என்பதை நீண்ட இழுபறி விசாரணைகளின் மூலம் நிரூபித்தார்.

தமது பெயரைக் காப்பாற்றிக்கொண்ட கே.பி., மனம் நொந்த நிலையில், 2003 இல் வெளிநாட்டில் சுயமாகவே பணியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். எனினும் பிரபாகரனுடன் தொடர்புகளைப் பேணி வந்தார். தாய்லாந்து வாசி ஒருவரை மணந்துகொண்ட கே.பி. குடும்பகாரனானார்.

2006 இல் இருந்து புலிகள் இராணுவப் பின்னடைவுகளைச் சந்திக்கத் தொடங்கினர்.

ஆயுதங்களை சுவீகரித்து, பாதுகாப்பாக வடபெரு நிலப்பரப்பான வன்னிக்குத் திறமையாகக் கடத்தும் விடயத்தில் கே.பிக்கு நிகரான மாற்று ஆளைப் புலிகள் பெறமுடியாமல் போனமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

நட்பு நாடுகள் தந்துதவிய தகவல்கள் மூலம் புலிகளின் எட்டு அல்லது ஒன்பது கப்பல்களை இலங்கைக் கடற்படை தாக்கி அழித்தது.

விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்ட பிரபாகரன் 2008 இல் கே.பி. பக்கம் திரும்பி ஏதாவது செய்யுமாறு கோரினார். இளைப்பாறல் நிலையில் இருந்து மீண்ட கே.பியினால் கடுமையான முயற்சியின் மூலம் மூன்று ஆயுதக் கப்பல்களை அனுப்பி வைக்க முடிந்தது. அவற்றில் ஒன்று இலங்கைக் கடற்படையால் வழிமறிக்கப்பட்ட போதும் மற்றைய இரண்டும் புலிகளை எட்டியதன் மூலம் புலிகளுக்கு அவசரமாகத் தேவைப்பட்ட உயிர் வாயுவை அந்த அமைப்புக்கு வழங்கின.

இதனால் நன்றி உணர்வுடன் கே.பியை மீண்டும் புலிகள் இயக்கத்தில் சேருமாறு கோரினார் பிரபாகரன். தன்னை வெளிநாட்டு புலிகள் அமைப்புக்குப் பொறுப்பானவராகப் புலிகளின் தலைமை நியமிக்குமானால் புலிகள் இயக்கத்தில் மீண்டும் சேரத் தாம் தயார் என்று பத்மநாதன் கூறினார். அதன் பிரகாரம் 2009 ஜனவரியில் 'சர்வதேச உறவுத் துறை' என்ற புதிய பிரிவு புலிகள் அமைப்பில் உருவாக்கப்பட்டு செல்வராசா பத்மநாதன் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## பனிப்போர்

புதிய சர்வதேச உறவுப் பிரிவின் தலைவர் பொறுப்பு என்பது நடைமுறையில் பார்த்தால் புலிகளின் பூகோளத் தலைவர் பதவிக்கு நாசூக்காக ஒப்பானதாகும். குறைந்தபட்சம் அப்படித்தான் அதனை கே.பி. வரைவிலக்கணப்படுத்திக்கொண்டார். ஆனால், புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவிருந்த காஸ்ட்ரோவோ தமது கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க இணங்கவில்லை. கே.பிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என வெளிநாட்டுக் கிளைகளை அவர் பணித்தார்.

இது, புலம்பெயர்ந்தோர் மத்தியில் கே.பி. மற்றும் காஸ்ட்ரோ விசுவாசிகளிடையே 'பனிப்போர்' உருவாக வழி செய்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவுக்குள் கடைசிக் கட்டமாகப் புலிகள் முற்றுகைக்குள் சிக்குண்டிருந்தமையால் இந்தப் பனிப்போர் விவகாரம் பிரபாகரனின் போதிய கவனத்தை எட்டவில்லை. இதனால், காஸ்ட்ரோவினால் தாம் விசனத்துக்கு உட்படுத்தப்படுகின்றார் எனக் கே.பி. கருதினார்.

கொழும்பு மீது சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தி அதன் மூலம் மோதல் நிறுத்தம் ஒன்றை எட்டச் செய்யும் நகர்வுகளில் கே.பி. தாமே தீவிரமாக ஈடுபட்டார். சர்வதேச தரப்புகளின் ஆதரவுடன் பிரபாகரனும் புலிகளின் ஏனைய பல தலைவர்களும் தங்களின் குடும்பத்தவர்களுடன் சேர்ந்து நாட்டை விட்டு வெளிநாட்டுக்குத் தப்பி ஓடும் ஒழுங்கு ஒன்றை ஏற்படுத்தவும் அவர் முயன்றார். ஆனால் கடைசி நேரம் வரை அதற்கு இணங்க பிரபாகரன் மறுத்தார். ஆனால் புலிகளின் தலைவர் இவ்விடயத்தில் தமது மனதை மாற்றிக் கொண்ட போது, அதற்கான காலம் கடந்துவிட்டிருந்ததுது.

இதேசமயம், தற்காலிக ஓய்வு ஒன்றுக்கு இலங்கையைத் தள்ள வைக்கும் வகையில் சர்வதேச ஆதரவைத் திரட்டும் நோக்கத்துடன் கே.பி. கையாண்ட இராஜதந்திர நகர்வுகள் காஸ்ட்ரோவினாலும் அவரது நீசர்களாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

இலங்கையில் மனிதாபிமானத் தலையீடுகளை உடன் முன்னெடுக்கும்படி மேற்குலகைக் கோரும் வகையில் மேற்கு நாடுகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு வெளிநாட்டில் உள்ள புலிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் கே.பி. கோரினார். அப்பாவி மக்களின் மனிதப் பேரவல நிலைமையை முன்னிலைப்படுத்துமாறு அவர் வேண்டினார். மேற்கு நாடுகளின் கவனத்தைத் திருப்பும் வகையில் தாம் எடுக்கும் முயற்சிக்கு வலுவூட்டவே இதனை மேற்கொள்ள அவர் வேண்டினார்.

ஆனால், கே.பியின் எத்தனங்களை முறியடிக்கத் தீர்மானித்த அவரது வைரியான காஸ்ட்ரோவோ, விடுதலைப் புலிகளுக்கும் பிரபாகரனுக்கும் ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு புலம் பெயர்ந்த தமிழர்களைப் பணித்தார். புலம்பெயர் தமிழர்கள் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பதாகைகளையும் பிரபாகரனின் படங்களையும் தாங்கி வெளிப்படத் தொடங்கினர். இதைப் பார்த்து மேற்கு நாடுகளின் அரசுகளும் ஊடகங்களும் அதிர்ச்சியில் உறைந்தன. இதன் மூலம் புலம்பெயர் புலிகள் தங்களைத் தாங்களே சுட்டுக் கொண்டனர் - கால்களில் அல்ல, தங்கள் தலைகளிலேயே.

யுத்தம் தீவிரமடைந்ததால் வன்னிக்கும் வெளிநாட்டில் இருக்கும் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகள் நெருக்கடிக்குள்ளாகின. எனவே, காஸ்ட்ரோ தம் சார்பில் சர்வதேசப் பிரதிநிதி ஒருவரை நியமித்தார். இந்த நபர், புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுகளைக் கவனிக்கவேண்டியவராக இருந்தார்.

## நெடியவன்

காஸ்ட்ரோவின் பிரதிநிதியாக வந்தவர் 33 வயதுடைய பேரின்பநாயகம் சிவபரன். 'நெடியவன்' (உயரமானவன்) என்ற புனை பெயர் இவருடையது. நெடியவன் தமது 18 ஆவது வயதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தார். மேற்படிப்புக்காக புலிகள் இவரை ரஷ்யாவுக்கு அனுப்பினர். எனினும் சந்தர்ப்பவசமாக சிவபரன் தமது பட்டப்படிப்பை அங்கு பூர்த்தி செய்யவில்லை.

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவில் செயற்பட்ட நெடியவன், தாய்லாந்தில் இடம்பெற்ற நான்காவது சுற்று அமைதிப் பேச்சின் போது தமிழ்ச்செல்வனுடன் உடன் சென்றார். அதன் பின்னர் அவர் ஐரோப்பாவில் காலூன்றினார்.

2002 முதல் 2005 வரையான அமைதிப் பேச்சுக் காலத்தில் புலிகள் அமைப்பு தனது செயற்பாட்டாளர்கள் பலரை மேல்நாட்டுக்கு அனுப்பியது. இவர்களில் பெரும்பான்மையானோர் புலிகளின் அரசியல்பிரிவு மற்றும் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களாவர். நெடியவன் நோர்வேயை வாசமாகக் கொண்டார்.

நெடியவன் என்று அழைக்கப்படும் சிவபரன், சிவகௌரி சாந்தமோகனைத் திருமணம் செய்தார். அவரின் (சிவகௌரியின்) தந்தையின் சகோதரர்தான் ரஞ்சன் லாலா என்று அழைக்கப்படும் ஞானேந்திர மோகன் ஆவார். ஞானேந்திர மோகன் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர் மட்டுமன்றி பிரபாகரனின் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கியவரும் கூட. யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் ரஞ்சன் லாலா இராணுவத்தினரால் சுடப்பட்டார்.

இந்தத் திருமண சம்பந்தம் புலிகள் அமைப்புக்குள் நெடியவனின் நிலையை ஸ்திரமாக்கியது. காஸ்ட்ரோ வழங்கிய அதிகாரத்தையும் சேர்த்துக்கொண்ட அவர் அதை வைத்துக் கொண்டு, புலிகளின் உலகளாவிய தலைவராக வரும் கே.பியின் முயற்சிக்கு இடையூறு ஏற்படுத்தத் தொடங்கினார்.

புலிகளின் இராணுவத் தோல்விக்குப் பின்னர் வெளிநாட்டில் இந்தப் பனிப்போர் பகிரங்கமாக வெளிப்படத் தொடங்கியது. அதேசமயம், காஸ்ட்ரோ முள்ளிவாய்க்காலில் தற்கொலை செய்துகொண்டார்.

## தலைமைத்துவம்

யதார்த்தத்தில் நடந்தேறியவை அனைத்தும், புலிகளின் கட்டமைப்பில் அதன் வெளிநாட்டுப் பிரிவு மட்டுமே செயல்திறனுடையதாக எஞ்சும் நிலையை உருவாக்கின. எனவே, இந்த வெளிநாட்டுப் பிரிவுகளின் தலைவரே 'புலிகளின் பிரபாகரன்' என்ற தலைமைக்கு யதார்த்தத்தில் ஒப்பானவர் என்றாகும் சூழல் ஏற்பட்டது.

புலிகளின் தலைமை மாடத்தை அலங்கரிக்க கே.பி. முயன்றபோது நெடியவன் அதனை எதிர்த்



தார். கே.பிக்கு எதிரான - வெளிநாட்டில் வதியும் - உதிரிகளான சில புலிகளின் ஆதரவு இவ்விடயத்தில் நெடியவனுக்குக் கிட்டியது.

கே.பி. எதிர்ப்பு அணி, அவருக்கு எதிராக விஷமத்தனமான - துவேஷமிக்க - வசைபாடும் - பிரசாரத்தை ஆரம்பித்தது.

ஒருபுறம் பிரபாகரனை ஆயுதப் படைகளிடம் காட்டிக் கொடுத்தவர் என்றும், மறுபுறம் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற உண்மையை மறைக்கின்றார் என்றும் கே.பி. மீது குற்றம் சுமத்தப்பட்டது. பல்வேறு சர்வதேச உளவுப் பிரிவுகளிடம் வேதனம் பெறுபவராகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

புலிகளின் கப்பல்கள் பற்றிய உளவுத் தகவல்களை இலங்கைக் கடற்படைக்கு வழங்கியவரே கே.பிதான் என்றும் கூட கதைகள் பரவவிடப்பட்டன.

கே.பி. மற்றும் அவரது நன்னடத்தை பற்றிய விடயங்கள் வயதான தலைமுறையின் விடயமறிந்த பிரிவினருக்கு நன்கு தெரியும் என்றாலும், வெளிநாட்டில் உள்ள புலிகளின் இளம் தலைமுறையும், புலம்பெயர் ஆதரவாளர்களும் அவர் பற்றி அறிந்தவை சொற்பமே. எனவே, இது, அவருக்கு எதிரானவர்கள் அவர் மீது தாக்குதல் நடத்த வாய்ப்பானதாக அமைந்தது.

புலிகளின் வெளிநாட்டு அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள் நெடியவனின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் கே.பிக்குத் தனது கருத்துகளை சரிவரப் பரப்புரை செய்வது சாத்தியமற்றதாக அமைந்தது. பெரும்பாலும் புலிகளின் ஊடக நிறுவனங்கள் கே.பியை இருட்டடிப்பு செய்த அதேசமயம், வேறு பல ஊடகங்கள் கே.பி. மீது வசைமாரி பொழிந்து தள்ளின. தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காகத் தனது சொந்த இணையத் தளத்தை ஆரம்பிக்க வேண்டிய கட்டத்துக்கு கே.பி. தள்ளப்பட்டார்.


## பின்னடைவு

புலிகளின் தமிழ்நாட்டு ஆதரவாளர்களான நெடுமாறன், வைகோ போன்றோரின் போக்கு, கே.பிக்குப் பெரும் பின்னடைவைத் தந்தது. கே.பி. தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்காகத் தொலைபேசியில் நீண்டநேரம் செலவிட வேண்டி நேர்ந்தது என்றும் கூறப்படுகின்றது. இணங்குபவர்கள் போல அவர்கள் காணப்பட்டாலும், அவர்கள் கே.பியைப் பகிரங்கமாக விமர்சிப்பதிலும் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற நிலைப்பாட்டைப் பின்பற்றுவதிலும் மாறாதவர்களாக இருந்தார்கள்.

பிரபாகரன் பாதுகாப்பான இடத்தில் உயிருடன்

(15 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குரிய கொடிச்சீலையினை, சட்டநாதர் வீதி, செங்குந்த பரம்பரையைச் சேர்ந்த க.தர்மகுலசிங்கத்தின் வீட்டிலிருந்து குருநாதர் மடத்திற்கு ஏடுத்துச் செல்லப்பட்டது. அங்கிருந்து ரத பவனியாக நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு கொடிச்சீலை எடுத்துச் செல்லப்படுவதை படங்களில் காணலாம். (படங்கள் லக்ஸ்மன்)

# யாழ்., வவுனியா தேர்தல்களிலிருந்து வெளியேறி தமிழ்க் கூட்டமைப்பை ஆதரிக்க ஐ.தே.க. தயாரா?

கொழும்பு, ஜூலை 27

''எதிர்கட்சிகளின் கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இணைக்கும் நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருந்தால் தமிழ் மக்கள் செறிந்து வாழும் யாழ்., வவுனியா மாவட்டங்களில் ஐ.தே.கட்சி தான் களமிறங்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிக்குமா?

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியனேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

'' எதிர்கட்சிகளின் கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணையுமாறு நினைக்கும் எதிர்க்கட்சிகள் தமிழ்மக்களுக்கு உரித்தான இறைமை, தமிழ்மக்களின் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு விடயத்துக்கு தாம் ஆதரவாக இருப்பதாகப் பகிரங்கமாகத் தெரிவிக்கும் போது மட்டுமே எதிர்க்கட்சியின் கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைவதா, இல்லையா என்பதைப் பரிசீலிக்க முடியும்.''

தமிழ்மக்கள் கடந்த 61 வருடங்களாக உரிமைக்காகப் போராடிவருகின்றனர். இலங்கையை ஆட்சி செய்த தேசியக் கட்சிகள் எவையுமே தமிழர்களுக்கான உரிமையைக் கொடுக்க மறுத்தன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆனாலும் சரி ஐக்கிய தேசியக் கட்சி ஆனாலும் சரி தமிழ் இனத்தை, உரிமையை பேச்சு மூலம் தீர்க்க பல சந்தர்ப்பங்கள் இருந்த வேளையில் எல்லாம் தமது சுய லாப, இனவாத அரசியலை நடத்தி தமிழ்மக்களை பகடைக்காய்களாகப் பாவித்த வரலாறு யாவரும் அறிவர்.

தற்போது யாழ்.மாநகரசபைத் தேர்தலிலும் வவுனியா நகரசபைத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளது. அரசை ஆதரிக்கும் பல கட்சிகள் பல்வேறு பெயர்களில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கொள்ள வேண்டும். என ஐக்கிய தேசியக் கட்சிக்கு நோக்கம் இருந்திருந்தால் தமிழ் மக்கள் கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட யாழ். மாநகரசபைத் தேர்தலிலும் வவுனியா நகரசபைத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு பூரண ஆதரவை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

காலம் கடந்து விடவில்லை. யாழ்., வவுனியா தேர்தல் இடம்பெற இன்னும் இரண்டு வாரங்கள் மட்டுமே உள்ளன. அதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சியால் தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் யாழ்.மாநகரசபை, வவுனியா நகரசபைத் தேர்தல்களில் இருந்து விலகுவதாகவும் பகிரங்கமாக அறிவிக்க முடியுமா?

இவ்வாறான நல்லெண்ண முயற்சிகளில் பிரதான எதிர்க்கட்சிகள் இறங்காமல் வெறுமனே எதிர்க்கட்சிகள் கூட்டணி பற்றிக் கதைப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை.

குறிப்பாக தழிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் விரைவில் தயாரிக்கப்பட்டு வெளிவரவிருக்கும் அரசியல் தீர்வுத்திட்டத்துக்கு எந்த அரசியல் கட்சிகள் ஆதரவு கொடுக்க முன்வருமோ அந்தக் கட்சிகள் அனைத்துடனும் இணைந்து செயற்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தயாராக இருப்பதுடன் யாழ்.மாநகர சபைத் தேர்தல், வவுனியா நகர சபைத் தேர்தல்கள் முடிவுற்ற பின் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்துச் செயற்படத் தமிழ்த் தசியக் கூட்டமைப்பு எப்போதும் தயாராக இருக்கின்றது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க உதவுவது பொலிஸாரின் கடமை- உயர் அதிகாரிகள் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

அச்சுறுத்தல்கள் மற்றும் பயங்கரச் சூழல் எதுவுமின்றி மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க உதவுவதும் தேர்தல் ஆணையாளருக்கு உதவியாக இருப்பதும் தேர்தல் வேளையில் எங்களது முக்கிய பொறுப்பாகும்.

இவ்வாறு தெரிவித்தார் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தயானந்த பண்டார.

தேர்தல் சட்ட விதிகளுக்கு அமைய வேட்பாளர்கள் நியாயபூர்வமான, அமைதியான தேர்தல் நடவடிக்கைகளுக்கு எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பொலிஸ் அதிகாரிகள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் தயானந்த பண்டார அங்கு மேலும் கூறியதாவது:-

நான்கு கட்சிகளும் இரண்டு சுயேட்சைக் குழுக்களும் இந்தத் தேர்தலில் தமது வேட்பாளர்களை நிறுத்தி உள்ளன.

வாக்களிப்பின் போதும் வாக்குகள் எண்ணும் போதும் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் இரண்டு பிரதிநிதிகளை சம்பந்தப்பட்டவர்கள் நியமிக்க முடியும் . அவர்களது நியமனம் தொடர்பாக பிரதித் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். பிரதிநிதிகளுக்கான நியமனக்கடிதங்கள், தேசிய அடையாள அட்டைகள், வாக்கு எண்ணுவதற்கான அடையாள அட்டைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேர்தல் தொடர்பான கண்காணிப்புக் குழுவினர் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் எதிலும் ஈடுபட முடியாது என்றார்.

சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரண்டெண்ட் றொஷான் பெர்ணான்டோ தெரிவித்ததாவது:-

சில சுவரொட்டிகளில் பிரசுரிக்கப்பட்ட சின்னம், குறியீடுகள் என்பன பொலிஸாரால் அளிக்கப்பட்டன. படங்களை அகற்றுவதற்கான சட்ட உரிமைகள் எமக்கு இல்லை. சட்டத்துக்கு உட்பட்டவைகள் அகற்றப்பட்டால் எங்களுக்கு அறிவிக்கவும். தேர்தல் நீதியாக இடம்பெறவேண்டும் என்பது எல்லோரதும் நோக்கமும் கருத்துமாக இருப்பதால் ஒற்றுமையுடன் செயற்பட உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் -என்றார். (9-111)

## அமைச்சர் கமகே இன்று தொழில் நுட்பக்கல்லூரிக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

தொழில் நுட்பப் பயிற்சித்துறை அமைச்சர் பியசேன கமகே யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அங்கு முக்கியமான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் கலாநிதி ந.யோகராஜன் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-7)

## நெல்லியடிக் கிளையில் சி.டி.எம்.ஏ. விற்பனை

வடமராட்சி மக்களின் நன்மை கருதி ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினர் சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளை நெல்லியடியில் உள்ள தமது கிளை நிறுவனத்தில் வைத்து விற்பனை செய்ய உள்ளதாக நிறுவன முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடமராட்சி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளை வாங்கிச் செல்வதில் உள்ள சிரமங்களை நீக்கும் முகமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் கூறினார். (அ-7)

# அரச வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 27

அரச வைத்தியசாலைகளில் மருந்துப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது என அகில இலங்கை சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் காமினி குமாரசிங்க அச்சம் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் மருந்துகளில் காலாவதியான மற்றும் தரக்குறைவான பெருந்தொகையான மருந்துகளை அழிக்கவேண்டி இருப்பதனாலேயே இந்த தட்டுப்பாடு ஏற்படுவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதாவது கப்பல் மூலமாகக் கொண்டு வரப்பட்ட மருந்துப் பொருள்களில் காலாவதியான மற்றும் தரக்குறைவான 14 கொள்கலன் மருந்துகள் அழிக்கப்படவுள்ளன எனவும் அவற்றின் பெறுமதி 50 கோடி ரூபாவைத் தாண்டும் எனவும் தெரியவருகிறது.

அழிக்கப்படவேண்டிய இம் மருந்துகள் இரத்மலானையில் அமைந்துள்ள அரச மருந்தகசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மருந்துகளை இறக்குமதி செய்வதில் காணப்படும் மிதமிஞ்சிய தரகு வேலைகளாலும் மருந்துப் பொருள்களை விநியோகிக்கும் நிறுவனங்க்ளின் ஏமாற்று நடவடிக்கைகளாலுமே பெருந்தொகையான மருந்துகளை அழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

இலங்கை அரசு மருந்து விநியோகிக்கும் நிறுவனங்களுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது. அவ் உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த நிறுவனங்களுக்கு எதிராக இலங்கை அரசால் எவ்வித சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது எனவும் தெரியவருகிறது.

இதனால் அந்த நிறுவனங்களிடமிருந்து நஷ்டஈடு பெற்றுக்கொள்ளவோ, இழப்பீடு பெற்றுக்கொள்ளவோ, பதில் மருந்துக்களை பெற்றுகொள்ளவோ முடியாத நிலையில் சுகாதார அமைச்சு உள்ளது எனவும் தெரியவருகிறது.



யாழ். நகரில் நேற்று நடைபெற்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரசார வாகனப் பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: ஓங்காரன்)

## கே.பிக்கு எதிராக...

(14 பக்கத் தொடர்ச்சி)

உள்ளார் என்று மே 18 ஆம் திகதி, ஆழச் சிந்திக்காமல் அவசரமாக கே.பி. விடுத்த அறிவிப்புத்தான் அவருக்குப் பலவீனத்தை ஏற்படுத்தியது.

பின்னர், தமது நிலைப்பாட்டை அவர் மாற்றிக் கொண்டார். எனினும், அவர் முதலில் ஏன் அப்படி அறிவித்தார், பின்னர் ஏன் அதை மாற்றிக்கொண்டார் என அவர் மீது குறைகாண்போர் கேள்வி எழுப்புகின்றனர்.

பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற விவகாரத்தில் கே.பியின் எதிர்ப்பாளர்கள் ஆரம்பத்தில் முன்னிலை பெற்றனர். பெரும்பான்மையான ஆதரவாளர்கள் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளாமையாலும் அல்லது பிரபாகரன் மரணமடைந்து விட்டார் என்பதற்கு இணங்க முடியாமையாலும், இவ்விடயத்தில் பரந்தளவிலான மறுப்புகள் வெளியாகின.

இந்தக் கருத்து நிலைப்பாட்டுக்கு மத்தியில், பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்றும், அதற்காக ஒருவார காலம் துக்கம் அனுஷ்டிக்கும்படியும் கே.பி. விடுத்த பிரகடனம், எதிர்ப்புப் பிரதிபலிப்புகளை உருவாக்கியது. கே.பி. எதிர்ப்பு மூலங்கள், பத்மநாதனின் அந்த அறிவிப்புடன் இணங்கிப் போக மறுத்தன.

அதன் விளைவாகவே, இற்றைவரை பிரபாகரனுக்கோ, புலிகளின் ஏனைய சிரேஷ்ட தலைவர்களுக்கோ வணக்க மரியாதை செய்யும் பகிரங்க நிகழ்வுகள் ஏதும் இடம் பெறவில்லை. மரணித்த மாவீரர்களைப் பூஜித்து, அதி உச்ச கௌரவம் அளிக்கும் விதத்தில் 'மாவீரர் தினத்தை' அனுஷ்டிக்கும் ஓர் இயக்கத்தில்தான் இப்படி நடந்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உட்குழு மோதல்கள், வித்தியாசமான கருத்து நிலைப்பாட்டைப் பகிரங்கமாகவே பிரதிபலித்து வெளிப்படுத்தி நிற்கின்றன.

பிரபாகரனும் ஏனைய சிரேஷ்ட தலைவர்களும் இனி இல்லை என்ற உண்மையை ஏற்று, அவர்களைப் போற்றி, முன்னோக்கி நகர்வோம் என்று கே.பியும் அவரதுஆதரவாளர்களும் கூறுகின்றனர். ஆனால் கே.பியை எதிர்ப்பவர்களோ தமது தலைவர் இல்லை என்பதை ஏற்க மறுக்கின்றனர்.

கே.பியும் அவரது குழுவினரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைக் கட்டமைப்பு மாற்றத்துக்கு உட்படுத்த விரும்புகின்றனர். (தேவையின்) அவசியத்தை நேர்மையுடன் புரிந்துகொண்டு, இனிமேல் ஆயுதப் போராட்டம் தொடர முடியாது என்கின்றனர். இந்தப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகள் மூலம் - வன்முறையற்ற ஜனநாயக வழி மூலம் முன்னெடுக்க அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், பெரும்பாலான கே.பி. எதிர்ப்பு மூலங்களோ யதார்த்தத்தை ஏற்க மறுத்து, ஆயுதப் போராட்டத்தைத் தொடர்வது குறித்து வாய்ச்சவடாலில் ஈடுபட்டுள்ளன. (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் கைவைத்தமைக்கு ஜே.வி.பி. கண்டனம்

கொழும்பு, ஜூலை 27

பாடசாலை மாணவர்களுக்காக அரசு கடந்த ஆண்டு ஒதுக்கிய நிதியை விட இந்த ஆண்டு 30 கோடி 40 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு ஜே.வி.பி. கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்படும் தாக்குதலானது உடனடியான தாக்கத்தையே விளைவிக்கும் என்றும் -

ஆனால், அரசியல்வாதிகளால் கல்வித் துறையில் ஏற்படுத்தப்படும் தாக்கமானது பிற்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்து நெத்தி இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் அங்கு கூறியவை வருமாறு-

பாடசாலை மாணவர்களுக்கான இலவசப் பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலைச் சீருடைகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி அரசினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வித்துறையில் 3 பிரதான பிரச்சினைகள் காணப்படுகின்றன. உயர்தரப் பரீட்சையில் பெறுபேறுகள், மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் தவணைப் பரீட்சைகள் மற்றும் பாடசாலைகளில் அறவிடப்படும் கட்டணங்கள் என்பனவே இப்பிரச்சினைகள் ஆகும்.

இவ்வாறு கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால் நாட்டின் கல்வித்துறை பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது - என்றார்.

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி அமைச்சர் மிலிந்தமொறகொட மற்றும் வவுனியா அரச அதிபர் ஆகியோரும் சென்றிருந்தனர்.

மனிக்பாம்,அருணாசலம் முகாம்களுக்கு விஜயம் செய்த புலம்பெயர் பணியகத்தின் செயலர் மற்றும் அவரது குழுவினர் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினர்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக ஆராயவே அமெரிக்காவின் அகதிகளுக்கான புலம்பெயர் பணியகத்தின் செயலர் எரிக்.பி.ஸ்வாட்ஸ் இலங்கை வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்கும் இலங்கை மாணவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் வேகமாக வாகனம் செலுத்தப்பட்டுள்ளது என்வும் முன்வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்த நபர் ஒருவர் வாகனம் குடை சாய்ந்த சந்தர்ப்பத்தில் காயமடைந்து உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விபத்தில் உயிரிழந்ததவர் 20 வயதுடைய இலங்கைத் தமிழ் இளைஞர் என அந்த நாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

## முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்து அங்குள்ள பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்திற்கு 173 தமிழ் மாணவர்களை வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து தெரிவாகியுள்ளனர்.

இந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கத் தேவையான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஏ-9 வீதியூடான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற உள்ளது. பஸ் பயணிகள் போக்குவரத்து அனுமதி பெறுவதில் உள்ள கஷ்டங்களும் அங்கு ஆராயப்படும். பஸ் கட்டணம் இங்கிருந்து கொழும்புக்கு 325 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு ஏ-9 வீதி ஊடாக பஸ்ஸில் பிரயாணம் செய்வோர் அங்கு சென்றதும் பொலிஸ் நிலையத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அநாவசியமான பிரச்சினைகளில் இருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இது அவசியம் - என்றார். (அ-111)

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் என ஆயிரமாயிரமாக மக்கள் இந்தப் பேரணியில் இணைந்து கொண்டனர்.

கட்சியின் மாநகரசபை வேட்பாளர்கள் திறந்த வாகனத்தில் நின்றவாறு ஊர்வலமாகச் சென்றனர்.

ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள், மினிபஸ்கள், சைக்கிள்கள், லொறிகள் எனப் பலவகை வாகனங்களில் கட்சியின் கொடி பறக்கவிடப்பட்டு ஆதரவாளர்கள் கோஷங்களை எழுப்பியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண மாநகரசபைக்குட்பட்ட சகல பகுதிகளிலும் ஊர்வலமாகச் சென்ற பேரணி பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கை மீண்டும் சென்றடைந்தது.

பேரணியில் கலந்துகொண்டோர் விளையாட்டரங்கை வந்தடைந்ததும் அங்கு கலந்து கொண்ட கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் கட்சியின் செயலாளரும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடி அவர்களது குறை நிறைகளைக் கேட்டறிந்து கொண்டார். (9-236)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருவிழாவையொட்டி வழமை போன்று சகல போக்குவரத்து மற்றும் சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 18ஆம் திகதி மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 19ம் திகதி காலை 7மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ-6)

## கரும்பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் கொள்கை வகுப்பதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுதல்.

-இவைபோன்ற பல்வேறு நிபந்தனைகளுக்கு இலங்கை இணங்கியமையை அடுத்தே இலங்கைக்கு மேற்படி கடன் தொகையை வழங்கும் பிரேரணைக்கு கடந்த வெள்ளிக்கிழமையன்று சர்வதேச நாணய நிதியத்தின் இயக்குநர் சபை அங்கீகாரம் அளித்ததாகக் கூறப்படுகிறது.

இத்தகைய பொருளாதார சீர்திருத்த நிபந்தனைகளுக்கு அரசு இணங்கியிருப்பதால் பொதுமக்கள் மீது மேலும் நிதிச் சுமை சுமத்தப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

சர்வதேச சந்தையில் எரிபொருள்களின் விலை உயர்ந்தாலும் அதனை ஈடு செய்வதற்கு அரசு மானியம் வழங்கி உதவமாட்டாதுஎன்று நாணய நிதியத்துக்கு உறுதியளித்திருப்பதால் -

எதிர்காலத்தில் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை உயரும்போது, எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணங்களை அரசு உயர்த்தி அந்தப் பளுவை நேரடியாக மக்கள் மீதே சுமத்தும்.

பொருள்கள், சேவைகள் தொடர்பான அரச செலவீனங்களைச் சமாளிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் என உறுதியளித்துள்ள அரசு, துண்டு விழும்தொகையைக் குறைப்பதற்காக அவசியப்பட்டால் வரிகளை உயர்த்தவும் இணக்கம் தெரிவித்திருப்பதாக கூறப்படுகின்றது.

நாணயநிதியத்துக்கு அரசுவழங்கி உள்ள உறுதிமொழிப்படி எதிர்காலத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கோ அல்லது இலங்கை மின்சார சபைக்கோ பெருந்தொகை நிதியை அரசு மானியமாக வழங்கி உதவமுடியாது. எனவே இந்த அமைப்புகள் தொடர்ந்து செயற்படுவததாயின் பொதுமக்கள் மீதுதான் அவற்றின் செலவீனம் மேலதிகமாகக் கட்டியடிக்கப்பட வேண்டியிருக்கும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இதனால் மின் கட்டணம், எரிபொருள் கட்டணம் என்பன ஏக்கச்சக்கமாக எகிறும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## தமிழர் தலைமைத்துவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நேற்றைய தமது செய்தியில் கூறியவை வருமாறு:-

விடுதலைப்புலிகள் இயங்கிய காலத்தில் அவர்களின் கை ஓங்கியிருந்தது. அவர்களின் மறைவு காரணமாகத் தமிழ்மக்களின் தலைமைக்கு வெற்றிடத்தைப் போல் ஒரு நிலைமை தோன்றினாலும் கூட உண்மையில் வெற்றிடம் இல்லை. அதை நிறைவு செய்வது நிதானமான, கண்ணியமான அரசியல் கொள்கைகளைக் கொண்ட அரசியல் தலைவர்களின் பொறுப்பு.

ஜனாதிபதி ராஜபக்ஷ தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதாகவும் அவர்களுடன் பேசித்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதை உணர்ந்துள்ளேன் என்றும் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

புலிகள் இன்று இல்லை. அவர்களை முழுமையாக அகற்றி விட்டோம் என்கிறார்கள். அதற்குப் பின்னர் இராணுவச் சோதனைச் சாவடிகளோ இராணுவ முகாம்களோ இருக்கவேண்டிய அவசியமே இல்லை. மோதலுக்கு முன்னர் நிலைமை எவ்வாறு இருந்ததோ அந்த நிலைமைக்குத் திரும்பச் செல்லவேண்டும். புது முகாம்களை அமைப்பதையோ அல்லது வேறு வசதிகளை ஏற்படுத்துவதையோ நாம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை -

இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களை நேரடியாகச் சென்று பார்க்கக் கூடிய நிலைமை இல்லாவிட்டாலும் கூட அம்மக்களின் சார்பில் எதைச் செய்ய வேண்டுமோ? எதைச் சொல்ல வேண்டுமோ? எதைப் பெறவேண்டுமோ? அதைச் செய்யத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் செய்து வருகிறோம். இம்மக்கள் மீளவும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதுடன் அவர்களின் தொழில்களை ஆரம்பிக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

முகாம்களில் வாழும் மக்களைப் பார்வையிட அனுமதிக்கக் கேட்டு ஜனாதிபதிக்கு கடிதமொன்றை நாம் அனுப்பிய போதிலும் அதற்குப் பதில்வரவில்லை. எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் முகாம்களுக்குச் செல்ல முயற்சிகளை எடுத்தபோதும் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பட்டார்கள்.

### தமிழர்களை அடிமைகளாக்குவதை ஏற்கத் தயாரில்லை

தமிழ் மக்களை அடிமைகளாக வாழும் நிலைக்கு தள்ளப்படுவதை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இல்லை. இதனைச் சர்வதேச சமூகத்துக்கும் விஷேடமாக இந்தியாவுக்கும் நாம் கூறியுள்ளோம். இந்தியாவுடனான உறவைத் நாம் தொடர்ந்தும் பேணி வருகிறோம்.

இந்தியா தங்களைக் கைவிட்டு விட்டதாகத் தமிழ்மக்கள் சந்தேகப்படலாம். ஆனால் இந்தியா எங்களைக் கைவிட வில்லை; கைவிட மாட்டாது; இந்தியாவால் எம்மை கைவிடமுடியாது; இந்தியாவைக் கைவிட நாங்கள் விடமாட்டோம் அதன் ஓர் அங்கமாகவே ஆயுதப் போராட்டம் அமைந்தது என்றும் கூறினார்.

ஆயுதப் போராட்டம் முடிவடைந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாக எங்களுடைய போராட்டம் முடிவுக்கு வரவில்லை. இதனைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (அ-6)


LANKA BELL லங்கா பெல் சிடிஎம்ஏ (CDMA) LANKA BELL

- இலங்கையில் ஆகக் குறைந்த தொலைபேசிக் கட்டணங்கள்
- உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்
- வெளிநாட்டு அழைப்புக்களுக்கு நிமிடத்துக்கு 7/- மட்டும்
- உள்வரும் வெளிநாட்டு அழைப்புக்களுக்கு நிமிடத்திற்கு 50 சதம் வழங்கப்படும்

ASWINI உங்கள் இடங்களிலேயே பெற்றுக் கொள்ள உடன் அழையுங்கள்
021 222 8032 . 077 6473706

யாழ் மாவட்ட முகவர்: அஸ்வினி மல்ரி பிளாசா

RAM COMMUNICATION
ராம் கொமினிகேசன்

யாழ். நகரில் முதன் முதலாக Dialog சேவையின் Broad Band இணைப்புடன் மணித்தியாலத்திற்குச் குறைந்த கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு

Inter net Browsing

மற்றும்

video Call (வீடியோ கோல்)

Face to Face முகம் பார்த்துக் கதைப்பதற்கு நிமிடத்திற்கு ரூபா 2 வீதமும் வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளும் வழங்கப்படும்.
fax - 021 222 8428, E.mail: ramcom2008@gmail.com,
Hot line: 0778394353
No.6, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

வழிகாட்டல் கருத்தரங்கு 2009
தமிழ்: A.K. கீர்த்திராஜன் B.A(Hons)
காலம் :- 31.07.2009 - 10 மணி
02.08.2009 - 11 மணி, 04.08.2009 - 11 மணி
NEC Clock Tower Road, Jaffna
அனுமதிகளை இன்று முதல் பெற்றுக்கொள்ளவும்.

அனைவருக்கும் அருள்தா!



ஔவைக்கு பழம் கொடுக்க மரம் ஏறியவன்!
உலகினைச் சுற்றிவர மயில் ஏறியவன்
ஞானப்பழத்திற்கு நியாயம் கேட்டு மலை ஏறியவன்!
நன்மக்கள் வாழ்வைக் காக்க நல்லூரர்ப் பதி குடி ஏறியவன்!
"அருள் அனைவருக்கும் கிடைத்திட வேண்டுகிறோம்"
நல்லூர் திருவிழாக் கால எமது சிறப்பு விற்பனை நிலையத்தில்
"கற்சுமி வெளியீடுகளை" சிறப்புத் தள்ளுபடி விலையில் பெற்றுக்கொள்ளலாம்

கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ். தொ.பே. 222 7442

கார் விற்பனை

மிகவும் நல்ல நிலையிலுள்ள Mitsubishi Lancer (mmc (1986) Model 13 xxxx) Power steering, Alloy wheel, Power shutter, front wheel, Ac கார் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776059650 (கட்டைப்பிராய்)

விற்பனையாகின்றது

அனைத்து வகையான றிச்சாட் றேடிங் கம்பனியின் அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள் காகிதாதிகள் C.R புத்தகங்கள் அனைத்தையும் எம்மிடம் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம். 200 வகையான உற்பத்திப் பொருள்கள் எம்மிடம் உண்டு.

அன்னை புத்தகசாலை,
இல.7, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 9881

கொழும்பு விலைகளில் யாழ்ப்பாணத்திலும்...

| | |
|---|---|
| **UPS - 650 W** | |
| Techcom 650 W | 3900/- |
| DCP 650 W | 4200/- |
| Intex 600 W | 4200/- |
| Power 3 650 W | 4100/- |
| Power Tree 650 W | 4600/- |
| (Warranty 1 year for Battery & Circuit) | |
| **UPS - 1200 W (1.2 Kv)** | |
| Power 3 1.2 Kv | 8500/- |
| Power Tree 1.2 Kv | 8900/- |
| (Warranty 1 year for Battery & Circuit) | |
| **MOTHER BOARD** | |
| MSI 945 DDR II | 4900/- |
| Asrock G 31 M-S | 5500/- |
| Foxconn G31 | 5600/- |
| Biostar G31 | 5600/- |
| Asus P5GCMX | 5800/- |
| Intel DG31 PR | 7300/- |
| (Warranty 1 - 3 years) | |
| **Sony MP 5 PLAYER 2 GB** | |
| • FM • MP3 • Games • Camera • 2 GB Extended • Voice Record | |
| **MONITOR** | |
| AOC / Topview 15"-16" | 10250/- |
| Prolink 16" | 10750/- |
| Prolink 17" / Samsung 17" | 12900/- |
| Prolink 19" | 15750/- |
| Samsung 19" | 16250/- |
| (Warranty 1 - 3 years) | |
| **DVD WRITTER** | |
| CD Writter | 2000/- |
| Combo Samsung | 2600/- |
| Samsung DVD R/W SATA | 3100/- |
| LG DVD R/W SATA | 3100/- |
| Asus Lightscribe DVD Writter | 3700/- |
| (Warranty 1 year) | |
| **CASING** | |
| ATX Black & Colour Casing with Power Supply | 2600/- |
| Casing Black without Power Supply | 1300/- |

COMPUTER TABLE 2900/- - 3500/-

FM Modulator 850/- (for Vechicle use)

MP3 PLAYER 2 GB • 2 GB • Display • MP3 • FM • Voice Record 3500/-
MP4 PLAYER 2 GB • 2 GB • MP4 • MP3 • Voice Record 4250/-

UPS Battery 12 V 1450/-

DELL Branded PC
· Core 2 Duo 2.8 Ghz
· DDR II 2 GB RAM
· 160 GB Hard Disk
· DVD Writter
· 10/100/1000 Ethernet LAN
· Dell Keyboard
· Dell Optical Mouse
· External USB Floppy Disk Drive
· Dell 19" LCD Monitor
69000/-

* Stock Available

| | |
|---|---|
| **ACCESSORIES** | |
| Power Supply | 1200/- |
| Optical Mouse | 275/- |
| Keyboard | 350/- |
| Speaker | 400/- |
| Modem 56 K | 550/- |
| Sound Card | 430/- |
| Card Reader | 400/- |
| Bluetooth | 450/- |
| Webcam | 1200/- |
| Laptop Charger | 1750/- |
| VGA Card 512 MB PCI Express | 5250/- |
| TV Card | 2600/- |
| TV Combo (GADMEI) | 2600/- |
| Network Switch 8 Port | 2500/- |
| AMP Network Cable (1 M) | 18/- |
| Headphone (with Mic) | 300/- |
| **PRINTER** | |
| HP D1560 Colour | 4250/- |
| Cannon IP1980 Colour | 5250/- |
| Laserjet | 12500/- |
| Epson LQ 300+II | 21700/- |
| HP 4355 All in One (Fax) | 14500/- |
| (Warranty 6 Months - 1 Year) | |
| **SCANNER** | |
| Musteck 1248 USB | 5400/- |
| Cannon lide 100 USB | 6000/- |
| HP G 2410 | 7700/- |
| HP G 3110 (Negative) | 14200/- |
| (Warranty 6 Months - 1 Year) | |
| **HARD DISK** | |
| 120 GB SATA | 4700/- |
| 160 GB SATA | 5250/- |
| 250 GB SATA | 5600/- |
| 320 GB SATA | 5800/- |
| (Warranty 1 - 3 years) | |
| **RAM** | |
| DDR I 512 MB | 2500/- |
| DDR II 512 MB | 1200/- |
| DDR II 1 GB | 1500/- |
| DDR II 2 GB | 2700/- |
| (Warranty 1 - 3 years) | |
| **SUB WOOFER** | |
| Creative 2.1 SBS | 2750/- |
| Microlab M 280 | 3400/- |
| Creative 5.1 SBS | 7250/- |
| Microlab 5.1 | 5750/- |

MUSIC WORLD & COMPUTERS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.